# மறக்குடி மாண்பு

( ஓரங்க நாடகங்கள் )

நா. சிவபாதசுந்தரனார்

கலைச்செல்வி வெளியீடு
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மறக்குடி மாண்பு

(இலக்கிய நாடகங்கள்)

★

ஆசிரியர்:
தொல்புரக் கிழார்
புலவர்: நா. சிவபாதசுந்தரனுர்.

★

கலைச்செல்வி வெளியீடு
சுன்ஞகம்
கந்தரோடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: அக்டோபர், 1963

முழு உரிமையும் ஆசிரியருக்கு

விலை ரூபா 1 ௫௦

## ஆசிரியரின் பிற நூல்கள்


பாரதிச் சுடர்
மொழியுணர்ச்சி
காந்திய நோக்கு
சர்வோதயம்
சத்திய சரிதை
கண்ணகி கற்பு
பழந்தமிழர் திணைத்திறன் (அச்சில்)

எனது
தமிழ் வாழ்வில்
முதல் ஆசானு யிருந்த
சித்தாந்த சாகரம், பண்டிதமணி
**திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கட்கு**
இந் நாடக நூலைக்
**காணிக்கை**
ஆக்குகின்றேன்.

—கா. சிவபாதசுந்தரன்.

யாழ்ப்பாணம்
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**திரு. சி. ஸ்ரீநிவாசன் எம். ஏ.**
**(தலைவர், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்)**

*புலவர் நா. சிவபாதசுந்தரம்* எழுதிய ஓரங்க நாடகங்களுக்கு அணிந்துரை எழுதுவது எனக்கு மிகத் திருப்தியைத் தருகிறது. தமிழில் இவ்வித நாடகங்கள் அதிகமாக இல்லை. கீழ்வகுப்பு மாணவர்கள் நடிப்பதற் கென்றே நாடகங்களாக ஆசிரியர் இவற்றை அமைத்திருக் கின்றார். பழைய தமிழ் நூல்களிலிருந்து சந்தர்ப்பங்களைத் தேர்ந்து எடுத்து அவைகளைச் சிறந்த முறையில் நாடகங் களாக அவர் உருவாக்கியுள்ளார். சங்கநூல்களிலிருந்த தமிழர் பண்புக்குச் சிறப்பை விளைவிக்கும் குணங்களை அவர் தேடி இச்சிறு நாடகங்களின் பாத்திரங்கள் மூல மாகவும், கதைப் போக்கின் மூலமாகவும் தெளிவுபடுத்தி யிருக்கின்றார்.

நாடகங்களில் கையாளப்பட்ட நடை மிகச் சுலப மாகவும், எளிதில் விளங்கக்கூடியதாகவு மிருக்கின்றது. பொதுவாக எட்டுத்தொகை நூல்களே ஆசிரியருக்கு அதிக மான சந்தர்ப்பங்களை அளித்திருக்கின்றன. "மறக்குடி மாண்பு" புறநானூற்றுப் பாட்டு ஒன்றை மிகச் சிறப்பா கச் சித்திரிக்கின்றது. அதில் வரும் பாத்திரங்களில் பைரவியும் சின்னச்சிங்கனும் மிக அழகாகத் திகழ்கின்றனர். பைரவியின் மறக்குடி மகளிர் வீரம் மிகச் சிறப்பாகத் தீட் டப்பட்டிருக்கின்றது. "நற்றமிழ்க் காவலன்" பழைய காலத்தில் அரசர்கள் எவ்வாறு தமிழைக் காத்தனர், எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு புலவர்களை ஆதரித்தனர் என்பனவற்றை விளக்குகிறது. மரணதாகம் வாட்டியபொழுதும் தண்ணீர் அருந்தாமல் மரணத்தின்மூலம் சுவர்க்கம் அடையும் மான வீர சேர அரசனுடைய நாடகம் என் மனதைத் தொட்டுவிட்டது. இச்சிறு நாடகம் கடைசிவரையில் எங்கள் சிந்தனையை எழுப்பி, முடிவில் சேரனுடைய வீரத்தில் அச்சிந்தனையை ஆழ்த்திவிடுகின்றது. பழைய மன்னர்களின் நற்குணங்கள், பழந் தமிழரின் உணர்ச்சிகள், சிந்தனைகள், அவர்களின் பண்புகள் எல்லாவற்றையும் இச்சிறு நாடகங்கள் எங்களுக்குத் தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றன. "இல் இன்பம்" இல்லற வாழ்க்கையின் சிறப்புகளைக் காட்டுகின்றது. "காதல்" என்னும் சிறு நாடகம் பழந் தமிழரின் கற்பொழுக்கத்தைச் சித்திரிக்கின்றது. இந்நாடகங்கள், படிப்பவர்களை மூலங்களைப் படிக்கும்படி கட்டாயம் ஏவும்.

ஆசிரியரின் நாடகங்களை நடித்தால் அவைகளின் சுவை சிறந்து விளங்கும். இவ்வாசிரியரின் நூலை ஆதரித்து இவரை மேன்மேலும் எழுத ஊக்குவிப்பது தமிழ் வளர்க்கும் பொதுமக்களின் பெருங் கடனாகும். சமூகத்தின் ஆதரவே தற்காலத்தில் எழுத்தாளனுக்கு ஊக்கம்தர முடியும். இவ்வாசிரியனின் சிறந்த படைப்புகள் இன்னும் பலவற்றை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகமாக இந்நூல் மிகவும் பயனளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

—சீ. ஸ்ரீநிவாசன்.

# முன்னுரை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் தமிழ் கற்குங்கால் பழந் தமிழறிஞர்களின் சிந்தனைச் செல்வங்களை இன்றைய தமிழ்மக்கள் பெரிதும் அறியும் வாய்ப்பில்லையே என்ற கவலை நெஞ்சை அரித்துக்கொண் டிருந்தது. அந்தக் கவலையை இன்றைய தமிழறிஞர்கள் பல உரைநூல்கள் எழுதி அகற்றிவிட்டார்கள். அதில் என் பணியாக "மறக்குடி மாண்பு" என்ற இலக்கிய நாடக நூலைத் தமிழுலகுக்குக் கொடுக்க இறையருள் கிடைத்திருக்கிறது.

சங்கச் சான்றோர்களின் கருத்துக்களை வைத்து இந்த நாடகநூல் எழுதியதால் எனக்கு ஒரு பெருமையும் இல்லை. அக்கருத்துக்களைச் சிந்தித்து ஓரங்கமாகவும், ஈரங்கமாகவும் நாடகவமைப்பில் யாத்தவொன்றே எனக்குரியது. அதைத் தமிழுலகம் கணிக்கும் என்றே கருதுகின்றேன்.

இந்த நாடகங்களின இயல்களைப்பற்றி நான் அதிகம் கூற விரும்பவில்லை. இதனைக் கற்போர் பழந்தமிழ் நூல்களைப் படிக்கவேண்டும்; பொருளிலக்கணம் கற்கவேண்டும் என்ற ஆர்வம் கொள்ளார்கள். பழந்தமிழ் அறிஞர்களின் சிந்தையிற் செழித்த வீரம், மானம், கொடை, அறிவு, காதல் என்பவைகளைப்பற்றிய கருத்துக்களைச் சிறிது உணர்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

நான் கற்பிக்கும் மகாஜனக் கல்லூரியில் சில விழாக்களையொட்டி ஆங்கிலத்தில் ஒற்றையங்க நாடகம் நடிப்பார்கள். இப்படியான நாடகங்கள் தமிழி லில்லை என்று நான் ஏங்குவதுண்டு; தமிழ் மாணவர்கள் காண்போர்க்கும் கேட்போர்க்கும் விளங்காத மொழியில் நாடகம் நடிக்கின்றார்களே; என்னே! இவர்கள் காணும் பெருமை. ஓரங்க நாடக நூல்கள் தமிழில் அதிகமில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையே; அதுவும் இலக்கிய நாடகங்களில்லையே; என்று எண்ணிக்கொண்டிருக்கையில் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் தமிழில் ஒரு நாடகம் நிகழ்த்தும் வாய்ப்பொன்றை எனக்குத் தந்தார். அதை வைத்துக்கொண்டு "மறக்குடி மாண்பு" என்ற நாடகத்தை அரங்கேற்றினேன். அதைக் கண்ணுற்ற விருந்தினர்களும் பெரியோர்களும் பாராட்டினர். அப்பாராட்டின் எழுச்சியால் பல நாடகங்களை எழுதி முடித்தேன். நாடகங்கள் எழுதிப் பல நாட்களாயின.

ஒரு நாள் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களை எழுச்சியுடன் வாழவைக்கும்முகமாகத் தமிழ்ப்பணியாற்றிவரும் 'கலைச்செல்வி' ஆசிரியர் சி சரவணபவன் B. A. (சிற்பி) அவர்களோடு உரையாடுங்கால் பல கருத்துச்செய்திகளுக்குள் நான் எழுதிவைத்திருக்கும் இலக்கிய நாடகங்களை உரைத்துவிட்டேன். இந்நாடகங்கள் வெளிவருதல் நன்று என்றார். நூலும் வெளிவந்துவிட்டது. சிற்பி என்றது அவருக்குச் சாலும்போலும். அவர் இவ்வாறு இலைமறை காய்போல ஈழத்தில் பலவகையில் தமிழ்த்தொண்டு செய்துவருகின்றார். அவரின உள்ளமும் உரனும் வாழ்க! வெல்க!!

இந்நூலைப் படித்து அணிந்துரை தந்த திரு. ஸ்ரீநிவாசன் M. A. அவர்களுக்கும், நூலை அச்சிட்டுதவிய சைவப் பிரகாச அச்சகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றி. நற்றமிழ் நாடோறும் நானிலத்தில் நலம் பெறுவதாக! வணக்கம்.

தமிழ்நிலை,
தொல்புரம், சுழிபுரம்,
28-10-63.

இங்ஙனம்,
*நா. சிவபாதசுந்தரன்.*



# பதிப்புரை

பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கவும் அவற்றைப் பற்றி அறியவும் இக்கால வாசகர்கள் பலர் விரும்புகின்றார்கள். இந்த இலக்கியம் கூறும் செய்திகளை இனிமையும் எளிமையும் சுவையும் கலந்த புதுமையான முறையில் எடுத்துச் சொல்லும் முயற்சிகள் சில அறிஞர்களால் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன இத்தகைய ஓர் அரிய முயற்சியில் மலர்ந்ததுதான் "மறக்குடி மாண்பு". பழைய இலக்கியங்களில் பற்றும் தேர்ச்சியுமுடைய புலவர் நா. சிவபாதசுந்தரனார். இலக்கிய நிகழ்ச்சிகளை வைத்து நாடகங்களை ஆக்கியிருக்கிறார். படித்துச் சுவைப்பதற்கும் நடித்து ரசிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ள இந் நாடகங்கள் பாடசாலை மாணவர்கட்கும் மற்றையோர்க்கும் பெரு விருந்தாயமையும் என நம்புகின்றோம். இந் நூலை வெளியிடுவதற்கு வாய்ப்பளித்த புலவர் அவர்கட்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். இந் நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு. ஸ்ரீநிவாசன் M. A., இலங்கை எழுத்தாளர் சங்கத் தலைவர். மேனாட்டு இலக்கியங்களையும் கீழ் நாட்டு இலக்கியங்களையும் ஒப்புநோக்கிப் படிப்பவர். அவருக்கும் எமது நன்றியைச் செலுத்துகின்றோம். இந் நூலை நல்ல முறையில் அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் சைவப் பிரகாச அச்சுயந்திரசாலையினருக்கும் எமது நன்றி உரியது. பண்டிதமணி அவர்களின் படத்தை உதவிய திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கட்கும், அதை அச்சிட்டுதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்க்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

கந்தரோடை,
சுன்னாகம்,
27-10-63.

நிர்வாகி,
"கலைச்செல்வி".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மறக்குடி மாண்பு | ... 1 |
| 2. | நற்றமிழ்க் காவலன் | ... 12 |
| 3. | மானமரணம் | ... 25 |
| 4. | பறம்பு மன்னன் | ... 38 |
| 5. | பொருளும் கலையும் | ... 51 |
| 6. | கருத்தும் கருமமும் | ... 70 |
| 7. | இல் இன்பம் | ... 78 |
| 8. | காதல் | ... 88 |
| 9. | இன்பப் பிரிவு | ... 97 |
| 10. | உணர்வும் உறவும் | ... 105 |


# 1. மறக்குடி மாண்பு

இடம்:-மறக்குடி மனை.

கூத்தர்கள்:-கானவன்; பைரவி;
சின்னச் சிங்கன்; கிழவி.

[கானவன் தன் மனையில் அம்புக்கட்டுகளைத் தூக்கிப் போட்டுக்கொண்டிருக்கத் திரை திறத்தல்]

கானவன்:- அரத்தைக் காணேமே............ சின்னச் சிங்கம்......... அடேய்! சின்னச்சிங்கம்!!...... அடேய் சின்னச் சிங்கா!!!..............

சி, சிங்கம்;- என்னப்பா? சின்னச்சிங்கம்! சின்னச் சிங்கம்!! என்கிறீர்களே? எனக்கென்ன வில் வளைக்கத் தெரியாதா? நாண பூட்டத் தெரியாதா? அதோ புலிக்குட்டி ஓடுதே.

[வில் வளைத்து அம்பு தொடுத்தல் –
தகப்பன் எழுந்து பார்த்தல்.]

கானவன்:- என் கண்ணே! ஆண்பிள்ளைச் சிங்கமடா! பெரிய சிங்கனடா!!

[மீண்டும் அம்பு தீட்டுதல்; பைரவி நீர்மொண்டு வருதல்,]

பைரவி:- என்னங்கோ வழியிலே யாரோ ஒரு பூனைக் குட்டியை எய்து இரத்தம் தண்ணீர் மாதிரி ஓடியிருக்கிறதே.

கானவன்:- ஓ! அதுவா!! உன் மகனின் விற் பயிற்சி தான் அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிங்கம்:— ஆத்தாள்! ஆத்தாள்!! எப்படி நான் இன்றைக்கு ஒரு புலிக்குட்டியை எய்து வீழ்த்தி விட்டேன். ஒரு முத்தங்கொடு.

பைரவி:— அடே! புலிக்குப்பிறந்த பூனையடா, நீ! சீ! வெட்கமில்லை? புலிக்குட்டிக்கும் பூனைக் குட்டிக்கும் இன்னுமா வித்தியாசம் தெரிய வில்லை;

சி. சிங்கம்:— இல்லை, ஆத்தாள் புலிக்குட்டியைத்தான் எய்தேன்.

கானவன்:— அடி! பிள்ளையின் உற்சாகத்தைக் கெடுக்காதே, சும்மா புலிக்குட்டி என்றுதான் சொல்லேன்.

பைரவி:— அடே! கண்ணா! உங்கள் அப்பா இப்படி நல்ல ஊக்கம் தருவார். அவர் சொல்லைக் கேள். அதோ ஓர் எலி ஓடுகின்றது. அதை யும் எய்ய வேண்டியது தானே.

சி. சிங்கம்:— (தாழ்ந்த குரலில்)

அப்பா! ஆத்தாள் என்னை அற்பமாகப் பேசு கிறாள்.

கானவன்:— கண்ணே அழாதே (தன் பக்கத்தில் அணைத்து) வெற்றி தோல்வி எங்கள் வாழ் வில் வழக்கம், நாங்கள் எதை நாடிச் செய் தாலும் குறிக்கோள்தான் பெரிது. வில் எடுத் தால் உன்போன்ற வில்வீரனோடுதான் போர் செய்தல் வேண்டும்! ஒரு முயற்குட்டியை எய்து வீழ்த்துவதிலும், ஒரு புலிக்குட்டியை எய்து குறி தவறினும் அதில் குற்றமில்லை; ஏன்?



முயலின் வீரத்திலும் புலியின் வீரம் பெரி தல்லவா? எப்பொழுதும் வீரம், ஆண்மை, நீதி என்பவைகள்தான் எங்கள் மறக்குடியின் மாற்றுவிடா மாணிக்கங்கள் (தோளில் தட்டி) மகனே! நீ ஒருபோதும் வெற்றி தோல்வி பாராதே, முயற்குட்டியின் முதுகை முறிப்பதி லும் பார்க்க ஒரு சிங்கக்குட்டியின் [illegible] நறுக்கி எறிதல் நல்லதல்லவா? ஆகையால் சிங்கம்போன்ற வீரர்களோடு சண்டை செய்து இறக்க வேண்டும்.

சி. சிங்கன்:— (மிக உற்சாகத்தோடு)

அப்பா! அப்படியா! புலிக்குட்டியையல்ல; சினந்து வாயைப்பிளந்து நிற்கும் சிங்கத்தை என் வில்லாற் கொன்று [illegible] காட்டுவேன். இதோ! பார்.

[சிங்கன் போதல்.]

கானவன்:— அடே! என் பிள்ளை நீ தானடா

[முரசொலி கேட்கிறது.]

போர் ......... பைரவி போர்! ......... பைரவி போர்!!

[நாடியில் கைவைத்துச் சிறுக நகைத்து.]

பைரவி;— பலே! என் ஆண் படைச் சிங்கமே! இன் னுமா புறப்படவில்லை. ஈ...ம்; என்னங்க; சின்னச் சிங்கனின் அப்பனல்லவா நீங்கள்.

[என்று நகையாடல்.]

கானவன்:— இல்லை; இதோ இறுமாப்புடன் நிற்கும் பைரவியின் கணவன் நான், நெடுந்தேர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழியனின் நிகரற்ற போர் வீரன் யான் (என்று வீரத்துடன் கூறல்).

பைரவி:— என்னங்க (பெருஞ்சிரிப்புடன்) அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பூதம் என்பார்களே அதுபோல் அல்லவா? உங்கள் செய்தி. பக்கத்துப் பலாமரத்தின் கட்டிய முரசில் காற்றால் அலைப்புண்ட கிளைகள் அடிக்க அதிலிருந்து வந்த ஓசை உங்களுக்கு உதிரம் பாயும் யுத்த முரசு ஒலியாக முடிந்துவிட்டது. நீங்கள் பெரிய யுத்தவீரன் என்பது எனக்குத் தெரியாதா? அன்று வரிப்புலியை வரிசிலையால் வதைத்து, அதன் வளைந்த நகத்தை வீர நகைப்போடு எடுத்தபோது முல்லைமலர்ச் செடியருகே நின்று யான் ...... செய்த குறுநகையில்.

[சற்று பேச்சை நிறுத்தி நாணத்துடன் நிற்றல்.]

கானவன்:—என் உடம்பெல்லாம் யுத்தம்! யுத்தம்! என்று தினவெடுக்கின்றது. பக்கத்து இருக்கும் பனிமலையின் உச்சியில் ஏறிக் கீழே உருண்டால்தான் உடம்பின் தினவு தீரும்போலிருக்கிறது. சரி, கொல்லைப்புறம் போய் வருகிறேன்.

[போதல்]

பைரவி:—சரி போங்கள், (வழி மறித்து) ஆனால்; மலையின்மேல்மட்டும் ஏறி விழுந்துருண்டு போய்விடாதீர்கள்.

கிழவி:—(மறக்கிழவி வருதல்) அடி பைரவி,



பைரவி:—என்ன பாட்டி வாருங்கோ! ஊரில் ஏதாவது விசேட முண்டோ?

கிழவி:—உனக்கு இன்னும் அது தெரியாதா? எங்கே உன் கணவன்? மகன் எங்கே?

பைரவி:—என் மகனா? உன் கேள்வி ஒரு புதுமையாக இருக்கின்றதே; நீயும் ஒரு மறக்குடிப் பெண். என் மகன் எங்கு சென்றானோ நான் அறியேன். சிங்கத்தையோ சிங்கம்போன்ற வீரர்களுடைய போர்முனையையோ நாடிப் போயிருப்பான். அவன் எனக்குரியவன் அல்லன்; விரி சூலம் ஏந்திய வீரக்கொற்றவைக்கே உரியவன். (வயிற்றைக் காட்டி) பாட்டி! அச்சிங்கம் இருந்த குகை இதோ! பார்.

கிழவி:—ஆமாம்; அது கிடக்கட்டும். மறக்குடியின் மங்கல நாள் வந்துவிட்டதாம். நீ அறியவில்லையா?

பைரவி:—என்ன பாட்டி! மங்கலநாளென்றால்........ .......போரா?

கிழவி:—ஆம் போர்தான். வேற்றுநாட்டுப் படை எங்கள் நாட்டை நோக்கி வருகின்றதாம்; என் மகனின் செய்தியை அறியவேண்டும்; போய் வருகிறேன்.

பைரவி:—சரி; பாட்டி வாருங்கள்.

[கிழவி போதல்; கானவன் வருதல்]

கானவன்:—பைரவி, போர், போர், தொடங்கிவிட்டதாம்; அதோ கேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்:—இந் நாட்டில் போர் நடக்கப்போகிறது. குழந்தைகள், பெண்கள், அந்தணர்கள், நோயாளர், பிதிர்கடன் செய்யும் அறிவறிந்த மக்களைப் பெருதோர் எல்லோரும் தங்கள் பாதுகாப்பை அடையுங்கள்.

[இது புறத்தில் இருந்து ஒரு குரல்போலக் கூறல்]

கானவன்:—கேட்டாயா பைரவி! இதுவும் பலாமரத்து முரசொலியா? இல்லை, நிச்சயமாகப் போர் தான்.

[போருக்கு ஆயத்தங்கள் செய்தல். பைரவி கொற்றவையைப் பணிதற்குரிய ஆயத்தம் செய்தல்]

பைரவி:—நாத! நீங்கள் நிமித்தம் பார்க்கவில்லையா?

கானவன்:—பைரவி! இது என்ன கேள்வி? நீ என்னை அறியாய். இந்தக் கொற்றவையே வந்து என் முன் "இது நல்ல காலமல்ல" என்று அறைந்தாலும் நான் போர்முகம் போகாது விடேன். என்னைப்போன்ற வீரர்களுக்கு விழி விசேடமும் வேண்டுமா? நாட்டை நக்கார் நலிய வாட்டும்போது நல்ல சகுனம் நாடுதல் நல்லதல்ல.

பைரவி:—ஆம், உண்மை; வாருங்கள் கொற்றவையைப் பணிவோம்.

[இருவரும் கொற்றவையைப் பணிந்தெழல்; பைரவி கையிற் குங்குமத்துடன் வந்து கானவன் நெற்றியில் இட்டுக் கன்னங்களைத் தடவி]

பைரவி:—என் ஐயனே! என் வீர வாழ்வே!

[ஆத்தாள் வெற்றி! ஆத்தாள் வெற்றி!! என்ற மகனின் குரலொலி கேட்டல்]



இதோ! வீரத்தெய்வத்தின் வெற்றிக் குரல் கேட்டது; நல்ல விரிச்சி சென்று வாருங்கள்.

[கானவன் போதல்; மைந்தன் வருதல்]

சி. சிங்கன்:—ஆத்தாள்! ஆத்தாள்!! நான் எய்து கொன்ற சிங்கத்தை அதோ வீட்டின் தலைவாசலிற் போட்டிருக்கின்றேன். வா, ஆத்தாள் காட்டுகிறேன்.

[இருவரும் சென்று பார்த்தல்]

பைரவி:—என் கண்ணே, நீ கெட்டிக்காரன்.

சி. சிங்கன்:—அப்பா எங்கே? ஆத்தாள்

பைரவி:—அப்பாவா?

வீரத் திருநாளும் வந்ததேயடா—மனம்
வீரக் களிப்பில் விளையாடுதேயடா.

சிங்கா! எங்கள் நாட்டில் இன்று போர் நடக்கிறது. இது மூன்ருவது முறையாக நடக்கும் போர். முதற்போரிலே உன் பாட்டன் முனைமுகம் நின்று விழுப்புண்பட்டு வீழ்ந்தான். இரண்டாம் முறை நடந்த யுததத்தில் உன் மாமன்; என் அண்ணன் வீரக்கல் நாட்டும் வியன்நிலை கண்டான். இன்றைய போருக்கு உன் அப்பா உருத்த சிலையுடன் உழுவைப் போல் சென்றிருக்கிருர்; வெற்றியுடன் வருவார்.

[கதவு தட்டும் சத்தம்]

சி. சிங்கன்:—ஆத்தாள்! யாரோ கதவைத் தட்டுகிருர்களே; பார்த்து வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஓலையைத் தாயிடம் காட்டி]

இதோ பார் ஆத்தாள்; இவ்வோலையை யாரோ தந்துவிட்டுப் போகிறார்கள்; ஆத்தாள் படி. பார்ப்போம்.

[கடிதம்]

எங்கள் மதிப்புக்குரிய வீரப் பைரவி! என் வீரப் பிரசையாய் விளங்கியவனும், உன் வீரக் கணவனுமாகிய கானவனைக்

[மகன் இடைமறித்து எங்கள் அப்பாவையா என்று கேட்டல்]

கொற்றவை கோதிலா மலர்மாலை சூட்டி வீர சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டாள். அவனது ஆண்மையமைந்த அரிய வீரக்கல் என் அத்தாணிமண்டபத்தின் பக்கலில் வீரச் சோலையில் நாட்டப்படுகிறது.

இங்ஙனம்,
நெடுந்தேர்ச் செழியன்.

பைரவி:— (வீரமும் சோகமும் கலந்த குரலில்) ஆகா! என் கணவனும் மடிந்தான். இனி என் பங்கில் நின்று நாட்டுக்காக நாடார் நடுங்கப் போர் செய்ய யாருமில்லையே.

சி. சிங்கன்:—ஏன் ஆத்தாள்! நானில்லையா? நான் ஆண்மகன் அல்லவா?

பைரவி:—ஆம்; என் கையில் வெண்ணெய் இருக்கிறது. எனக்காக என் நாட்டுக்காகப் போர் செய்ய இதோ என் கண்மணி இருக்கிறது! கையில் மாணிக்கம் இருக்கிறது.



அப்பா! என் மைந்தா! எங்கள் வாழ்வே! உன் அப்பா ஊண் உண்ண உருத்துவந்த அம்புக்குத் தன் உரனுடைய மார்பை உவந்தளித்து விண் புகுந்து விடிவிலா வீரச்சிலையை விரியுலகில் பெற்றார், மாற்றார் வலி மிகுந்து எங்கள் மண்ணில் மடியாது மார்புகாட்டி மா போர் செய்கின்றார்கள். நீ எங்கள் மண் கவர மனங்கொண்ட மாற்றாரை மடியச்செய்; இது உன் கடன். இதோ வா, எண்ணெய் பூசுகின்றேன்; பூச்சூடுகின்றேன். ஒரு புனித வாள் ஒச்சத்தருகிறேன்.

[மகனை அழைத்து மேற் சொன்னவாறு செய்தல்; தாய் மகனைப்பார்த்து]

அப்பா! மகனே! மாசிங்கா! மாற்றார் மடிந்தார் என்று கூறு.

[தத்தம் வாள்களை உயர்த்திக்கொண்டு தாயும் மகனுமாகக் கூறல்.]

மாற்றான் மடிந்தான்! மாற்றான் மடிந்தான்!!

பைரவி:— என் கண்ணே! நான் பெற்ற செல்வமே!! உன் தோள்கள் பூரிக்கவில்லையா? உன் பாட்டனின் உயர்கல் அதோ தெரிகிறது. உன் மாமாவின் மாபெரும் கல் அதன் பக்கலில் அமைந்திருக்கிறது இதோ! என் கணவனின் - உன் அப்பாவின் ஆனந்தச்சிலை அரிய வீரர்கள் அழகாக அமைக்கின்றார்கள். நீ அஞ்சாது பகைவன் தலையை அறுத்தெறி, நாட்டை நடுக்கிய அரசனை நாணமுறச் செய்து, மன்னன் மனம்போல் மலர்மாலை சூட்டிவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முரசு கேட்டல்) அப்பா! ஆண் சிங்கா? முரசு மும்மரமாகக் கேட்கிறது. விரைந்து செல்! விரைந்து செல்.!

சி. சிங்கன்:— இதோ பார்! வெற்றி வரிசையோடு வருகின்றேன். வெல்க தமிழ்நாடு! வெற்றி அல்லது வீரசுவர்க்கம்.

[மகன் போகப் பைரவி வீட்டுப்பொருட்களை ஒழுங்கு பண்ணுதல்; அப்போது கிழவி வருதல்.]

கிழவி:— எடி: பிள்ளை பைரவி! போர்க்களச் செய்தி கேட்டாயா?

பைரவி:— இல்லை பாட்டி! வேற்று நாட்டார் வெந்து மடிந்தார்களா?

கிழவி;— அது தான் இன்னும் இல்லை. யாரோ சொன்னார்கள். உன் மகன் ... ... ... (என்று இழுத்தல்.)

பைரவி:— என்ன பாட்டி! ஏன் இழுத்துப் பேசுகின்றீர்கள். என் மகனைப்பற்றிய செய்தியென்ன? தைரியமாகச் சொல்லுங்கள்.

கிழவி— வேறொன்றுமில்லை. எனக்கு அச்சொல்லைக் கேட்கப் பொறுக்கவில்லை. உன் மகன் முதுகு காட்டி ஓடி முதுகிற் புண்பட்டு வீழ்ந்து கிடக்கின்றானாம்.

பைரவி:— [ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்து] ஆ! என் மகனா! என் மகனா விழுப்புண்படாது வீழ்ந்தான். இல்லை! இல்லை!! இது பொய்ச் செய்தி; நான் நம்பேன்!! பாட்டி! என் மறக்குடியின் மாண்பு இம்மானிலம் கேட்டது. என் மைந்தனின் வாயை இப்ப மணந்தாலும் என் முலையின் பால் மணக்கும். என் வீர முலைப் பாலை வீறிட்டு அழாது குடித்த வீரச்சிங்கனா மார்பிலும் முகத்திலும் புண்படாது விழுந்தான்? இல்லை! இல்லை!! அவன் பாட்டனின் பண்பு! அவன் மாமனின் மாண்பு! ஏன்? அவன் தந்தையின் தகுதி; என் மகனில் ஏற்படாது போகுமா? குடிமைக் குணம் குன்றிப் போய்விடுமா? என் குடிக்குணம் குன்றவிட்டுக் குறியில்லாது வீழ்ந்துகிடப்பானேல், இதோ இவ்வாளால் அவன் பால் உண்ட இம்முலையை வெட்டி எறிந்துவிடுகிறேன். என் குடியின் அருமை என்னே! கடும்போரில் கண்ணிமைத்துக் கணிப்பிழந்தோர் ஒருவருமில்லை! முழங்கு போரில் முடிகுலைந்து மூச்சிழந்தோர் ஒருவருமில்லை! முகத்திலும் மார்பிலும் முடிவில்லாத புண்கள் பெற்று முழங்கும் வீரத்தில் விளங்கிய மறவர் குடியிலா இத்தகு மைந்தன் பிறந்தான்! இதோ! ஆராய்கின்றேன். பொலந்தார் மன்னர் மாண்பிலும் மறக்குடியின் மாண்பு இதோ என்மூலம் பரவட்டும்.



[என்று வாளை விசுக்கிக்கொண்டு போதல்]

திரை வீழ்தல்.

மறக்குடி மாண்பு முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. நற்றமிழ்க் காவலன்

**இடம்:-** அரசர் அரண்மனை.

**கூத்தர்கள்:-** அரசன்; புலவர்; மந்திரி; பணியாளன், காவல் வீரன்.

**காட்சி — 1.**

[காலை முரசு அதிரல், திரை யிழுத்தல், மந்திரியுடன் அரசன் வீற்றிருத்தல், காவல் வீரன் வருதல்]

காவல் வீரன்:—அரசே! வாழிய பெரிதே! எங்கள் திறையாளர் வாயிலில் வந்து குவிந்து நிற்கின்றார்கள்.

அரசன்;—காவல் வீரரே! அவர்களை அங்கேயே அமர்ந்திருக்கச் செய்யுங்கள்; இது சமயமல்ல.

காவல் வீரன்;—அரசே! அப்படியாகுக; நான் வருகின்றேன்.

[காவல் வீரன் போதல்]

அரசன்;—மந்திரி! இன்று நம் ஒற்றர்கள் நம் நாட்டு எல்லையில் பகைவர் நாட்டு ஒற்றர்கள் உலாவுவதாக அறிவித்திருக்கின்றார்கள்.

மந்திரி:—அப்படியா; அரசே! அப்படியானால் ..........

அரசன்:—அப்படியானால் என்ன? நாம் போர் முறைக்கு வேண்டிய ஆயத்தம் செய்யவேண்டியதே.



மந்திரி:—ஆம், அரசே! ஆயத்தம் செய்து முன் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

அரசன்:—மந்திரி! முதற்கண் முரசு வழிபாடு செய்ய வேண்டும். அதற்கு வேண்டியவற்றைச் செய்க.

மந்திரி:—அப்படியாகுக; அரசே! அதுவரையும் நாம் இன்று செய்யும் மந்திரத்தின் நிகழ்ச்சி நிரலைப் பார்வையிடுங்கள்; நான் விரைந்து வருகின்றேன்.

[மந்திரி போதல்; அரசன் ஓலையைப் புரட்டிப் பார்த்தல்; சற்றுப் பொறுத்து மந்திரி வருதல்]

அரசே வாழ்க! நின் கொற்றம்; வயவர் அட்டமங்கலத்துடன் பூசைக்குரிய பொருள்களோடு முரசெடுத்து வாயிலில் தங்கள் வருகையை நோக்கி நிற்கின்றார்கள்.

அரசன்:—அப்படியா? நன்று! நன்று!! இதோ எழுந்தேன்.

[அரசன் எழுந்து போதல்; மங்கல ஒலி எழுப்பல்; திரையை வீழ்த்தி முரசுக்கட்டில் அமைந்த அரண்மனைக் காட்சி அமைத்தல் வேண்டும். அதன்பின் திரை இழுத்தல். அப்போது புலவர் ஒருவர் தள்ளாடி வருதல்]

**காட்சி — 2.**

புலவர்:—அரசனைக் காணேம்; மந்திரி முதலியோரில் ஒருவரையாவது காணேம்; இங்கு இன்று என்ன விசேடம்? அரண்மனையைச் சுற்றிப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[புலவர் அங்கும் இங்கும் உலாவிவிட்டு முரசுக்கட்டில் உள்ள இடம்போய் அதைக் கையால் தொட்டுப் புரட்டிப் பார்த்தல், பலமுறை தொட்டுப் பிடித்துப் பார்த்தல்]

ஆ! என்ன அழகான அறை; இதில் உள்ள கட்டிலின் இனிய அமைப்பு என்னே! இவ் அரண் மனையில் இவ் அறை சிறப்புடையது போலும், இதற்கு என்ன சிறப்பு உண்டு? எண்ணெயின் நுரையை வாரியிட்டதுபோல் அவ்வளவு மென்மையாகவும் வெண்மையாகவும் இம்மெத்தை இருக்கிறதே.

[அம் மெத்தையைக் கையாற்றடவி]

ஆ! இப் பஞ்சணையில் படுத்தால் எவ்வளவு இன்பமாய் இருக்கும்; வழிநடையால் வந்த களைப்பும் தீரும்; படுத்துப் பார்ப்போம்.

[புலவர் ஏறிப்படுத்தல். சற்று நேரம்போகப் புலவர் குறட்டை இடுதல், சற்று நேரம் பொறுத்து மங்கலவொலி கேட்டல் அரசன் திரையில் தோன்றி]

அரசன்:-நில்லுங்கள்! நில்லுங்கள்!!

[மங்கலவொலி முற்றும் நிற்றல்]

நில்லுங்கள்! அதோ!! முரசுக் கட்டிலில் யாரோ ஒருவன் தூங்குகிறான்; என்ன துணிச்சல்! என் கட்டளை கேட்டபின் உள்ளே வாருங்கள். இதோ! பகைவன் பட்டான்.

[என்று வாளை உருவியவண்ணம் கட்டிலைக் கிட்டல். பின் உற்றுப் பார்த்துவிட்டுச் சிரிப்புடன் வாளை உறையில் இடல்]



சீ! என்ன செய்யத் துணிந்தேன் "எண்ணித் துணிக கருமம்" என்பது எவ்வளவு முழு உண்மை. நான் வாழ்ந்தேன்! நற்றமிழ் வாழ்ந்தது!

[அமைதியான குரலில்]

வீரர்களே! அமைதியாக வாருங்கள்.

[வீரர் திரையின் உள்ளே முரசுடன் நிற்றல்]

நற்றமிழ் அறிந்த நல்லிசைப் புலவர் ஒருவர் மெய்மறந்து உறங்குகின்றார். அவர் மோசிகீரனார் போலும்; அவரின் உடல் முழுவதும் வியர்வை முத்துப்போல் அரும்பி இருக்கின்றது. நைந்து நைந்து கந்தலாய்ப் பல தையல் உடையதான ஆடையும் அவ்வியர்வையால் நனைந்திருக்கின்றது. முரசை இதில் வையுங்கள். அந்த விசிறியை எடுத்துத் தாருங்கள். நானே அப்புலவரின் களைப்பை விசிறியால் வீசித்தீர்ப்பேன். நீங்கள் செல்லுங்கள்.

[மந்திரியைப் பார்த்து]

மந்திரி! பணியாளரிடம் மதுவும், பல சிற்றுண்டிகளும் கொண்டு வரும்படி கட்டளை இடுங்கள். நீரும் சென்று வாரும்.

[எல்லோரும் போதல்; அரசன் விசிறியால் புலவரை விசுக்குதல். சற்றுப் பொறுத்துப் புலவர் திடுக்குற்று எழுதல், அரசன் விசிறியைக் கீழேவிட்டு அடக்கமாய் நின்று]

புலவரே! ஏன் திடுக்குற்று எழுகின்றீர்கள். பொறுங்கள், அவதி வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்:- அ...ர...சே! என்ன செய்தீர்? ஆ! என்னே என்வினை? தவறு!...... பெருந்தவறு......!!

அரசன்:— புலவரே! நான் ஒன்றும் செய்யவில்லையே. நீங்கள் என்ன தவறு செய்துவிட்டீர்கள்? நான் அறிய அப்படி ஒன்றும் நிகழவில்லையே.

புலவர்:— என்ன? ஒன்றும் செய்யவில்லையா? உங் கையில் உள்ள கவரியால் நீங்கள் மெல்லென்ற காற்று என் மேனியில் படியக் காற்றை அசைக்கவில்லையா? என் களைப்பை ஆற்ற வில்லையா?

அரசன்:— ஆன்ற புலவீர்! நான் கவரியுடன் நிற்பதி னலோ இங்ஙனம் கூறுகின்றீர்கள்.

புலவர்:—அரசே! அதோ! மயிற்பீலியுடன் உழிஞை மலர் மாலையோடு கீழே இருப்பது முரசா?

அரசன்:— ஆம்! அதுதான் நான் வழிபடும் வீர முரசு.

புலவர்:— ஆ!...... என்ன? இது அதன் கட்டிலா? வீரமுரசுக்கட்டிலா? வீரத்தெய்வம் வீற்றிருக் கும் முரசுக்கட்டிலிலா நான் படுத்துத் துயின் றேன்? அரசே! இம்முரசின் பெருமை எனக் குத் தெரியும். சில தமிழரசர்கள் தம் நாட்டில் பகைவர்கள் படையெடுக்குங்கால் வரும் பெருந் தீங்கைத் தவிர்ப்பதற்காகத் தம் அரண்மனை யின் நடுவில் ஒரு மரம் வளர்ப்பார்கள். அம் மரம் பகைவர்களால் அவ்வளவு எளிதில் கைப் பற்றக்கூடியதன்று. எவ்வளவு காவல் வைக்க முடியுமோ அவ்வளவு காவலும் உண்டு, அதனல் அம்மரம் "கடிமரம்" எனப்படும்.



அக்கடிமரத்தைப் பகையரசன் வெட்டி வீழ்த் தினல் அந்நாட்டு அரசன் தனக்குத் தோல்வி ஏற்பட்டதாக நினைப்பான். அம் மரத்தை வெட்டிய அரசன் அதைத் தன் நாட்டுக்கு எடுத்துச் சென்று அம்மரத்தால் முரசு செய்து கொள்ளுவான். அம்முரசு "வீரமுரசு" எனப் படும். இத்தகு இயல்பில் வந்த முரசல்லவா இம்முரசு? அறமும் அருளும் உணர்ந்து ஆண்மை வளர்க்கும் அரசபண்பில் அமைந்த முரசல்லவா இம்முரசு? இம்முரசில் கொற் றவை என்றும் இனிதிருப்பவள் அல்லவா? இத்தகு முரசு உறையும் கட்டிலிலா நான் படுத் துத் துயின்றேன். இதோ எழுந்தேன்; என் சிறுமை பொறுத்து இச்செம்மை முரசை இச் சேக்கையில் எடுத்து வையுங்கள்! இவ்வையகத் தில் ஆட்சி அருளொடு அமைந்த அறமாக அமைய வாழ்த்தி வையுங்கள்!!

அரசன்:— புலவரே! முரசை எடுத்து வைத்து வணங்குகின்றேன். நீங்கள் அச் சிம்மாசனத் தில் அமருங்கள்.

புலவர்:—அப்படியாகுக.

[புலவர் எழுந்து சிம்மாசனத்தில் இருத்தல்; அரசன் முரசைஎடுத்து முரசுக்கட்டிலில் வைத்து வணங்கிப் புலவருடன் உரையாடல்]

புலவர்:—அரசே! நான் ஒரு மன்னனுனல்......?

அரசன்:— கவரியொடு நிற்பேனே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்;— பின் கடிவாளுடன் நிற்பீர்களா?

அரசன்:— ஆம்; அதற்கு ஐயம் என்ன?

புலவர்:— என்னையும் அவ்விதமே வாளொடு நீவிர் நின்று படுத்தல் பழுதன்றே?

அரசன்;— அப்பப்பா! போதும்!! போதும்!! இஃது என்ன உரை? ஏன் இப்படி இயம்புகிறீர்? என்ன குற்றம்புரிந்தீர்?

புலவர்:— உன் முரசுக்கட்டிலே உன் உறவு பெற்ற உயர் அரசர்களும் உறுதற்கு உள்ளம் நடுங்குவர். கொற்றவையே கோதிலாது கோலமுடன் நின்று காவல் செய்யும் இம்முரசுக் கட்டிலில் நான் கருத்தறியாது கடிதுயில் கொண்டேன். இத்தகு என்னைக் கயவனைக் கணித்தால், அதில் ஒரு களங்கமில்லையே. நின் செய்கை வியப்பினும் வியப்பே!

அரசன்:— புலவரே! தங்கள் உரைகள் என் உள்ளத்தை வருத்துகின்றன. எம் முன்னோர்கள் செய்த நீதியின் நிறையை இன்றல்லவா கண்டேன். நான் செய்த தவத்தின் பேறு இன்றல்லவா தலை எடுத்தது. தமிழ்த் தாயின் தனிக்கோலத்தை இன்றல்லவா தமியேன் இனிது கண்டேன். என் முதல் பிழைத்தது. தங்களை அறியாது என் ஒள்ளிய வாளை ஒய்யென எடுத்து எறியும் வீச்சில் தங்கள் திருமுகத்தில் இருந்து வீசிய தமிழ்க்கலை - தமிழ்த் தாயின் தண்ணொளி என் தடம்வாளைத்



தட்டித்தடுத்தது. ஆ! அருந்தமிழன்றோ என் அவத்தை அழித்துத் தவத்தைத்தந்தது.

[இவ்வார்த்தை முடியுமுன்னரே பணியாளன் சிற்றுண்டியுடன் வந்து நிற்றல். வார்த்தை முடிந்ததும் அரசனுக்குத் தலை தாழ்த்தி]

பணியாளன;— அரசே! வணங்குகின்றேன். மதுவும் சிற்றுண்டியும் கொண்டுவந்துள்ளேன்.

அரசன்:— பணியாளரே! இவைகளை இங்கே வைத்துவிட்டுப் பட்டாடையும் பசும்பொன் மாலையும் கொண்டுவாரும்.

பணியாளன்:—இதோ கொண்டுவருகின்றேன் அரசே!

[பணியாளன் போதல் அரசன் புலவரை நோக்கி]

அரசன்:— புலவரே! மனதுக்கினிய மதுவும் சுவைக்குரிய சிற்றுண்டியும் உள; இவைகளை உண்ணுங்கள்.

புலவர்:— சரி; உண்போம்.

## காட்சி — 3.

[இக் காட்சியில் அரண்மனையின் காட்சி வேறு வகையாக அமைய வேண்டும். இதில் மந்திரி பணியாளர் சந்தித்தல்]

பணியாளன்:- மந்திரிப்பிரபு! வணங்குகின்றேன்.

மந்திரி:— பணியாளரே! என்ன, பட்டாடை பசும்பொன் மாலையுடன் வருகின்றீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளன்:- தங்கள் கட்டளைப்படி சிற்றுண்டியைக் கொண்டு அரசரிடம் கொலு மண்டபம் போய் வைத்தேன். அப்போது அரசர் இவைகளைக் கொண்டுவரும்படி பணித்தார். அதுதான் கொண்டு செல்கின்றேன், ஆ! அம் மனித னுக்கு அரசர் பெருமான் அளிக்கும் மதிப்பு என்னென்பேன்.

மந்திரி:- அம் மனிதர் இன்னும் அரசரைவிட்டுப் போகவில்லையா?

பணியாளன்:- இல்லை பிரபு; அவர்கள் இருவரும் உரையாடும் நிலையைப் பார்த்தால் நீரோடுநீர் கலந்தாற்போல் இருக்கிறதே.

மந்திரி:- ஆகா; அப்படியா? இது போழ்து அரச னிடம் போய்ப்பயனில்லை போலும், இப்படிப் பட்ட மனிதர்கள் அரசரிடம் வந்தால் அரசர் கள் அவர்கள் வந்த நாளை அவர்களுக்காகவே விட்டு அவர்களோடு அளவளாவுதல் இயல்பு தான்.

பணியாளன்:- மந்திரிப்பிரபு! அம்மனிதர் புலவரா? அவருக்கு அரசர் பெருமான் இவ்வளவு மதிப்பு அளிப்பதேன்?

மந்திரி:- பணியாளரே! இவ்வுலகில் இரண்டு பெரிய இயற்கை உண்டு. அவைகளில் ஒன்று செல்வ நிலை. அதாவது இவ்வுலகுப் பொருள்களின் பற்று நிலை. மற்றையது அறிவு நிலை. அதா வது இந்த உலகுப் பொருள்களில் நின்று



தெளிந்தநிலை; இந்த தெளிந்த நிலைதான் உல கில் உயர்ந்த இனிய நிலையாகும். இந்த இனிய நிலையை அடைந்தவர்களைத் தண்டமிழ்நாடு "புலவர்" என்று போற்றுகிறது. இப்படிப்பட்ட புலவர்களை அரசர்கள் கண்டால் எளிதில் விட மாட்டார்கள். பற்றுச் செல்வம் பழுதறப் படைத்த பார் அரசர்கள் முற்றிய திருவுடைப் புலமை மிக்கவர்களைக் கண்டால் பணிதலும், பற்று வைத்தலும், பண்பு பாராட்டுதலும் உண்டு. அப்புலவர்களும் அரசர்களுக்கு இயன் மொழி வாழ்த்து, கடவுள் வாழ்த்து, வாயுறை வாழ்த்து எனப் பலவகை வாழ்த்துக்களை வழங்கி நிற்பர். இப்படியான வாழ்த்துக்களைப் பெற்ற அரசர்கள் பெரும் புகழ் பெறுவர். புலவர்களின் புகழ்ச்சிச் சொற்களைப் பெற்ற அரசர்களையே அரசர் என்று இந்த அருந் தமிழ்நாடு அறையும். ஆனல் இப்புலவர்களின் மதிப்பை அரசர்கள் பெறுதல் அரிதிலும் அரிது. இப்புலவர்கள் இந்தப் பட்டுக்கும் பசும் பொன்னுக்கும் மதிப்பளித்துப் புகழ்பவர்கள் அல்லர். அரசர்களின் உள்ளத்து உயர்வு நோக்கியே உரை பல மொழிவர்.

பணியாளர்:- அப்படியா? பிரபு; இதோ விரைந்து செல்கிறேன், நேரமாய்விட்டது.

மந்திரி:- ஆம்: விரைந்து செல், நானும் அரசரிடம் போகுவதைவிட்டு என் அலுவலகம் நோக்கிப் போகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி — 4

[2-ம் காட்சியில் அமைந்த அரண்மனைக் காட்சி இதில் அமைய வேண்டும். இதில் அரசரும் புலவரும் உரையாடல் முகமாக இருக்கத் திரை திறத்தல். சற்றுப் பொறுத்துப் பணியாளர் பட்டுடன் வந்து பணிதல்.]

பணியாளன்:-வாழிய! எம்கோ! பட்டாடையும் பசும் பொன் மாலையும் கொண்டுவந்தேன். இதில் வைத்திருக்கின்றேன்.

அரசன்:-சரி; நீ செல்வாயாக.

பணியாளன்;-அப்படியே; பெரும.

[அரசன் பட்டாடையையும் பசும்பொன்னையும் எடுத்துக் கொண்டு]

அரசன:-புலவரேறே! இப் பாம்புரி போன்ற பட்டாடையைப் பக்குவமாய் உடுங்கள். இப்பசும் பொன மாலையையும் கழுத்தில் அணியுங்கள். தங்கள் அறிவின் அழகுக்கு இவைகள் அழகு செய்யாவாயினும் என் அவாவின் காரணமாக அணிந்து, அழகுற என்னுடன் இன்தமிழ் இயம்புங்கள். தங்களைப் போன்றவர்கள் வர நாங்கள் இவ்வாறு நல்லணி அணிவித்து நற்றமிழ் கேட்ட நாளன்றோ நாளாகும்.

புலவர்:-அரசே! அப்படியாகுக.

[புலவர் அதில் பட்டாடை உடுத்தும் பசும்பொன்மாலை கழுத்தில் அணிந்து கொண்டும் இருததல். அரசன் முகமலர்ச்சியோடு இருத்தல்].



அரசன்:-புலவோய்! இந்த முரசுக்கட்டில் தாங்கள் படுத்து உறங்கியதால் வாழ்வு பெற்றது. அதில் உறையும் முரசும் உயர்வு பெற்றது. அம்முரசு எனது கொற்றத்தை எடுத்து இயம்பினும் தங்களைப் போன்றவர்கள் எம்போன்றவர்களின் உள்ளப் பண்பை உலகெலாம் உவந்து கேட்க உரைக்கும் ஒரு சொல்லுக்கு ஒவ்வுமோ? ஆதலால் கவரி கொண்டு பணிசெய்தேன். எடுத்த வாளைப் போக்கற்றுப் போகப் புலித்தோல் உறையுள் புகுத்தி உரையிலாது நின்றேன்.

புலவர்;-பெருஞ்சேரல் இரும்பொறையே! நீ நற்றமிழ் முழுதறிந்த நல்லரசனாய் இருக்கின்றாய். ஒள்ளிய வாளால் இவ் இழிவுடலை இரண்டுபட வீழ்த்தும் உரிமை உனக்கு இருந்தும் கடமை தெரிந்தும் கன்னித்தமிழால் உன்நெஞ்சம் நிறைநது கட்டுண்டதாதலின் அதனைச் செய்யாது விடுத்தாய் என்னே உன் நெஞ்சம்! விழுமிய தமிழை விரிவாய் ஆழ்ந்து உணர்ந்த அறிவின் பயனால் நான் இன்னும் இவ்வவனியில் இருக்கின்றேன் நற்றமிழை நாடிய உன் நல் நெஞ்சம் நாளும் நாளும் நற்பயன் அடைக. சேரமானே! அத்துடன் அமைந்தாயா? உன் முழவுத்தோளால், உழுவல் அன்பு உந்த, என்னை அணுகி அயல்நின்று கவரி வீசினையே. அஃது எத்தனைத்து? மண்ணுலகில் மன்னிய புகழுடையோர் உயர்நிலை உலகாம் விண்ணுலகில் விளக்கம் பெற்று இருப்பர் என்ற சான்றோர் உரையை விளங்கக் கேட்ட தன்மையால் அன்றோ. வெற்றித் திலகா! இவ்வாறு

என்னுடன் நடந்துகொண்டாய். உன் ஒழுக்கம் விழுப்பம் பெறுக. உன்போன்ற உயர் தமிழ் உன்னுவோர் உயர்க! இவ்வுலகில் நற்றமிழ் முழுதறிந்த நல்லோர்களை நானிலம் என்றென்றும் ஈன்று நலமடைக!!

[சற்றுப் பொறுத்து]

அரசே! நான் என் மனையை நோக்கி விரைந்து செல்லவேண்டும்; என் சுற்றம்வாட நான் இங்கு இனிதிருத்தல் இனிதல்ல.

அரசன்:-புலவரே! என் செய்வது! தங்களைச் செல்லுங்கள் என்று சொல்ல என்வாய் சோருகின்றது. ஆனல் முறையை மீறமுடியுமா? என் நிறைசேரிக்கு வாருங்கள்; நீங்கள் விரும்பும் பொருள்களை வேண்டியவாறு எடுத்துச் செல்லுங்கள். நானும் வருகிறேன்.

[இருவரும் எழுந்து செல்லல்]

நற்றமிழ்க் காவலன் முற்றிற்று,

---

# 3. மான மரணம்

களம்:-சிறைக்கோட்டம், அரசவை.

கூற்று:-காவலர்கள், மருத்துவர், அமைச்சர், சோழன், சேரன், படைத் தலைவன்.

[திருப்போர்ப்புறம் என்னுமிடத்துச் சேரன் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணுேடு போர் செய்கிறன். சேரன் படைகளெல்லாம் மாண்டு போகின்றன. சோழனும் சேரமானைத் தளையாற் பிணித்து வந்து குடவாயிற் கோட்டத்துச் சிறையில் வைக்கிறன்].

## காட்சி—1

களம்:-சிறைக்கோட்டம்.

கூத்தர்:-பொறையன், சிறைக்காவலர்.

பொறை:-(திடீரென விழித்துக்கொண்டு) ஆ! என்ன! இது எவ்விடம்? இது யாரிடம்? இவ்விடத்து இருக்கும் நான் யார்! நேற்று சோழனேடு செருச்செய்த சேரலாதன் அல்லனே? [விழுப்புண்களைப் பார்க்கிறன்] இவ்விழுப் புண்களைத் தந்தவன் சோழன். வாழட்டும்! நன்கு வாழட்டும்!! இவை என் தோல்வியைத் தோற்றுவிக்கும் சின்னங்களாகட்டும்!!! மலை

யிற் போர் பயின்ற பெருநகர்க்கு மண்ணிற் போரிடும் பழக்கம் பெருகவில்லை; அதனால் தோற்றனர். இல்லை! இல்லை!! தோலாது வானுலகு எய்தினர். அவர்கள் இறக்க நான் இருப்பதா? நன்று! நன்று!! ஆம்; நான் இருப்பது நன்று! நன்று!! குடவாயிற் கோட்டத்துச் சிறை வைத்துக் குலப்பழிதந்த சோழனைக் குணவாயிற் கோட்டத்துச் சிறையில் வைக்காது இறக்க மாட்டேன். விற்பிடித்து அதனால் எழில்பெற்ற என் கைக்கு விலங்கிட்ட சோழனைச் சோர்வின்றிச் செருச்செய்து சோர்கின்றேன். சேர நாட்டுச் சிறையில் (சோர்வாக) என்ன? என் அறியாமை! பகைவனது பாரிய சிறையிற் பதமிழந்து புகுந்த நான், வஞ்சினம் கூறிப் பயனென்ன? நாவரட்சி மிகுகின்றதே. நாவுள் ளிழுக்கின்றதே. தலை சுற்றுகின்றதே. தண்ணீர்! ... ... தண்ணீர்!!

[காவலர் காலடியோசை கேட்டல். அரசன் எட்டிப் பார்த்தல். ஒரு இளையானும் கிழவனும் இருப்பதைக் காணல். அரசன் அவர்களைப் பார்த்து]

பொறை:-நீங்கள் யார்?

காவலர்கள்:-எங்களையா கேட்கின்றீர்? நாம் காவலர்கள்.

பொறை:-காவலர்களா? நன்று. உங்கள் கூற்றின்படி நடப்பீர்களா?

காவலர்கள்:-ஆம்; அதற்கு ஐயம் வேண்டாம்.



பொறையன்:-என்னைக் காக்கவேண்டும் ... ....

இளங்காவலன்.-உம்மைக் காக்காமலா சும்மா இருக்கிறோம்.

பொறையன்:-இல்லை; "நீர்" வேண்டும் "தண்ணீர்" வேண்டும்.

கிழக்காவலன்:-(இரக்கமாக) என்னசாமி! மிக்க தண்ணீர் விடாயா?

இளங்காவலன்;-(உரக்க ஐயா! நாம் காவலர் அதுவும் சிறைக்காவலர். எப்படி நீர் எம்மை ஏவலர் போல் மதிப்பீர்?

பொறையன்:-[நாணுதல்; அங்கும் இங்கும் தள்ளாடி] ஈதென்ன காவலர்களே! கண்ணை மின்னுது; காதை அடைக்குது; நாவும் அசையாதாம். தண்ணீர் தராவிட்டால் என்னுடலைக் காக்கும் காவலில் இருந்து தவறியவராவீர்; இச்சிறைக் கோட்டமும் சிறிதுபோழ்தில் பிணக கோட்டமாய் ஆகும்.

[என்று சொல்லிச் சாய்ந்து விழுதல்]

இளையகாவலன்;-இவர் சொல்வது பொய்யோ மெய்யோ? நம்மைப் பயப்படுத்தித் தண்ணீர் வாங்கிக் குடிக்கப்போகின்றார் போலும்?

கிழக்காவலன்:-தம்பீ! உள்ளே இருப்பவர் யார் என்று உனக்குத் தெரியுமா?

இளையான்:-ஆம்! நன்றாகத் தெரியும். யுத்தக்கைதி! அதுவும் சேரநாட்டுக் கைதி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்காவலன்:—அடே! சேரநாட்டு வேந்தனடா. உண்மையாகவே உளம்விட்டு உரைக்கின்றான் வேந்தன்.

இளங்காவலன்:—அப்பப்பா! எங்கள் கடமை காவல் ஒன்றே; வேண்டியதைக் கொடுத்துக் காவல் செய்யக் கட்டளை பெறவில்லையே? தண்ணீர் கொடுத்தால் ஒருவேளை நம் இரு தலைகளும் போனாலும் போகும்.

கிழவன்:—தம்பீ! எது எப்படியானாலும், இவன் முடிமன்னன். முத்தமிழ் நாட்டின் மூன்றில் ஒரு பங்கைக் காக்கும் முதுவேந்தன். மக்களின் மடியை நீக்கி மானமுடன் காக்கும் மலைநாட்டு மன்னன். தம் தாகம் தாங்காது தண்ணீர்! தண்ணீர்!! என்று தவித்துக் கேட்கையில் நாம் கொடுக்காவிட்டால் நம் பிறப்பு யாதாகும்? இரப்பார்க்கு ஒன்று ஈவதே ஈகை.

இளைய:—உனக்கென்ன? காடு வா என்கிறது. நீ நீதி, நியாயம் பேசுவாய். ஆனால் சட்டம் பேசமாட்டாய்.

கிழவன்:—சட்டத்திற்குப் புறநடை இல்லையா?

இளைய:—இல்லை அப்பா? இல்லை. அப்படியானால் சட்டத்தைத் தூக்கிச் சாக்கடையில் போட வேண்டியதுதான்; அது அரசனாயினுஞ் சரி; சட்டத்தை ஒருவராலும் அசைக்க ஏலாது. சட்டத்தில் மன இரக்கம், அறிவு விளக்கம் எல்லாம் செல்லாது.



கிழவன்:—இரக்கம் இல்லாதவனே! பார் காத்த மன்னன் பாருக்குப் பாரமாய் மங்கிப் படுத்திருப்பதையும் பார்த்துமா மனம் இரங்கவில்லை? எனக்கு ஒரு யோசனை தோன்றுகின்றது. இந்த நிகழ்ச்சியை நானே நம் அரசனுக்கு நேரிற்போய்ச் சொல்லப்போகின்றேன். நீ இவரைப் பார்த்துக்கொண்டு இரு.

இள:—எடா! காவலை விட்டு இங்கு உன்னை யாரடா வரச்சொன்னது? ஏன் வந்தாய்? என்று அரசன் சினந்தால் நீ என்ன செய்வாய்?

கிழவன்:—உடனே சிறைக் காவலை விட்டுவிடுவேன். இதில் சட்டம் என்ன செய்யும்?

இள;—எப்படியும் தாமதியாமல் வந்துவிடு. தனியே இருந்தால் நித்திரை வந்துவிடும்.

## காட்சி — 2.

களம்:— அரசசபை.

கூத்தர்:— சோழன்; அமைச்சன்; படைத் தலைவன்; மருத்துவன்; காவலன்.

[சோழன் படைத்தலைவனைப் பார்த்து]

சோழன்:—படைத்தலைவரே? ஓடோடி வந்து நிற்கும் இவன் யாவன்? ஏன் வந்தான்?

படைத்தலைவன்:—குடவாயிற் கோட்டத்துச் சிறைக் காவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழன்:—காவலை விட்டு ஏன் வந்தாய்? நீ யாரைக் காவல் செய்பவன்?

காவலன்:—(நடுநடுங்கி) வாழ்க வேந்தரே! வாழ்க! நம் சிறையின் உள்ளே இருப்பவர் தண்ணீர்! தண்ணீர்!! என்று தவிக்கிறார் மயங்கிப் படுத்திருக்கின்றார். சொல்லிவிட்டு ஓடிப்போகலாம் என்று ஓடி வந்தேன்.

சோழன்:—நீ நல்லவன்; தக்க சமயத்தில் தகுதியான காரியம் செய்தாய்.

படைத்தலைவன்:—எடா! அங்கே இப்போ யார் இருப்பது?

சிறைக்காவலன்:—அங்கே நம் இளையான் இருக்கின்றான். இதோ போய்விடுகிறேன்.

[காவலன் போதல்.
சோழன் அமைச்சனைப் பார்த்து]

சோழன்:—அமைச்ச! தண்ணீர் உடனே தளைபூண்ட சேரனிடம் போதல் வேண்டும். மானம் விட்டு இரத்தலினும் உயிர்விட்டு இறத்தல் பெரியது என்று எண்ணுபவர் சேரர். புறப்புண் ஏற்படினும் மனம்புழுங்கி புவிமிசை விழும் புரவலர் சேரர். அச்சேரகுலத் தோன்றலாகிய இரும்பொறை இதயம் விட்டு இன்னீர் என்று இயம்பியது எமது இனிய காலம் போலும். இரும்பொறையின் இருங்கொற்றம் வீழ்த்தி எனது இருஞ்சிறையில் இருத்திய பின் என் கோபம் தணிந்தது. ஆ! எனது



நாடு, சோழவளநாடு. இவ்வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரிநீர் பாயும் நாடு. இத்தகு நீர்வளநாட்டில் தண்ணீர் பெறாது தண்ணீர்! தண்ணீர்!! என்று ஓருயிர் ஓவாது கேட்பதென்றால் என் செங்கோன்மையின் பயன் யாது? கணைக்காலன் என்னைப் போன்ற ஏற்றமும் ஊற்றமும் உடைய வேந்தன். நான் உண்ணும் நீரையே உவந்து அளியுங்கள்.

அமைச்சன்:— வாழ்க! நின்னறம். கடிபட்ட வேந்தனைக் கண்ணியமாய் நடத்தலே பகையின் முடிவு. தங்கள் முடியைத் தாழ்ந்து வரவேற்கின்றேன். இது போழ்து அந்நீரை அரண்மனை மருத்துவரைக் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டும்.

[மருத்துவன் வருதல் அரசன் மருத்துவனைப் பார்த்து]

அரசன்:—மருத்துவரே இந்தத் தண்ணீரைப் பரிசோதனை செய்யும்.

மருத்துவன்:—ஆம் அரசே! இதோ ஆராய்கின்றேன்.

[மருத்துவன் ஆராய்ந்து அரசனைப் பார்த்து]

அரசே! தண்ணீர் நல்லாயிருக்கின்றது. நோய் தரும் எவ்வகை அணுவுமில்லை. நல்லாய்க் குடிக்கலாம்.

சோழன்;—மருத்துவரே! நீரும் நம் அமைச்சருடன் செல்லும். முகத்திலும் மார்பிலும் பட்ட புண்களைப் புகழ்தரும் வடுக்களாக மாற்றும். சிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதியும் சேரன் சிறையிலே செத்துவிடின் சேரநாடு சினம் தணியாது; வழி வழி பகையாய் வந்து சோழ நாட்டைச் சேரும். அது விரும்பத்தக்கதன்று. சேரனின் உடல்நோய் அரியதாயினும் மயங்காது மதியொடு ஆவன மதித்துச் செய்மின். அவன் மெய் என் மெய்யே. இதில் ஐயமில்லை.

அமைச்சன்:—வளவ! நீதிநூல் முறைப்படி நிந்தையில்லாது குடநாட்டு வேந்தனை வெஞ்சிறையில் இட்டோம். சிறு குற்றம் செய்தவர்களும் சிறையிலேதான் தள்ளப்படுகிறார்கள். ஆனால் இரும்பொறையோ உம்மோடு ஒத்த உயர் வேந்தன். அவரையும் மற்றவர்கள் போல் சிறைவைத்தல் நம் சீருக்குச் சிறப்பல்ல. ஆதலால் சேரரைச் சிறைவீடு செய்தலும் தக்கதெனத் தங்கள் திருமுன் அறிவிப்பன்.

சோழன்:—அமைச்சரே! உமது சிந்தனை சீரியதே. இன்னே செய்யத்தக்க இனிய செயல். சுற்றத்தீர்! பொறையன் பொன்றாப் புகழுடையவன், வடவரை வணங்கிய வானவர் குலத்தோன்றல்; இத்தகையோன்பால் என் உணர்வு மிகுந்த உறவுச் செய்தியை ஊனமின்றி உளம்பதியச் செப்புக. மறக்களத்தில் தங்கள் மானமும் மறமும் மங்காதது கண்டு மகிழ்ந்த எம் வேந்தன் ஒத்த நட்பினனாய் ஒழுகுவதை விழைகின்றான் என்று விளம்புக. சொல்விருந்தோம்பி நல் விருந்தினனாய் நாடெல்லாம் அறிய நன்னீர்நாடன் அழைக்கின்றான் என்று



அழைத்து அழைத்து வருக! அமைச்ச! தங்களின் மந்திரத்திறன் சேரனின் செவ்விய அகத்தில் செம்மை பெறுவதாக. விரைந்து செல்லுங்கள்! விரைந்து செல்லுங்கள்!!

## காட்சி — 3

களம்:- சிறைக்கோட்டம்.

கூத்தர்:- காவலர்கள், அமைச்சன், மருத்துவன் சேரமான்.

இளங்காவலன்:—அப்பா! மூன்பாவது தண்ணீர் தண்ணீர் என்ற அரசர் இப்போது ஒன்றும் பேசவில்லையே? நாடி குறைந்துவிட்டதோ? பாவம்.

கிழக்காவலன்:—தம்பீ! அப்படி எளிதாய் எண்ணாதே. நம்மைப்போலல்ல அரசரின் உடம்பு. அத்தனையும் இரும்புபோல் இறுக்கமாக இருக்கும்.

இள;—செந்தமிழ் நடையில் செழித்த சேரநாட்டு அரசரின் இறுதிச்செய்தி இப்படியாகவா முடிய வேண்டும்? என்னே அரசவாழ்வு! முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் பிடிசாம்பலாகத்தான் போகின்றார்கள். இதற்குள் யார் வீரர் என்று போர் செய்கின்றார்கள். போரே புரவலரின் பொழுதுபோக்கு. இஃதென்ன நோக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழ:—தம்பி! உனக்கென்ன இவ்வளவு ஞானம் உதித்திருக்கிறது. இஃதென்ன சுடலை ஞானமா? நீ பேசுவது ஒன்று, நடப்பது ஒன்ருய் இருக்கிறதே.

இள:—அப்பா! சொல்லும் செயலும் சோர்வுபடாமல் நடப்பவர்கள் யார் இருக்கிருர்கள் இவ்வுலகில்.

[குதிரையின் வருகையாக டக், டக், டக் என்று சத்தம் எழுப்பல்].

இளை:—அப்பா! குதிரை வரும் சத்தம் கேட்கிறது.

கிழ:—அப்படியா? மந்திரி வருகின்ருர். அடே! கவனமாய் நிமிர்ந்து நில்.

[இருவரும் இருபக்கம் வேல்பிடித்து நிமிர்ந்து நிற்றல். மந்திரி முதலியோர் வருதல், சிறையிற் புகுதல்].

மந்திரி:—(வாயில் கையை வைத்து) என்ன இது? மெய் மறந்து கிடக்கின்ருரே (நீர் முகத்தில் அடித்தல்; மருத்துவர் நாடி பார்த்தல்).

மருத்துவர்:—போரில் செய்த வேலைகளாலும் அதிக இரத்தம் ஓடியதாலும் சோர்ந்து கிடப்பதன்றி வேறில்லை. நாடி ஓட்டம்நன்ருக இருக்கின்றது.

[மீண்டும் முகத்தில் நீர் தெளித்தல். அரசன் மயக்கம் தெளிதல். மருத்துவர் நீரைக் கையில் வைத்துக்கொண்டு]

அரசே! தண்ணீர்! நான் சோழ அரசனின் மருத்துவன். தண்ணீரைப் பரிசீலனை செய்து



வைத்திருக்கின்றேன். குடியுங்கள் தாகவிடாயைத் தணியுங்கள்!

பொறை:—ஆ! ... ... என்ன! ...... தண் ... ...

மருத்துவர்;—ஆமாம்! தண்ணீர் அரசே! உம் உடலுக்குச் சிறிது அயர்ச்சி பிறந்திருக்கின்றது. ஒரு குவளை நீர் குடித்தருள்க!

அமைச்சர்:—வேந்தே! நும் உடலைக் காக்கவேண்டி எம் வேந்தன் சோழனல் ஏவப்பட்டு வந்த முதல் அமைச்சன் நான். எம் வேந்தன் சோழன் உம்மோடு நட்பும் பெருமதிப்பும் கொள்கின்ருன் என்று சொல்லப் பணித்தார்.

பொறை:—(சிரித்தல்) நட்பு ... ... மதிப்பு ... ...!

அமைச்சர்:—வேந்தே! இதோ ஈண்டு என்னேடு நிற்பவர் அரசரின் வைத்தியர், முன்னமே அறிந்து தண்ணீர் கொண்டு வராத எம் பிழையைப் பொறுத்து இந்த இனிய நீரை அருந்துதல் வேண்டும். பின் எங்கள் அன்புகனிந்த விருந்தினராக அழைக்கும் அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரண்மனைக்கு இப்பொழுதே எங்களுடன் எழுந்தருளவேண்டும். எதிர்கொண்டு வாரியணைக்க எம்வேந்தன் சோழர் பெருமான் காத்திருப்பர். (என்று கை கூப்பி நிற்றல்)

பொறை:—(சிரிப்பும் கண்ணீருமாய்) நீர் அமைச்சர். அவர் அரச வைத்தியர்! (பின் தண்ணீரைப் பார்த்து) இது தண்ணீர்! ஆ! சேரர் குலம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் நாட்டின் ஒரு தனிக்குலம்!! ஆ! இறந்த கருவையும் வீழ்ந்த பிண்டத்தையும்! வாள்வாய்ப்பட்டு இறக்கவேண்டும் என்ற வீர எண்ணத்தால் இம்மியும் இரங்காது வாளால் வெட்டும் குலம் சேரர்குலம்! பகைவன் வாள் உடம்பிற் பதிய. அதை உற்ற உயிர் உயர் விண்ணை உரக்கக் கூவி அதில் உல்லாசமாக உலவும் குலம் சேரர்குலம்! பெரியோர் பலரும் தன்னோடு உண்ணாவிரதம் பூண, மார்பில் மலர்ந்த புண்ணை முதுகில் முகிழ்த்த புண்ணெனப் புழுங்கி மனம் பொறாது மானம் காத்த மறுவிலாத சேரலாதன் பிறந்த செந்தமிழ்க் குலம் சேரர்குலம்! உடன் வந்த உயிரனைய மலைநாட்டு மறவர்குலம் எல்லாரும் கூட்டாக இறக்க, அதனைப் பார்த்திருந்தும் ஆருயிர் அகற்றாது அடிவயிற்றின் அழல் அகல — தீத்தணிய நான் நீர் கேட்கும்படியாகப் பிறந்ததுஞ் சேரர் குலமோ? இல்லை! இல்லை!! உறுதியாக இல்லை! விருந்து! (சிரித்து) என்னை வாரியணைக்க வாயிலில் பார்த்து நிற்கின்றான். ஏன்? என்னுயிர் எனக்குப் பெரிதாயிற்று. ஒரு கையில் போர்முரசு, மறுகையில் மாற்றானை மாய்க்கும் வில். இவைகளுடனே வாழும்படி குழந்தைகளைப் பெறும் சேரநாடு எனக்குச் சிறிதாயிற்று! கொல்லும் புலிகளின் பாய்ச்சலுக்குப் பதுங்காது பாரிய தந்தத்தால் பாய்ந்து குத்தும் பாரிய யானைகள் பரந்து கிடக்கும் சேரநாடு, அது எனக்குச் சிறிதாயிற்று!! இதோ! என் கையில் இருப்பது என்னுயிர்



தங்கும் உடல் வாழவந்த தண்ணீர்! தண்ணீர்! இல்லை, என் உடலிலிருந்து சோழன் எடுத்த செந்நிறப்புண்ணீர்!! இல்லை; மலைநாட்டுத் தேனினும் இனிதெனக் கருதி என்னுடலை நிலத்தில் இட்டுத் தெளிக்க வந்தபிணநீர்!! கணைக்காலா! நீ நிலத்துக்குப் பெரும் பொறையாய்ப் பொருந்திய இரும்பொறையன் என்று நிந்திக்க வந்த இறுதிநீர்! ஆம்; இறுதிநீர்தான்.

மருத்துவன் கைநாடி பார்த்தல்; நாடி குறைதல்; கண்டு அஞ்சுதல்; அமைச்சர் அவனை அணைத்தல்; மறுபடியும் உணர்ச்சி பெருக].

மறவர் மடிய மாளாத என்னுயிர்; நாய் போல் தளை பூண்டபின் நரகவுலகுக்கும் நாட நலமில்லாத என்னுயிர்; நாவரள; நீர் இரந்தபின்னும் போகா என்னுயிர், ஏதிலார் ஏத்தித்தந்த நீரை ஏந்திய பின்னும் ஏகாத என் எளிய உயிர்; அதனைக் குடிக்க முன்பாவது — போ ... ... .... (மார்படைத்தல்) மானமே மரணம்! ஏ! மானமே நீ மறுப்படின் மரணம் அடைய ... ... ... மரணம் அடைய ... .....

[ திரை வீழ்தல் ]

மானமரண நாடகம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பறம்பு மன்னன்

**களம்:-பாரி அரண்மனை, மலர்வனம்.**

**கூத்தர்:-பாரிமன்னன், மந்திரி, தூதுவன், தேர்ப்பாகன், மூவேந்தர், கபிலர்.**

**காட்சி—1**

இடம்:-பாரி அரண்மனை.

கூத்தர்:-பாரி, மந்திரி, தேர்ப்பாகன்.

பாரி:- மந்திரி! போர்முகத்தில் நீவிர் குறிப்பாகச் சொன்னதைத் தெளிவுபடுத்துங்கள்.

மந்திரி:- ஆம்; பாரி மன்னா! பறம்புமலைத்தலைவா !! முடியுடை வேந்தர் நம்மிடம் மகட்கொடை கேட்டு மறுத்தலால் இன்று நடந்த போரோடு மூவரும் தனித்தனியே தோல்வி அடைந்து விட்டார்கள். என்றாலும்! அம்மூவரின் உள்ளத்தில் மானம்; வீரம்; காதல் இம்மூன்றும் நின்று நம்மீது மறுபடியும் போர் செய்யவே தூண்டும். ஒருவேளை மூவரும் ஒன்று சேர்ந்து நம்மை முறியடிக்க நாடினும் நாடுவர்; எதற்கும் நாம் சித்தமாய் இருக்க வேண்டும்.

பாரி:- ஆம்; மந்திரி. இம் மண்ணுலகின் மூவரல்ல; விண்ணுலக மூவருமே வந்து முரசு முழங்கி என் பறம்பு மலைகளை முட்டியதால் யாது



பயன்? தோல்வி! ...........தோல்வி!! ...... ......தோல்வி!!!......... மந்திரி! ஒரு தூதனை அனுப்பி மலர்வனம் செல்வதற்குத் தேரில் குதிரைகளைப் பூட்டும்படி கூறுக.

மந்திரி:- ஆம்; அரசே. (சற்றுப் பொறுத்து)

தேர்ப்பாகன்:- தலைவா! வாழிய பெரிதே.

பாரி:- யாரது? ஓ......... தேர்ப்பாகனா........தேரிற் குதிரைகள் பூட்டியாயிற்றா?

தேர்ப்பாகன்:- ஆம் மன்னா! இதோ அரண்மனை வாயிலில் தேர் வந்து நிற்கிறது.

பாரி:- அப்படியா? நன்று! நன்று!! போர்புரிந்த களைப்புத் தீர மலர்வனம் சென்று மகிழ்வோம்.

[தேர் செல்லும் ஒலி கேட்டல்.]

**காட்சி — 2.**

இடம்:- மலர் வனம்.

கூத்தர்:- பாரியும் தேர்ப்பாகனும்.

பாரி:- பாகனே! தேரை ஆறுதலாக ஓட்டு.

பாகன்:- ஆம்; மன்னா! குதிரைகளும் இன்று ஏதோ தம்மை அறியாமலே குதூகலமாய் ஓடுகின்றன.

பாரி:- (சிரித்துக்கொண்டு) என்ன? அவைகளுக்கும் மலர்வனம் மகிழ்வு ஊட்டுகிறது போலும். ஆ! எங்கும் பசுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு

எடுப்பு.

மனம் மகிழ் மலர் வனம்
இனம் நலம் மிகு மணம். (மனம் மகிழ்)

தொடுப்பு.

பறம்பு சீர் முல்லை வனம்
திறன் பெறு அளியினம். ( „ )

முடிப்பு.

மான் மருள மயிலகவ
மான் களிறு கலந்துவர
ஆனினம் அசைந்துவர
ஆன்றகா ஆனந்தமாய் ( „ )

ஆ! என்ன! கொடுமை! தேரைச் சற்று நிறுத்து.

தேர்ப்பாகன்:— தலைவா! என்ன? பறம்பு நாட்டிலா? பாரி மன்னன் நாட்டிலா? கடையேழுவள்ளல்களில் முதன் நிலை பெற்ற முதல்வன் நிலத்திலா?

பாரி:— பாகனே! அதோ ஒரு முல்லைக்கொடிகொழுகொம்பு இன்றி வீழ்ந்து கிடக்கின்றது. ஆ ........ ... அதைப் பார்க்க என் நெஞ்சம் பொறுக்கவில்லை. கொழுகொம்பில்லாத ஒரு கொடியும் கொடியா? அதற்கு ஓங்கி வளரும் இன்பவுணர்ச்சி கொம்பில்லாமையினால் குறுகி விட்டதே! தேரை அக்கொடியின் பக்கமாய்ச் செலுத்து.



[தேரொலி கேட்டல்.]

பாகனே! தேரை நிறுத்து, நாம் நடந்து அக்கொடியிடம் செல்வோம்.

பாகன்:— இதோ நிறுத்தினேன். (சற்றுப்பொறுத்து)

பாரி:— ஆ! அழகிய முல்லைக்கொடியே! உன் உன்னதமான செழிப்பு இதுதானா? மற்ற முல்லைக் கொடிகள்போல் நீ இல்லையே. கொழுகொம்பில்லாக் குறையா இந்நிலைக்குக் காரணம்? உன் குறையை நீ உரைக்கலாகாதா? என்னிடம் வரும் பரிசிலர்கள் தம் நாத்தழும்பேறத் தம் பரிசை இயம்புகின்றார்களே. பாகனே! என் தேரை இதன் அருகே கொண்டு வா.

பாகன்:— இதோ கொண்டுவருகின்றேன்.

[தேரொலி கேட்டல்.]

பாரி:— பாகனே! நிறுத்து. இம்முல்லைக்கொடியைத் தூக்கி இத்தேரின்மீது படரவிடு.

பாட்டு

வெண்பா

வாழி! பசும்முல்லாய்! வான்தோய் விரைதேரில்
வாழி வளம்படவே வாழ்கொடியே — ஆளுலகில்
கோடுகள் நாற்புறமும் கோலமாய் நின்றுதவப்
பாடுபெறும் நற்பறம்பு நாடு

பாகனே! இனி, இம்முல்லைக்கொடி இத்தேரில் ஓங்கி வளரும். நாம் நடந்தே நம் அரண்மனைக்குச் செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்:- **பாட்டு**

முல்லைக் கொடிக்கே
முடித்தேர் விட்டுவரும்
மல்லல் பாரியே
மானிலம் வென்ருய்.

பாரி:— ஆ! இஃதென்ன குரல்?

பாகன்:— மன்னு! இஃது இயற்கையின் குரல்-அசரீரி என்பர்.

பாரி:— அப்படியா?

பாகன்:— மன்னு! தங்களின் இச் செய்கையைக் கண்டு இயற்கையே தன் இன்பக்குரலை எழுப்பியுள்ளது. பறம்பு நாட்டில் ஓரறிவு உயிர்களும் முழுநிலை இன்பத்தை மூட்டின்றித் துய்க்க வேண்டும் என்ற தங்களின் இதயக்குரல் தான் இது போழ்து பேரொலியாய்க் கேட்டது.

(பாகன் பாடுதல்)

ஆளப்பிறந்தனை ஆனந்த வாழ்க்கையை
ஆக்குவாய் - மிகுந் - தாக்குவாய்.
ஆணை செலுத்தி ஆருயிரின்புற
ஆளுவாய் - புகழ் - ஆளுவாய்,

**காட்சி — 3.**

இடம்:— அரண்மனை.

கூத்தர்:— பாரி; கபிலர்; மந்திரி; வாயில் காவலன்.

வா. காவ:— மன்னு! வணக்கம்.



பாரி;— யார்? வாயிற்காவலனு?

வா. காவ:— ஆம்; மன்னு! கபிலர் பெருமான் வந்துள்ளார்.

பாரி:— அப்படியா? நல்ல வேளையில் வந்துள்ளார். அவரை இன்னே வரவிடுக.

வா. காவ:—ஆம்; அரசே.

பாரி:— (தனக்குள்ளே) இயற்கையின் தத்துவம் புலவர்களின் நாவில் அன்ரூே பொருந்தியுள்ளது. இயற்கை இன்பமும் இறையருளும் கலந்துறையும் பேழை புலவர் நெஞ்சமே, அவர் மனப் பேழை திறக்கவில்லையேல் எம்போன்ரூர் இன்பம் அடைதல் எவ்வாறு?

கபிலர்:—பறம்புப் பெரும! வாழிய பெரிதே!

பாரி:—பொய்யா நாவிற் கபில பெருமானே! வருக! வருக!! பூந்தவிசில் அமருக.

கபிலர்:—பொருந! நீ மூவேந்தரையும் தனித்தனி வென்ற செய்தி தமிழ்நாடு எங்கும் பரந்து விட்டது. எங்கு நோக்கினும் உன் பெயராகிய பாரி! பாரி!! என்ற பேச்சே கேட்டேன். என்னே! உன்வீரம். பொதுமக்கள் மட்டுமல்ல செந்நாப் புலவர்களுமே உன்பெயர் கூறி உள்ளம் மகிழ்வுறுகின்றனர்.

**பாட்டு**

**அகவல்**

பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண்டு லகுபுரப் பதுவே.

— புறநானூறு

பாரி:—என்ன! புலவரே! பழிப்பதுபோலப் புகழ்கின்றீரா? நன்று! நன்று! மந்திரியும் வருகின்றார்.

மந்திரி:—தலைவ! வணக்கம்.

பாரி:—யாது விசேடம்? மந்திரி.

மந்திரி:—மன்ன! நீ மூவேந்தருக்கு மகட்கொடை மறுத்து, தனித்தனியே அவர்களை முறியடித்து முதுகிட வைத்த செய்தியும்; முல்லைக்கொடிக்கு முடித்தேர் ஈந்த செய்தியும் கேட்டு மனம் பொறாதவர்களாய் மூவேந்தரும் ஒன்றுகூடிப் போர்முரசு கொட்டி வருவதாகப் புலம் ஆய்வோர் புகன்று சென்றனர். (முரசொலி கேட்டல்).

பாரி:—அப்படியா? நன்று! மூவரும் கூடியா போர் முரசு கொட்டுகின்றனர்? நன்று! நன்று!! நீ சென்று படைத்தலைவர்கள் மூலம் போருக்குச் சித்தம் செய்வாய்.

கபிலர்:—பாரியே!

பாரி:—என்ன புலவர் நண்ப!

கபிலர்:—மூவேந்தர்கள் தனித்தனியே உன்தோள் வன்மையையும் வாள் வீச்சையும் இனிதாய்ச் சுவைத்தறிந்தும் அவர்கள் அறிவு இன்னும் தெளியவில்லைப்போலும்.



பாரி:—ஆம்; புலவரே! பகைவரால் தகர்க்க முடியாத என் அரண்சிறப்பை இவர்கள் இதுகாறும் உணராதது வியப்பினும் வியப்பே! மகளிரைக் கைப்பிடித்தல் ஆவண வீதியில் பண்டமாற்றுச் செய்தலை யொத்தது எனக் கருதினர்போலும். தாம் முடியுடை மன்னர் என்ற செருக்கோ வேந்தர்கள் வேண்டியபடி வெம்முரசு கொட்டுகின்றார்கள்? அஃது அறிவுடைத்தன்று.

கபிலர்:—அரசே! உன் வீரத்தையும், ஈரத்தையும் நன்கு அவர்களுக்கு அறிவுறுத்துவேன். பாரி வள்ளலே நான் வருகின்றேன்.

## காட்சி — 4.

இடம்:- பறம்பு மலையின் வெளிப்புறம்.

கூத்தர்:- மூவேந்தரும், கபிலரும்,

[போர் முரசொலியின் ஊடே கபிலர் வருகின்றார்! கபிலர் வருகின்றார்!! என்று பலர் உரைக்கும் ஒலி கேட்டல்].

கபிலர்:—வேந்தர்களே! உங்கள் எண்ணம் பெரும் பேதமைத்து. செயற்கரிய செய்கையுமல்ல. பெருமை கொண்ட முரசை எதற்காகக் கொட்டுகின்றீர்கள்? நீங்கள் எத்தனை நாட்கள் சூழ்ந்திருப்பினும் பாரி பின்னிடான். இம்மலை நிலம் உழவரால் உழுது விளைவிக்கப்படாத விளையுள் நான்கு உடையது. அவை மூங்கில் நெல், வள்ளிக்கிழங்கு, பலாவின்பழம், தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியனவாகும். ஆகவே பசியால் பதங்கெட்டுப் பணியும் பண்பு பாரியினிடம் இல்லை. இத்தகைய இயற்கைவளம் இனிதாகப் பெற்ற இணையில்லா இம்மலைகளின் திண்மையைப் போன்றது பாரியின் பரந்த மார்பு. வேந்தர்களே! இம்மலையைப் பாருங்கள். இவை அகல, நீள, உயரத்தால் வானிடத்தை ஒக்கும். அம்மலையின் கட் சுனைகளோ வானிடத்து மீன்களை ஒக்கும். அவ்விடத்து மரங்களில் யானைகளைக் கட்டினாலென்ன? இடங்கள்தோறும் தேர்களைப் பரப்பி நிறுத்தினால் என்ன? எல்லாம் அவம். நும் வாள்வலிக்கு மெலிந்து பாரி மன்னன் பணியான். பறம்பை விட்டோடான். இதை நான் நன்கறிவேன். உண்மையில் பறம்பைப் பற்றும் உள்ளம் உமக்கிருப்பின் இதுவல்ல முறை. முறையல்லா முயற்சியில் முழுதுலகுந் திரண்டு முட்டினாலும் முடிவடையாது; இஃதுறுதி. நரம்புகளால் யாத்த யாழை வாசித்து நும் விறலியர் பின்னே ஆடியும் பாடியும் வரப் பாரியினிடம் இரந்து செல்லின் அவன் இதயம் இளகி நீர் இயம்பும் பரிசும் தருவான். இதுவே அவனை வெல்லும் முறையாகும். ஆனால் அம்முறைக்கும் காலம் கடந்துபோயிற்று. பறம்புநாடு முன்னூறு ஊர்களையும் பரிசிலர் அவனைப் பாடித் தமக்குரிமையாக்கிக்கொண்டனர். இனி, அவனும் யாமுமே உள்ளோம். நீவிரும் அவர்போலப் பாடி வருவீராயின் எம்மையும் பெறலாம். எஞ்சி நிற்கும் இப்பறம்பு மலையையும் பெறலாம்.



மூவேந்தரில் ஒருவன்:—அப்படியா புலவரே! உமது உரையால் நமக்கு நல்ல சூழ்ச்சி பிறந்திருக்கிறது.

கபிலர்:—மூவேந்தர்களே! இதுவே நமக்கு வேண்டியது. நான் வருகின்றேன்.

[போர் முரசு கேட்டல்].

மூவேந்தரில் ஒருவன்:—தூதனே! நீ படைத் தலைவனிடம் போய் நம் மறுஆணை பிறக்கும் வரைக்கும் போர்முரசு கொட்டவேண்டாம் என்று கூறு!

[சற்றுப்பொறுத்துப் போர்முரசு ஒலி அடங்குதல்]

சேரன்:—பாண்டி மன்னா, கபிலர் உரையை நாம் மனங்கொள்ளாதிருக்க முடியாது. பாரியின் அரண் வளப்பம், உணவுப்பொருள் மிகுதி போர்த்திறமெல்லாம் தெளிவாகக் கூறியுள்ளார் அல்லவா?

பாண்டியன்:—ஆம் சேரரே ஆனால் அவர் உரைத்தபடி இரவலர்போலப் போதல் புரவலர்க்குப் புகழில்லையே.

சோழன்:—பாண்டிய, சேர வேந்தர்களே! நாம் இரவலர்போல வேடம் பூண்டு உண்மையாக உள்ளே புகுந்ததும் அங்கே போர்க்கோலம் கொள்ளுதலே வழியாகும். இது ஒரு யுத்த சூழ்ச்சி. அரசர்க்குச் சூழ்ச்சி ஓர் அணிகலன் அல்லவா? பாரியை வெல்லும் வழி இதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு–வேந்;–ஆம்; அப்படியே செய்வோம்.

[பல பெண்கள் பாடுதல் பாரியைப் புகழ்ந்து]

**பாட்டு**

வேளிர் குலத்திலகா வேணுபுகழ் மாரா
ஆளிநேர் அழகா ஆள்பறம்பு நாதா (வேளிர்)
நேரில் காவலா நிறைசீர் கபிலன்
மாரியுமுண்டென மகிழ்ந்தே பாடிய (வேளிர்)
ஈகையில் இருந்தே துணையிலாப் புகழால்
வாகை முடிமன்னர் வலம்வீழ் வள்ளால் (வேளிர்)

பாரி;–நீங்கள் இரவலரா? நன்று.

[வாள் உருவும் ஒலி கேட்டல்; முரசொலி கேட்டல் பாரி "ஐ ... ... யோ — ஓ — ஓ என்று கூவல். இரு இளம் பெண்கள் "ஆ எந்தையே! அந்தோ!!"என்று கூவும் குரல் கேட்டல்]

கபிலர்:–ஆ! என் நண்ப! இஃது என்ன நீதி! என் செய்கை! பாரிமக்காள்!

பாரிமக்கள்:–ஆ! ஐயகோ! எம் புலவரே! கபிலர் பெருமானே! எம் எந்தை எங்கே? பாரைப் புகழால் மறைத்த பாரி மன்னன் எங்கே? அவர் யாண்டு சென்றார்? இரவலர்போல வந்த இவர்கள் மூவேந்தர்களா? ஈகையே தன் இன்னுயிர் என்றிருந்த எம் தந்தைக்கு இதுவா விதி! புலவரே கூறுமின்! கூறுமின்!! அறிவுடையீர்! தாய் தந்தையர்களை இழந்த பாவிகளானோம். இனி இப்பாரில் வாழும் பதம் இழந்தோம்.



கபிலர்:–மக்காள்! ஒருவனின் மிகுபற்றான கொள்கை அவனை அதிபாதாளத்துள் வீழ்த்தி விடுகிறது. இஃது உலகத்தியற்கை. இயற்கையை நாம் எப்படி வெல்ல முடியும்? அதற்கு நாம் பணிதல் அன்றோ அறிவுடைமை.

பாரிமக்கள்:–என்ன புலவரே! இயற்கை! இயற்கை!! இயற்கையில் நன்மைக்கு இடமில்லையா? மூவேந்தரின் சூழ்ச்சியா எம் தந்தையின் உயிரைப்போக்கியது. இல்லை! இல்லை!! எம்மாட்டு அவர் கொண்ட அன்பன்றோ அவர் ஆவியை இவ்வுலகில் நின்று பிரித்தது. எம்மை எவருக்காயினும் மணம் செய்து வைத்திருந்தால் இந்நிலை நேராதல்லவா? மலையளவு பரிசுகள் தந்த உமக்கு நாம் இனிக் கடுகளவேனும் தரப் பாக்கியமற்றோம். ஆ! எந்தையே! எம்தலைவா!!

கபிலர்:–மக்காள்! இப்பகைவர் இரவலரைப் புரக்கும் புரவலர்கள். அதுவும் முடியுடையவர்கள். இப்படியான இவ்வேந்தர்கள் இவ்விழிந்த செய்கை செய்வார்கள் என்று எப்படி நாம் எண்ண முடியும்? விதியின் முறை இதுவாயிற்று. இதற்கு இரங்கிப் பயன்யாது? நான் பாரியின் நண்பன்; அவர் உமக்குமட்டுமல்ல தந்தை. எம்போன்றார்களுக்கெல்லாம் அவர் தந்தை; நீவிர் இப்போது என்மக்கள். உம் தந்தைக்குஆய கடன் முழுவதையும் நானே ஏற்றுக்கொண்டேன். கவலற்க! ஆறுமின்! ஆறுமின்!! உங்களைத் தக்க பாதுகாப்பான இடத்தில் வைத்துத் தமிழ்நாட்டு வேந்தர்க்குத் திருமணஞ் செய்விப்பேன் வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிமக்கள்;—அப்படியா? புலவர் பெருமானே நாங்கள் வருகின்றோம். (சற்றுப் பொறுத்து) எங்கள் பறம்பு மலையைப் பாருங்கள் புலவரே!

கபிலர்:—எம் தந்தையான பாரியின் ஆணையைக் கேட்டுப் புகழடைந்த பறம்பே! என்ன உன் நிலை. முன்பு மதுவையும் மைவிடையின் உணவையும் விரும்பியபடி எமக்குத் தந்து எம்மோடு நட்புப் பூண்டாய். ஆனால் இப்போது பாரி இறந்ததால் நாம் கலங்கி என்ன செய்வதென்று அறியாது நீர்வார் கண்களுடன் உன்னன்றியை உள்ளி வாழ்த்தி, பாரி மக்களின் திருமணம் குறித்துச் செல்கின்றேன்.

[எல்லோரும் சேர்ந்து பாடல்]

தொன்று தமிழ்நாடு தோன்று வள்ளல்களில்
நன்று நலம்பட்டவன் — எவன்
என்று நினைந்திடின் ஏறென நிற்பவன்
எங்கள் வேள் பாரி.

முந்நூறு ஊருடை முடிவிலா நல்வளம்
முதிர்ந்த பறம்புநாடு — மெய்
முடியுடை மன்னன் முற்றியுங் கைவிடா
முழவுத்தோள் எங்கள் பாரி.

பாவலன் பரவும் பண்டைக் கபிலன்
பரவிப் போற்றினனால் — பறப்புக்
காவலுக் கஞ்சியே கரந்தமூ வேந்தர்
கைப்பட்டான் எங்கள் பாரி.

பண்டு தலைநின்ற பாரியின் புகழ்ச்சீர்
இன்று நினைந்திடவும் — இவன்
கண்டு களிகூர இன்று வரானே
எங்கள் வேள் பாரி.

திரை வீழ்தல்.

பறம்புமன்னன் முற்றிற்று.

# 5. பொருளுங் கலையும்

## இடம்:- வீடு.

**கூத்தர்கள்:—தலைவன், தலைவி, தோழி, பாணன்.**

[தலைவன் வீட்டில் ஒரு புறத்தில் பழைய ஏடொன்று எடுத்து வாசித்துக்கொண்டிருக்கத் திரை திறத்தல். அதன்பின் அவன் குழந்தை தலையிற் பூச்சூடிக் கொண்டுவந்து தகப்பனுக்குக் காட்டல்].

குழந்தை;—அப்பா! அப்பா!! பார்த்தாயா? அம்மா பூச்சூடி இருக்கிறார்.

தலைவன்:—ஆம் கண்ணே! நல்ல வாசனை உள்ள பூ. அழகான பூ. சரி! அம்மாவை இங்கே கூட்டி வாருங்கள்.

குழந்தை:—அப்பா! அம்மாவையா?

தலைவன்:—ஆம் கண்ணே! அம்மாவைத்தான்.

குழந்தை:—அம்மா அ! ... ... அம்மா அ!! .... ...

[குழந்தை கூப்பிட்டுக்கொண்டு செல்லல். தலைவி மெல்ல நடந்து வருதல்].

தலைவி:—என்ன அழைத்தீர்கள். மாலை கட்டிக் கொண்டிருந்தேன். பூவும் வாடப்போகுது. விரைந்து சொல்லுங்கள்.

தலைவன்:—அப்படியா? நல்லது; தட்டில் உள்ள மலரையும் எடுத்துக்கொண்டு இங்கே வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தலைவி போதல் சற்றுப் பொறுத்து தலைவி வந்து மாலை கட்டிக்கொண்டே இருத்தல்]

தலைவி:—சரி; மாலை கட்டிக்கொள்ளுகின்றேன். என்ன சொல்லப் போகின்றீர்கள். கையில் உள்ள ஏடு பெரிதாய் இருக்கின்றதே. என்ன தொல்காப்பியமா?

தலைவன்:—இது தொல்காப்பியந்தான். பழந் தமிழர் வாழ்வை இது அழகாக எடுத்துக் கூறுகின்றது. எடுத்தால் மூடிவைக்க மனம் வருவதே இல்லை.

தலைவி;—நானும் இடைக்கிடை எடுத்துப் படிப்பதுண்டு. இனிய நூல்தான், அஃதெல்லாம் இருக்கட்டும்; மாலையும் கட்டி மூடியப்போகிறது. சமையலுக்கு நேரமாய்விட்டது. சொல்லும் கதையைச் சொல்லுங்கள்.

தலைவன்:—கண்ணே! நான் இந்நேரம் கதை சொல்லக் கூப்பிடவில்லை. இதை வாசிக்கும்போது ஒரு கருத்து என் உள்ளத்தை உறுத்தியது அதுபற்றி உரையாடல் செய்யலாம் என்று அழைத்தேன்.

தலைவி:—அப்படியா? அஃது என்ன கருத்து? சொல்லுங்கள் பார்ப்போம்.

தலைவன்:—சரி; இந்த நூற்பாவை இசையுடன் படியுங்கள். இசையைக் கேட்டால் சிறிது ஆறுதல் உண்டல்லவா?

தலைவி;— அதற்குத்தானே நம் குடும்பப் பாணர் இருக்கின்றார். அவர் இன்று வருவாரல்லவா?



தலைவன்:—அவர் வரட்டும்; நீங்கள் இப்போது இந்நூற் பாவைப் பாடுங்கள். இதில்தான் ஓர் ஆய்வு உணர்ச்சி எழுந்தது!

தலைவி:—அப்படியா? தாருங்கள் பார்ப்போம்.

[கையை நீட்டி வாங்கி இசையுடன் வாசித்தல்].

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவுமன்ன கிழவோன் மாண்புகள்

[இசையுடன் வாசித்தல்].

தலைவன்;—அருமையாய் வாசித்தாய்; இந்த நூற் பாவில் "வல்லிதின் விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்" என்று இருக்கிறதே இந்த விருந்துக்கும் சுற்றத்திற்கும் மட்டும் வல்லிதின் என்று அடைகொடுத்திருப்பது ஏன்? என்பது தான் என் மனத்தில் எழுந்த அசைவு.

தலைவி:—இதுவா? விருந்தோம்பலும் சுற்றம் பேணலும சற்று செய்தற்கரியது; ஆதலின் அவ்வாறு அது அடைகொடுத்து உரைக்கப்பட்டுள்ளது.

தலைவன்:—எதனால் செயற்கரியது என்பதை யல்லவோ விரித்து உரைக்க வேண்டும்.

தலைவி:—அது பொருளீட்டும் முகமாகவரும் முறைகள் வலிதாக இருத்தலின் அவ்வாறு கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:—ஆனல் ஓர் இல்லறப்பெண் விருந்தோம்பல்; சுற்றம் தழுவல் செய்யும் இயல்பினராக இருக்க வேண்டின் முதலில் வீட்டில் பொருள் வளம் பொருந்தியதாக இருக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளுகின்ருயா?

தலைவி:—ஆம்; ஒத்துக்கொள்ளுகின்றேன். இதற்காக உயிருக்கு ஆபத்தான உழைப்பில் முயல வேண்டும் என்பதைப் பெண்களாகிய நாங்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? உள்ளத்தைக் கொண்டு சுவையுள்ள உணவுகளை ஆக்கி விருந்தும் சுற்றமும் உவகையில் உந்த உதவுவதே உரிய கடமை.

தலைவன்:—அப்படியானல் பொருள் தேடுதலில் ஆடவர் உள்ளம் செல்லுதல் இயற்கை அல்லவா?

தலைவி:—ஆம் இயற்கைதான்; அதற்கு இதுபோழ்து என்ன?

தலைவன்:—இல்லை; சும்மா கேட்டேன்.

குழந்தை;—அம்மா! மாலை கட்டிப்போட்டாயா?

தலைவி:—இல்லை கண்ணே. இதோ கட்டிமுடித்து விடுகிறேன்; உங்கள் அப்பா என் மனதைக் குழப்பி விட்டார்.

தலைவன்:—குழந்தாய்! உங்கள் அம்மாவுக்கு பொருள் தேடல் வேண்டும், விருந்தும் சுற்றமும் போற்ற வேண்டும் என்ருல்; உடனே கண்கள் எல்லாம் கடல்போலப் பொங்கிவிடும்



தலைவி;—ஓகோ! உங்கள் கருத்து இப்போது விளங்கிக்கொண்டேன். இதுபோது எழுந்த ஆராய்ச்சியின் புதுமையும் விளங்குகின்றது. கண்ணே! குழந்தாய் இங்கே வா; ஒரு முத்தம் கொடு.

[குழந்தையை நோக்கிக் கூறிக் குழந்தையை முத்தமிட்டு விட்டு ஒன்றும் பேசாது போதல்.]

தலைவன்:—குழந்தாய்! இங்கே வா; தலை மாலை அவிழ்ந்து விட்டதுபோலும்; அதைக் கட்டி விடுகிறேன்.

[குழந்தை போதல்; தலைவன் தலைமாலை வாடிச்சுருண்டு இருப்பதைச் சுற்றிச் சுற்றி உற்றுப் பார்த்தல்; பெருமூச்சு விடல்.]

ஆ! இவ்வளவு நேரமும் வாடாது இருந்த இந்தக் குழந்தையின் தலைமாலை இப்போது திடீரென வாடிவிட்டதே, வாடுவதற்குக் காரணம் என்ன?

{சொல்லிக் கொண்டு யோசித்த வண்ணமாக அங்குமிங்கும் தலைவன் உலாவுதல். மீண்டும் தனக்குள்ளே}

ஓகோ! நம் தலைவி குழந்தையை முத்தம் இட்டாள். அப்போது அவள் விட்ட பெருமூச்சின் வெப்பத்தால் வாடிச் சுருண்டிருக்கலாம். ஆம்! அப்படித்தான் இருக்கவேண்டும். இல்லையேல் திடீரென இம்மாலையில் உள்ள மலர்கள் வாடி வதங்குவதற்கு வேறு காரணமில்லை. என்னே! அவள் உள்ளத்தில் எழுந்த வெப்பம். இவ் வெப்பம் அவள் உள்ளக் குமுறலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டவில்லையா? ஆ! நன்றாகக் காட்டுகிறது. நான் பொருள் தேடப் போகும் எண்ணம் உள்ளவனாக இருக்கின்றேன் என்பதை அவள் உணர்ந்து, அந்த உணர்ச்சியின் ஊற்றத்தால் உண்டான அந்த வெப்பம் அன்றோ அந்த வாட்டம். என்னே! என் செயல்! இல்லை! இல்லை!! இஃது அன்பின் செயல். பிரிவென்றால் பொறுக்க முடியாத பெண்ணின் இன்பச் செய்கை இதுவா?

[சொல்லிக் கொண்டிருக்கையில் தலைவி ஒரு பெட்டியில் சிற்றுண்டி கொண்டு வருதல்].

தலைவன்:— ஓ! வந்துவிட்டியா? என்ன உன் கையில்?

தலைவி:—குழந்தாய்! இங்கே வா! அப்பாவோடு இந்தச் சிற்றுண்டியைச் சாப்பிடு.

தலைவன்:—ஓகோ! கோபமா? என்னுடன் பேசக் கூடாதா?

குழந்தை:—என்னம்மா? அம்மா ......... ..........

[குழந்தை சேலைத் தலைப்பை இழுத்தல். குழந்தையை நோக்கி].

தலைவி:— இல்லை; இந்தச் சிற்றுண்டியை எடுத்துச் சாப்பிடுங்கள்.

[குழந்தை எடுத்துச் சாப்பிடுதல்]

குழந்தாய்! உங்கப்பா எப்போதும் பொருள்! செல்வம்! என்றே சிந்திப்பார். நீயும், நானும்



ஒரு பொருளாக - செல்வமாக அவர் எண்ணுவதில்லை. என் செய்வது? அவருக்கு எது பொருள்? எது செல்வம்? என்பதில் தெளிவில்லை.

தலைவன்:— கண்ணே! ஏன் இவ்வாறு எல்லாம் கூறுகின்றாய்.

தலைவி:— நான் இவ்வாறு உங்கள் மனப்பாங்கை எண்ணிக் கூறுவதல்லாது வேறு எவ்வாறு கூறுவது?

தலைவன்:— ஏன்? 'பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை'' என்பதை உணராயா? அதுதான் உலகோர் செல்வம்.

தலைவி:— ஓகோ! உங்கள் முயற்சியில் அடங்கி உள்ளதா செல்வம்? அதுதான் இல்லை. இவ்வெண்ணத்தால் போலும் அடிக்கடி ஆள்வினையைப்பற்றிப் பேசுகின்றீர்கள். இப்பிறப்பில் நாம் அடையும் செல்வம் முற்பிறப்பில் நாம் எவ்வளவு தேடிவைத்தோமோ அவ்வளவே இம்மையில் கிடைக்கும்.

தலைவன்:— எதைத் தேடிவைப்பது? என்ன பணத்தையா? அல்லது பண்டத்தையா?

தலைவி:— இல்லை; நாம் இருவரும் செய்துவைத்த புண்ணியம், பாவம் என்ற இவைகள். இதற்கு நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் செய்யாவிட்டாலும் அச்செல்வத்தின் அளவு விரிவதுமில்லை. சுருங்குவதுமில்லை. தொடர்பு இல்லாத ஒன்றுக்குத் தொடர்பு ஏற்படுத்தி, வாழ்வை வீணாக்குவதா? பெற்ற இளமையை இழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதா? இதனைத் தெரிந்துகொள்ளாது ஆள்வினை-பொருள் என்று சிலவேளை எண்ணுகின்றீர்கள்.

தலைவி:— என்ன நுட்பமான வார்த்தை; சரி, சும்மா இருந்தால் எல்லாம் வந்துவிடுமோ? முயற்சித்தத்துவம் இவ்வுலகில் இல்லையா? முயற்சி இல்லாவிட்டால் உலக இயக்கம் ஏது? உயிர்களின் முயற்சியல்லவா இவ்வுலகின் இயக்கம்.

தலைவி:— ஆமாம் தாங்கள் உரைத்தது அத்தனையும் உண்மை; உயிர்களின் முயற்சிதான் இவ்வுலகின் இயக்கம், இதை நான் மறுக்கவில்லையே. இது போழ்து எது செல்வம்? எது செல்வமில்லை? என்பதில் அல்லவா ஆராய்ச்சி.

தலைவன்:— சரி! அதை நீயே சொல்லிவிடு.

தலைவி:— சான்றோர் தம்மை அடைந்தார்க்கு ஆதரவு நல்கும் ஈரமுடைமையே - அன்புடைமையே செல்வம் என்பர். இச்செல்வம் மென்மைச் செல்வம் எனப்படும், உலகத்தில் ஒருவன் முயன்று தேடுவது இச்செல்வமே. நான் தங்களை அடைக்கலமாக வந்து அடைந்த மென்மைச் செல்வம் அல்லவா? இச் செல்வத்தின் செழிப்பில் தாங்கள் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டியதல்லவா?

தலைவன்:— ஆகா! தம்மை அடைந்தார்க்குத் தோன்றும் துன்பத்துக்கு அஞ்சி அத்துன்பத்தைப் போக்கி அவரைக் கைவிடாமல் ஆளுகின்ற இயல்புடனே இனியனாய் வாழ்கின்ற வாழ்வு



தான் செல்வம் என்கிறாய். சரி; உன் உள்ளம் நினைப்பதை நான் உணர்ந்து கொண்டேன். உணவு தயாராகிவிட்டதா.

தலைவி:— நீங்கள் ஊருணிக்குப் போய்விட்டு வாருங்கள். அதற்கிடையில் தயாராகிவிடும்.

[தலைவி போதல். தலைவன் அங்கும் இங்கும் உலாவி யோசித்தல்]

தலைவன்:— என்ன அழகான பெண்மைக்குணம். இப்பெண்ணின் கற்பு என்னும் திண்மையை என்னென்பது. தன் கணவனிடத்தில் தான் பெறுகின்ற அன்பே அவர்களுக்கு அரிய செல்வமாகும். அவ்வன்பினைப் பெறாதபோது பிற செல்வங்கள் எத்தனை இருந்தும் அதில் மகிழாது அழகு எல்லாம் இழந்து அழுகின்றார்கள். அன்பாகிய செல்வம் கிட்டும்போது தமக்கு இயல்பாக உள்ள அருள் நெஞ்சத்தை இல்லறத்திலும் துறவறத்திலும் பெருக்கிக் கொண்டு அழகு மிகுந்தவர்களாய்ப் பெண்கள் விளங்குகின்றார்கள். இங்ஙனம் தம் அழகு பெருகுவதற்கும் சுருங்குவதற்கும் பெண்கள் தம் கணவர் தமக்குச் செய்யும் தண்ணளியே காரணம் என்று முடிவு செய்து வைத்துள்ளார்கள். ஆ? அம்முடிவின் அருமைப்பாடு என்னே! இத்தகு முடிவில் பெண்கள் தம் கணவரின் அன்பு தம்மீது தளரவிடாது நிலைநிறுத்திக்கொள்வதில் எவ்வளவு விழிப்பாய் இருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. என்னே பெண்ணின் பெருமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[சற்று யோசித்துவிட்டு நிற்கையில் தலைவி வருதல்]

தலைவன்:— குழந்தாய்! வெளியே சென்றுவருகின்றேன்.

தலைவி:— சரி சென்று வாருங்கள்; இதோ சமையல் முடிந்துவிட்டது. சீக்கிரம் வாருங்கள். யாரும் விருந்தினர் வந்தாலும்.

[சற்றுப் பொறுத்து தோழி வருதல்]

தோழி:— தோழீ ... ... ... ... தோழீ இ .... ... ... ...

தலைவி:— யார் அது?

தோழி;— நான்தான் உன் தோழி; இங்கேவா; அம்மா!

தலைவி:— அடே! நீங்களா? தக்க சமயம் வந்து விட்டீர்கள்;

தோழி:— எங்கே குழந்தை?

தலைவி:— குழந்தை நித்திரையாய்விட்டது.

தோழி:— என்ன? சற்று வாட்டமாய் இருக்கின்றீர்கள்?

தலைவி:— இல்லை என் தலைவர் இன்று என்னிடம் பொருள் ஈட்டும் பொருட்டு வெளியே செல்வதை ஒரு நாகரீகமான பேச்சால் உணர்த்தினர். அதை நினைந்துதான் இந்த வாட்டம்.

[விம்மலுடன் அழுதல்]

தோழி:— ஆம்; என்னைக்கண்டு உன்னை ஆற்றும்படி வேண்டினர்; விரைந்து வருவார்; உன் அன்பு



அவரை ஆட்கொள்ளும்; அத்தனை அன்பு உள்ளத்தோடு பிரிய மனமில்லாது பிரிகின்றார். தோழி! மனைவியர் கணவனது நலத்திலும் இன்பத்திலும் நல்லெண்ணம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். அந்த நல்ல எண்ணம் தான் நீ எதனை விரும்புகின்றாயோ அதனைத் தரும். மனைவியாரின் அன்பொன்றினாற்றான் வீட்டைவிட்டு வெளியே செல்லும் ஆடவரின் நன்முயற்சிகள் எளிதில் கைகூடுகின்றன. பெண்கள் இதனை நினைந்து வாழவேண்டும். ஆதலால் கலங்கேல்; விரைவில் வருவார். ஆடவரின் இந்நிலைமை உன்னாலும் என்னாலும் ஏன்? எந்த சக்தியாலுமே தடைசெய்ய முடியாது. அது அவர்களது இயற்கை.

தலைவி:— ஆம்! தோழி! நீ சொல்வது முற்றும் நேரிய உரைதான். இந்த நிலையிற்றான் இன்பத்துக்கே இடமில்லை. அப்படிப்பட்ட தலைவர் நாம் நொந்தழத் துறந்தாராயினும் பின்பு நம் இல்லத்தில் உயர்ந்த விருந்தினரை நாம் ஓம்பும்பொருட்டு அவர் அளவிறந்த செல்வத்தை எளிதாக அடைந்து திரும்பட்டும்.

தோழி.— அம்மே! உன் உரையால் உன் உள்ளம் ஆறுதல் அடைந்திருக்கிறது என்பது தெரிகின்றது, ஆறியிருத்தல்தான் கற்பு. நான் வீட்டுக்குச் செல்லட்டுமா?

தலைவி:— சரி; சென்றுவாருங்கள்.

[சற்றுப் பொறுத்து யாழ் ஒலி எழுப்பல், தலைவி உற்றுக் கேட்டுக்கொண்டு இருத்தல்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி:– யாழின் இசை கேட்கிறதே! இது யார் வாசிக்கிறது? [சற்றுப்பொறுத்து] ஓகோ! நம் குலப்பாணன் யாழ் வாசித்துக்கொண்டு வருகின்றார் போலும், அவர் வரவு நல்வரவாகுக!

[பாணன் திரையில் வெளிப்பட்டு வணங்கல்]

தலைவி:– கலைஞரே! வாழி! (விம்முதல்)

பாணன்:– தாயே! ஏன் கலங்குகின்றீர்கள், எனது இசை தங்கள் உள்ளத்தை உருக்கிவிட்டதா? அல்லது மாறுபாட்டை விளைவித்து விட்டதா? யாது செய்தது? சொல்லுங்கள்.

தலைவி:– பாணனே! இசைவாழ்வில் கலக்கமுண்டா? உண்மையை ஊடுருவிச் செல்லும் கலையில்—இசைக்கலையில் உள்ளம் உருகாது விடுமா? ஆனல்..........

பாணன்:– என்ன? ஆனல் என்று இழுக்கின்றீர்கள், தெளிவாய் உரையுங்கள். நான் தங்கள் குலப் பாணன் அல்லவா?

தலைவி:– இன்று தங்கள் இசையின் இனிமையில் இயைந்து இன்புறும் இனிய ஊழ் என்பால் இல்லை.

பாணன்:– என் தாயே? தங்கள்பால் யாது நிகழ்ந்து விட்டது.

தலைவி;– என் கண் நிறைந்த கணவன் "கடமை கடமை" என்றும் "பொருள் பொருள்" என்றும் சொல்லி என்னைத் தனிமையுற விட்டு வெளியே சென்றார்.



பாணன்;- அவர் சென்றது பலநாளா? சிலநாளா?

தலைவி;– பலநாள் என்ன? சிலநாள் என்ன? எல்லாம் ஒரே நாள்தான். கடமை காதலையும் கடைபோகச் செய்துவிட்டது. கடமைக்கும் இவ்வளவு வலியுண்டா பாணரே?

பாணன்:– தாயே! இதனல் போலும் தாங்கள் அங்கமெல்லாம் தளர்ந்து அழகு சிதைந்து அமைந்திருக்கின்றீர்கள். இஃது என்ன கடமை? நம்மைக் காக்கும் குடும்பமல்லவா இக்குடும்பம். இதனைக் கண்கொண்டு காண்பதா? சரி; இருக்கட்டும். எம் தலைவர் கடமை என்று உம்மைத் தனியேவிட்டுச் சென்றால்; நானும் கடமை என்று அவரிடம் நேரே போய் அழைத்து வருகின்றேன். தாயே! கடமையைக் கடமையால் அல்லவோ வெல்ல வேண்டும். தாயே வரட்டுமா?

தலைவி;– நல்லிசைப் பாணரே! நல்லிசையோடு வாருங்கள்.

[பாணன் செல்லல் தலைவி தனக்குள்ளே]

என்னே! பாணனின் பண்பு; பிறர் துன்பம் பொறாப் பேரன்பு என்னே! மனிதப் பண்பென்றால் இஃதன்றோ.

[சற்றுப் பொறுத்து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:— அம்மா ... ... ... தோழி!

தலைவி:— யாரது? என் தோழியா?

தோழி:— என்ன தங்காய்! எப்படி இருக்கின்றாய் என்று பார்க்க வந்தேன்; இன்னும் தலைவர் வரவில்லையா?

தலைவி:— ஆம்; அவர் இன்னும் வரவில்லை; ஆனால் எங்கள் குடும்பப்பாணன் வந்தார். அவர் மற்றப் பாணர்களைப்போல் ... ... ...

தோழி:— என்ன!, உன் தலைவரைப் பரத்தையர் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகக் கூறினானா?

தலைவி:— தோழி! அதுதான் இல்லை. இவர் ஒரு புரட்சிப்பாணன். பாணர் குலத்தில் உதித்த மாணிக்கம் எனலாம்.

தோழி:— என்ன? பாணர்குல மாணிக்கமா? என்ன பெரிய வியப்பாயிருக்கின்றது. அவன் என்ன செய்தான்.

தலைவி:— ஆம்; தோழி! ஆச்சரியப்படவேண்டாம். அவர் பாணர்குல மாணிக்கம்தான். ஐயமில்லை. அவர்; கலைவாழ்வின் கடமை என்ன? என்று எப்போதும் தம் கருத்தைச் செலுத்துபவர். கலை, கலைக்கல்ல கருத்துக்கே என்பவர்!

தோழி— இஃதெல்லாம் உன் ஆராய்ச்சியா? கற்பனையா? அல்லது இப்படியான ஒரு கலையுலகைக் கனவுகாண்கின்றாயா?



தலைவி:— இல்லை; தோழி! தானே என் தலைவரிடம் சென்று நமது நிலைமையைக் கூறி அவரை அழைத்து வருவதாக இதயத்துடிப்போடு இயம்பினார்.

தோழி:— அப்படியா? புரட்சிதான்! புல்லின் நுனியில் வயிரம்பிறக்கும் போலும். நான் எல்லோரையும் ஒரேமாதிரி நினைத்தலும், எல்லோரையும் போல ஒருவர் இருப்பார் என்று துணிதலும் எப்படியாகும்?

தலைவி:— ஆம் தோழி! வாடிய என் தோள்களையும் அழகு இழந்த என் கண்களையும் பார்த்துத் தமக்குள்ளே வருந்தினார்.

[இப்படி இருக்கையில் தலைவன் வருதல்]

தலைவன்:— ஆம் கண்ணே! கலை வாழ்க!!

தோழி:— இதோ உன் தலைவர் வந்துவிட்டார். நான் செல்கின்றேன். இனி உன் கவலை எல்லாம் பறந்துவிடுமல்லவா?

[தோழி போதல்; சற்றுப் பொறுத்து தலைவியும் அகல.]

தலைவன்:- பெண்ணே! என்ன என்னைக் கண்டவுடன் அடுக்களைக்குள் செல்கின்றாய்.

தலைவி:- தங்களைப்பார்த்தால் கலைஞர் மாதிரி இருக்கின்றீர்கள். எனக்கும் தங்கள் கலைக்கும் எவ்வளவோ தூரம். அதப்படிக் கலைதான் எனக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:— உனக்கேன் இவ்வளவு ஊடல்? எங்கே குழந்தை. நமது பாணர் வந்தாரா?

தலைவி:— நம் கலைமணியையா? கேட்கின்றீர்கள்?

தலைவன்:— ஓகோ; அவருக்குக் கலைமணிப்பட்டம் நீயே கொடுத்துவிட்டாயா? இப்போ நீயும் கலைஞராகி விட்டாயே.

[தலைவி சிரித்தல்]

தலைவி:— ஆம்; நானே கொடுக்கின்றேன். இது வரையில் அவர் கையில் கலை கண்டேன். இன்று அவர் உரையிலும் உள்ளத்திலும் கலை கண்டேன். ஆதலால் அவரைக் கலைமணி என்று கூறுது வேறு என்னென்று அழைப்பது.

தலைவன்;— சரி! அவருக்கு மணிகள்மட்டும் கொடுத்தால் போதுமா? வேண்டுமானல் இரத்தினங்களும் கொடுக்கலாம். அதோ! யான் கொண்டு வந்த இரத்தினங்கள் இருக்கின்றன.

தலைவி:— தங்களிடம் பாணன் வந்தாரா?

தலைவன்:— ஆம்! என்னைத் தம் தலைவனுக அவர் காணவில்லை. அப்போது அவரைப்பார்த்தால் பாணகுல மனிதனுகவும் நான் பார்க்க முடியவில்லை.

தலைவி:— தங்களிடம் என்ன கூறினுர்?

தலைவன்;— அதை ஏன் உரைப்பான்? அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்.



தலைவி:— ஆகா; தாங்கள் அவர்களிடம் பல தாழ்களைப் போட்டுவிட்டீர்களோ?

தலைவன்:— கடமை வேகத்தில் பல கடிய தாழ்களை நானும் இட்டேன். அவரும் தன்கலைக் கடன் இது! கலைக்கடன் இது!! என்று மேலும் மேலும் இடித்துரைத்தார். அவருக்கும் கடமை எனக்கும் கடமை. இரண்டு கடமைகளும் ஒன்று சேர்ந்தால் ஒரு உரிமை பிறக்குமல்லவா?

தலைவி:— தங்கள் கடமையில் கயமை என்னும் மாசு பிடித்திருக்கும், அவர் கலைக்கடமையில் அப்படியல்ல. தங்களைப்போன்றவர்களின் கடமைகளின் கடமையில் கலந்த களங்கத்தை அழிக்க வல்லது கலைக்கடமை. அவர் உரைத்த உண்மைகளை உரைக்கமாட்டீர்களா?

தலைவன்:— "கண்ணே! உரையை ஒருவாறு உரைக்கலாம். ஆனல் அவர் உரைக்கும்போது அவர் உள்ளத்தின் உண்டான உணர்வு நிலைகளை எப்படிக் கூறமுடியும்? இதோ என் கையில் இருக்கும் யாழைப்பார்! இவ்யாழின் இனிமையும் இருப்பும் இக்குடும்பத்தின் இருப்பிலும் உள்ளது. இக்குடும்பம் இனிதிருந்தால் இவ்யாழும் இனிதிருக்கும். உம் தலைவி உள்ளம் உடைந்து உயிர்வாடி இருக்கும்போது அதைத் தீர்க்கமுடியாத என் கலை வாழ்வு இருந்தென்ன? யாம் நும் குடும்பப்பாணனுய் அமைந்துமென்ன? இனி உமக்கு நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணனுமல்லன். நீரும் எம் தலைவனுமல்லன்" என்று உரைத்துவிட்டார்.

தலைவி:– அன்ப! பாணனின் பண்பும் நண்பும் என்னென்பது?

தலைவன்:– கண்ணே! பாணனின் பண்பும், நம் காதலின் கனிவும் கலையின் களிப்பும் எல்லாம் இந்தப்பொருளில் அடங்கும். ஆள்வினையே உலகை ஆக்குவது. அது இருக்கட்டும்; கண்ணே!

நான் வந்த வழியில் பார்த்த பொருள்களெல்லாம் உன்னையே நினைப்பூட்டின. நல்ல நெற்றியை உடையவளே! உன்னைப்போலவே சாயல் அழகு காட்டி மயில்கள் ஆடின. உன் நல்ல நெற்றியின் நறுமணத்தைப் போலவே முல்லையும் மலர்ந்து மணம் பரப்பிற்று. உன் பார்வையைப்போலவே மருண்டு மருண்டு மான்கள் நோக்கின. இவ்வாறு உன்னையே நினைந்துகொண்டு. மேகத்திலும் விரைவாக நான் வந்தேன்.

தலைவி:– என்ன மேகத்தின் விரைவாக வந்தீர்களா? அன்ப! பொதுவிடத்தின்கண் உள்ள பலா மரங்களின் சுளை விளைந்த இனிய பழங்களைக் குரங்குகள் வயிறுமுட்டத்தின்னும். பிறகு அக் குரங்குகள் பக்கத்தில் புல் மேய்ந்து கொண்டிருக்கும் காட்டுப்பசுக்களிடம் சென்று அவற்றின் மடியைக் கன்றுகள்போல வருடிப் பால்



குடிக்கும். அப்பசுக்களும் தம் கன்றுகளுக்குப் பால் ஊட்டுவனபோல விரும்பிச் சுரக்கும் இத்தகைய மலைவள நாடல்லவா ... ... ...?

[பாணன் வருதல்]

தலைவி:– அன்ப; இதோ! நம் பாணரும் வந்துவிட்டார். கலைமணியே வருக! வருக! தங்கள் கலைமையும் வாய்மையும் வாழ்க! வெல்க!!

பாணன்:– தலைவர் வந்துவிட்டாரா? தாயே! எப்படி?

தலைவி:– ஆம்; பாணரே. கடுமையான வெயிற்காலமாக இருக்கட்டும். அப்போது இனிய தென்றல் வீசினால் அஃது எப்படி இருக்கும்? அது உடம்பில் பட்டளவிலே இனிமையைத் தருகின்றது. அதுபோன்று பாணரே! தலைவரின் இனிமையாம்.

பாணன்:– அப்படியா? நன்று! நன்று!! இதுவன்றோ இல்லறம்! பொருள்வாழ்வு! உலக வாழ்வு.

(பாணன் யாழ்வாசித்தல், திரை வீழ்தல்)

பொருளும் கலையும் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கருத்தும் கருமமும்

**இடம்:-** வீட்டின் புறத்தே வேங்கைமரம் அதிகமுள்ள சோலை.

**கூத்தர்கள்:-** தோழி, தலைவி; தலைவன்.

[திரை திறத்தல். தலைவியும் தோழியும் சோலைக்குள் உலாவிப் பூக்கொய்துகொண்டும் பூவினால் எறிந்து விளையாடிக்கொண்டும் ஓரிடத்தில் இருத்தல். தோழி தலைவியைப் பார்த்து]

தோழி:— நங்காய்! மனமுடைந்து உருகுவான் போல் ஒருவன் என்னை நோக்கிப் பலமுறை வருகின்றான்.

தலைவி:— நீ தெருவிலே போகின்றவர்களை வருகின்றவர்களைக் கண்டு கவலைப்படுகின்றாய். உன்னைப் பார்த்தால் பிறர் வருத்தம தம் வருத்தமாய்க் கருதும் பெருமக்கள் போலிருக்கின்றாயே!

தோழி:— இல்லை; எனக்கு ஒரு பெரிய ஆராய்ச்சி.

தலைவி:— என்ன ஆராய்ச்சி?

தோழி:— இந்த உலக வாழ்க்கையின் முறைமையைப் பற்றி.

தலைவி:— ஏதாவது ஆராய்ச்சியிற் கண்டாயா?

தோழி:— போடி; எப்போதும் உனக்கு என்மீது நகைதான்.



தலைவி:- இல்லை! இல்லை!! உண்மையாகத்தான் வினவுகின்றேன்.

தோழி:— உண்மையாகத்தான் வினவுகின்றாயா?

தலைவி:- ஆம்! ஆம்!! (என்று அவள் தோளைப் பிடித்து அசைத்தல்)

தோழி:— உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்ப் பிறக்கின்றன. வேறு வேறாகத் தோன்றுகின்றன. ஆனால் ஒன்றை ஒன்று அவாவியபடியே இருக்கின்றன. இதனால் ஆண் உயிரும் பெண் உயிரும் தொன்றுதொட்டே தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன என்பது பெறப்படுகின்றது. ஆதலால் உண்மையான கணவனும் மனைவியும் ஒருயிருடையராகவே கருதப்படுவாரன்றோ.

தலைவி:— தோழீ! இதில் என்ன ஐயம்? இயற்கையின் ஓர் அழகிய சித்திரம் இல்வாழ்வு முறை. அச்சித்திரத்தின் உயிரே காதல். இன்பம் துய்க்கவேண்டுமானாலும் இல்லறம் இயற்றவேண்டுமானாலும் இருவராகப் பிரிந்து நின்றே கடனாற்றவேண்டியிருக்கின்றது. ஆதலாலேயே இவ்வுலகில் ஒருவர் இருவராகப் பிறக்க நேரிட்டது. இப்படிப்பிறந்தும் உலக காரியங்களைப் பொறுப்புடன் செய்யும்போது ஒரோவொருகால் ஒருவரையொருவர் பிரிந்து தனித்து நிற்கவேண்டியிருக்கின்றது. ஆதலால் தனித்து ஒருவராய் நிற்கும் இக்கொடுமையில் இருந்து தப்புவதற்கு ஒருவழி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:—ஆ! அது என்ன வழி! நீ பெரிய அறிவாளி தான்.

தலைவி:— நீ என்ன? பழிக்குப்பழி வாங்குகின்றாய் போலும்.

தோழி:— (சிரித்து) என்ன நகையாடுகின்றேன் என்று நினைக்கின்றாயா? அப்படி ஒன்றுமில்லை.

தலைவி:—இந்த உயிர் உடலைவிட்டுப் பிரியும்போது என்ன எண்ணத்தைக் கொள்ளுகின்றதோ. அதுவே மறு பிறப்பிலும் நிகழும். ஆகவே இப்பிறப்பில் இறக்கும்ஞான்று இருவரும் ஒன்றாகப் பிரியாது இருக்கவேண்டும் என்று எண்ணவே மறுபிறப்பில் எப்போதும் இணை பிரியாதிருக்கலாம் அல்லவா?

தோழி:—அடி! சரியான வழிசொல்லிவிட்டாய்! இந்த விதமான ஆராய்ச்சி நீ எப்போது செய்தாய்? ஆண் பெண் இயல்பு நன்றாக அறிந்திருக்கின்றாய். ஓகோ! அதுதானே இப்போது காதல்! காதல்!! என்கின்றாய்.

தலைவி:—ஆகா, நல்லாய் இருக்கிறது. என்னைச் சோதனை செய்கின்றாயா? என்னிடத்தில் உள்ள காதல் அறிவைக் காண்பதற்குப் போட்ட கேள்வியா? சரிதான்; நல்லாய் இருக்கிறது! போடி, போ; நான் வீட்டிற்குப் போகின்றேன். நான் என்ன, இன்னும் குழந்தையா? நீ பெரிய சூழ்ச்சிக்காரி; இந்தச் சூழ்ச்சி எல்லாம் என்னிடம்தான் காட்டுவாய் போலும்!



தோழி:—வேறு யாரிடம் காட்டவேண்டும்?

தலைவி:—அது ... யார் ... .... என்று சொல்ல வேண்டுமா?

தோழி:—ஓகோ! இப்போதுதான் ஒரு நினைவு வருகிறது.

தலைவி:—அது என்ன? இரவு வரப்போகின்றது. நாம் வீடு செல்லவேண்டும். (இந்த நேரத்தில் தலைவன் ஒளித்துக் கொண்டிருத்தல்.)

தோழி:—அம்மா! நம் தலைவர் செயல் நல்லாய் இருக்கிறது.

தலைவி:—அவர் நல்லதைத் தான் செய்வார். அது தெரியாதா?

தோழி:—அவர் செயல் மலைப்பிளவில் விழுந்த பலாப் பழத்தின் கதையாக இருக்கிறது.

தலைவி:—ஆகா! இதற்குமா உன் ஆராய்ச்சி? இனிக் கதையோ என்னிடம் கேட்கப்போகின்றாய் போலும்.

தோழி:—இல்லை; பிறருக்கும் பயன்படாதபடி மலையிடுக்கில் விழும் பலாப்பழம் அவ்விடுக்கிலுள்ள தேன் கூட்டையும் அழித்து விடுவதுபோல இவர் வந்து தந்த அழகை! இவரே தமது ஒரே செய்கையால் வாங்கிக் கொள்வதோடு இதற்குமுன் இருந்த நம் இயற்கை அழகையும் சிதைத்து விடுவதற்கான ஒரு நினைப்பும் நினைக்கின்றார் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி:—அது என்ன நினைப்பு? (யோசித்துக் கொண்டே கேட்டல்!)

தோழி:—அம்ம! அப்பம் என்றால் பிட்டுக் காட்ட வேண்டுமா?

தலைவி:—போடி, போ! காதலில் ஒரு குண்டூசிதானும் மலர்தானும் குறுக்கிட்டாலும் அங்ஙனங் குறுக்கிடும் காலம் பல ஆண்டுகள் கழிந்தாற் போன்றதன்றோ? அன்றிலின் இலக்கணத்தை நீ அவருக்கு நினைப்பூட்டு. எனக்கோ நடுக்கமாகின்றது. வீடு செல்கின்றேன். (என்று பறித்த பூவைச் சிந்திவிட்டு வீடு செல்லல். தோழி சிந்திய பூக்களைப் பொறுக்கிக்கொண்டிருக்கத் தலைவனும் வந்து பூக்களைப் பொறுக்கியபடியே)

தலைவன்:—ஏன் இவ்வளவு துன்பம்? நானும் இதில் பங்கு பற்றிக்கொள்கிறேன். (தோழி திரும்பிப் பார்த்து எழுந்திருத்தல். தலைவன் பூக்களைப் பொறுக்குதல்.)

தோழி:—சரி! பெரிய பொறுப்புத்தான். தங்களுக்கேன் இந்தக் காரியம். (தலைவன் பூப்பொறுக்குதலை நிறுத்துதல்.)

தலைவன்:—ஏன் இந்தப் பூக்கள் சிந்திக் கிடக்கின்றன? ஏதாவது தீங்கு வந்ததா? (என்று நாலு பக்கமும் பார்த்தல்).

தோழி:—நாலு பக்கமும் எதைப் பார்க்கின்றீர்கள்? என் விருப்பப்படி நீங்கள் ஒன்றும் நடப்பதில்லையே? இப்பொழுது தலைவிக்கு ஒரு வருத்தமான காரியமென்றால் அதனை உடனே நீங்கள் தீர்த்துவிடக்கூடும்.



தலைவன்:—என்ன "விடக்கூடும்?" அது என்ன 'கூடும்'? தீர்த்துவிடுவேன் என்றே சொல்லுங்கள்.

தோழி:—"சொல்லுதல் யார்க்கும் எளிது" (இடைமறித்து)

தலைவன்:—"சொல்லிய வண்ணம் செய்தல் அரிது" இதுதானே தாங்கள் சொல்லப்போவது.

தோழி:—(பக்கம் திரும்பி) ஆம்! ஆம்!!

தலைவன்:—ஆ! தலைவி வருந்தவும் நான் பார்த்துக் கொண்டிருப்பேனா? அந்த வகையில் ஐயம் கூடவா?

தோழி:—ஐயம் இருந்தால் இவ்வளவு தூரம் தங்களுடன் உரையாடுவேனா? தலைவிக்குத் தீங்கு வர ஒருகாரியம் நீங்கள் செய்யமாட்டீர்கள் என்பது உறுதிதானே?

தலைவன்:—முக்காலும் உறுதியே?

தோழி:—என்ன! அப்படியானால் காரியத்தை விரைவில் நிறைவேற்றுங்கள்.

தலைவி ஒரு காரியத்துக்காக இப்போது நடுநடுங்குகின்றாள். அந்த நடுக்கத்தாலேயே இப்பூக்களைச் சிந்தி விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:—(திடுக்கிட்டு) ஆ! இது என்கண் சிந்திய சிதைபூக்களா? (எடுத்து கண்ணில் ஒற்றுதல்).

தோழி:—நீங்கள் இந்தப் பூக்களை ஒற்றுவதிலும் பார்க்க அவள் நடுக்கத்தை நீக்குதல் அல்லவா நேரிய முறை.

தலைவன்:—ஆம்! தம்மைச் சேர்ந்தவன் நடுக்கத்தைத் தீர்த்து வைப்பது ஆடவரின் கடமை ஆ! (என்று தன் உடைவாளை உருவுதல், நாலா பக்கமும் பார்த்தல்).

தோழி:—வாளை உறையில் போடுங்கள்; அப்படியெல்லாம் வாளுக்கு ஒன்றும் தேவையில்லை. (தலைவன் வாளை உறையுட் போடுதல்) பெரிய யானையிடம் புலியைக் கொல்லும் தன்மையிருப்பினும் புலி தன்னை எங்கே கொன்று விடுமோ என்று அஞ்சி நல்ல இயல்புடைய யானை இனத்தை நாடிச் செல்வதுபோல; இந்த இரவு வேளையில் கொடிய விலங்குகளுக்குத் தப்பி நல்ல இயற்கையுடைய நம் தலைவியை நாடுதல்தான் தலைவிக்கு மிகவும் நடுக்கமாக விருக்கிறது. அவளின் இந்த நடுக்கத்தை நீங்கள் அன்புடன் தீர்த்து வைக்கவேண்டும்.

தலைவன்:—ஆகா! ... ... ... இப்படியா காரியம்! நீங்கள் கவலைப்படவேண்டாம். தங்கள் எண்ணம் நிறைவேறும். தாங்கள் செல்லுங்கள். (தோழி போதல் தலைவன் அங்கும் இங்கும் போதல். யோசித்தல், தனக்குள் கூறல்).



தலைவன்:—தலைவியின் நடுக்கத்தைத் தீர்ப்பதானால் இரவில் இப்படி வருதலை நீக்க வேண்டும். பகலில் வருவதற்குத் தலைவிக்கோ வீட்டில் காவல் மிகுதியாயிருக்கிறது; பிரிந்திருப்பதென்பதோ இருவருக்கும் இயலாது. இப்படிப் பிரிந்திருந்தாலும் தலைவி பிரிவால் உடல் மெலிந்து வாடுவாள். அது புறத்தார்க்குத் தெரியும். உடனே தாய் மருத்துவரை அழைப்பர். அது சரிவரா விட்டால் கோயில் வேலனை அழைப்பர். அல்லது வேறு திருமணம் செய்யவும் முயல்வர். எல்லாம் தொல்லையாய் முடியும். இவைகளுக்கு ஒரு வழி திருமணம்!

[சரி என்று தலைவன் போதல். மேளக்கச்சேரியின் இசைத் தட்டைப் போடுதல்].

[திரை வீழ்தல்]

கருத்தும் கருமமும் முற்றிற்று.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. "இல் இன்பம்"

இடம்:- இல்லறத்தான் வீடு,

கூத்தர்கள்:- சிவசுந்தரன், சிவகாமி, செவிலித்தாய், நாலு வயதுக் குழந்தை, விருந்தினன்.

[சிவசுந்தரன் திருக்குறளை ஆராய்ந்து கொண்டிருக்கத் தலைவி சிவகாமி குழந்தையைத் தாலாட்டத் திரையைத் திறத்தல்]

சிவகாமி:- ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆரிவரோ
காதற் கனிரசமே காண்போர் வினைசுகமே
மேதகுவென் மன்னவர் மெய்யேநீ! கண்வளராய்
எழுதாத சித்திரமே ஏனடா இந்தமுகை
பழுதிலாப் பாக்கியமே பக்குவமாய் நீயுறங்கு.

சிவசுந்தரன்:-(தன் மனைவியைப் பார்த்து) கண்ணே! நண்பகலாயிற்று. ஏரிக்கரைப் பக்கம் போய் வருகிறேன் சமையல ... ... .... ....

சிவகாமி:- ஆம்! சோறு வடிக்கப் போகிறேன்; தயிர்க்குழம்பு வைக்க வேண்டியதுதான் தாமதம்.

சிவசுந்தரன்:- சரி விரைவாய் முடித்துவிடு.

[என்று கூறிவிட்டுச் செல்லுதல். தலைவி சோற்றை வடித்துவிட்டுத் தயிரைக்குழம்பை ஆக்குவதற்கு அடுப்பில் தாளிதச் சட்டியை வைத்துவிட்டுத் தயிரைக் கையால் பிசைகிருள். தாளிதச் சட்டியில் இட்ட கடுகு கருகி மணக்கிறது. உடனே தலைவி எழும்புகிருள். அவள் உடுத்திருந்த கோடிச் சேலையின் முந்தானை அவிழ்ந்து வீழ்கிறது; அத்தயிர் பிசைந்த கையாலே கோடிச் சேலையென்றும் கவனியாது எடுத்து உடுக்கின்ருள் தயிரை ஊற்றி அகப்பையால் துழாவுகிருள். பின்பு இறக்குகின்ருள். வீட்டை ஒழுங்குசெய்கிருள், தலைவன் வருகிருன்]

சிவசுந்தரன்:-பிள்ளாய்! விருந்து!! [தலைவி இக்குரல் கேட்டு வாசலில் வந்து நின்று].

சிவகாமி:-விருந்தினரே வாருங்கள்! (இருக்கையைக் காட்டி) வாருங்கள்!! அமருங்கள் [என்று கூறிவிட்டு விருந்தோம்பலுக்கு ஆயத்தம் செய்துவிட்டு விருந்தினரை அழைத்து உணவு இடுகின்ருள். விருந்தினனும் உண்ணுகின்ருன். உண்டபின் தாம்பூலம் தரித்துக் கொண்டிருக்கின்ருன்].

சிவசுந்தரன்:-தாங்கள் எங்கு செல்கின்றீர்கள்?

விருந்தினன்:-நான் வடநாடு சென்று பொருளீட்டச் செல்கின்றேன். வரும் வழியில் தங்களைச் சந்தித்தேன்.

சிவகாமி:-ஆடவர்கள் அரிவையர்களை மணந்தபின் அரிவையர்களைப்பற்றிச் சிந்தனையே இல்லை.

விருந்தினன்:-(இரு காதுகளையும் பொத்தி). இல்லை! இல்லை!! துறவோர், விருந்தினர், சுற்றத்தோர் தெய்வம் என்ற இவர்களுக்கெல்லாம் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழப் பொருள் வேண்டாமா? இவ்வுலகின் இனிமை, இந்த உடலின் உண்மை உதவியாலன்றோ உருப்பெறுகின்றது. உதவியிலா வாழ்க்கை ஊண் வாழ்க்கையே. இத்தகைய கற்பு நெறியில் பொருட் கவலையே பெருகும். பொற்புடைய காதலியின் கவலை நீறுபூத்த நெருப்புப்போலிருக்கும். அறன் தலைப்பட்ட அரிய வாழ்வும், பிறன்கடைச் செல்லாப் பெருநிலையும் உடைய ஆடவர், ஆள்வினையையே உயிரெனத் தழுவுவர்.

சிவகாமி:—ஐயா! களவுக் காலத்தில் ஆடவர்கள் அரிவையர்களின் கையைப் பிடிக்குங்கால் பிரியேன் பிரியிற் தரியேன் என்றும்; "ஆடவர்களே அரிவையரின் உயிரென்றும் எல்லாம் கூறிய வாய்மை வழுப்படுமே; வாய்மை வடுப்பட வாழுதல் அறம் தலைப்பட்ட அரிய வாழ்வா?

விருந்தினன்:—தாயே! தாங்கள் கூறுவது உண்மை. பிரிவு என்றால் உள்ளத்தால் பிரிதலன்றோ பிரிவு. நான் முன் சொல்லியதுபோல நீறுபூத்த நெருப்புப்போல என் நெஞ்சம் இருக்கின்றது என்றேன். நான் சொல்லும் வழிப்பாதை தலைவி என்ற நினைவுப் பாதையில் அதில் ஆள்வினை என்ற ஊன்றுகோலை ஊன்றியே நடக்கின்றேன், உள்ளப் பிரிவு இல்லையாதலால் உண்மையினின்று மாறுபட்டதாகாது. பொருளே காதலின்பத்துக்குத்



தேவை. பொருளில்லாக் காதலின் இன்பம் எவ்வாறு கனிவு பெறும்?

சிவகாமி:—காதலின்பம் பொருளால் எவ்வாறு கனிவு பெறும்? பொருளிருந்தும் காதலில்லாவிட்டால் இருளன்றோ? பொருளில்லாவிட்டாலும் அருளுடைக்காதல் அகத்திருந்தால் பொருளாற் பொலியும் காதலின்பத்திலும் அருளாலமையும் அகவின்பம் அத்தனையும் இவ்வுலகையல்ல அவ்வுலகையும் ஈர்க்குமன்றோ? வெள்ளம் போன்ற காதலை ஒரு கையால் தழுவி மற்றைய கையால் இருவருக்கும் (தலைவன் — தலைவி) இருக்கும் ஒரே ஆடையை உடுத்துக்கொண்டு பிரியாது தம் வாழ்நாள் முழுவதும் வாழ்பவர் வாழ்க்கையே வாழ்க்கை. அதுதான் இல்வாழ்க்கை. இளமையும் காதலும் ஒருங்கே இயையப்பெற்றவர்கள் திரிநிலை பெற்ற திருவை நினைப்பரோ? இழந்த பொருளைத் திரும்பப் பெறலாம்; இளமையை மீண்டும் இயையப் பெறலாமோ?

விருந்தினன்:—தாயே! தனிமையின் கொடுமையைத் தாங்கள் கூறினீர்கள். அந்தத் தனிமையிலும் இன்பம் உண்டு? பின் தனிமை தளர்ந்து தழுவும்போது தழைக்கும் இன்பம் இல்இன்பத்தின் இணையிலாததன்றோ? இனிப்புத் தின்ற வாய்க்குச் சிறிது உறைப்புத் தேவையல்லவா? அதுபோல் பிரிவும் சிறிது வேண்டியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடடே! நேரம் போயிற்று. மற்று வடநாட்டு வழி நண்பர்கள் என்னைத் தேடுவார்கள். நான் வரப்போகின்றேன். வணக்கம்.

(எழுதல், தலைவனும் தலைவியும்எழுந்து நின்று)

சிவசுந்:—திரும்பி ஊர் செல்லும்போது விருந்துக்கு வாருங்கள்.

விருந்தினன்:—ஆம்! இவ்வளவு சொல் விருந்தோடு செறிந்த மனைவிருந்தை மறுப்பேனு? கட்டாயம் வருவேன். வணக்கம்.

[கைகூப்பியபின் செல்லுகின்றுன்].

சிவசுந்;—கண்ணே! நீ பேசியதைப் பார்த்தால் அவ் விருந்தினனுக்கல்ல, எனக்குப் போலிருக்கிறதே.

சிவகாமி:—(புன்சிரிப்போடு) ஆம்; அதற்கென்ன ஐயம்! ஆடவர் குணம் பெண்களுக்குத் தெரியாதா?

சிவசுந்:—நன்றுகத்தான் தெரியுமென்று தெரிந்து கொண்டேன். சரி; இப்பொழுது நேரம் ஒரு மணியாகிறது. இனி விருந்தினர் வரார். நாங்கள் உண்போம்.

[தலைவன் கால்களைத் தலைவி கழுவிவிட்டுத் தலைவனிருக்க ஆசனமிட்டு இலையிடும் இடத்தை நீரால் தெளித்து அதன்மேல் இலையை வைத்து அமுது படைத்துத் தயிர்க் குழம்பு இட்டு நிற்கின்றுள். தலைவன் உண்கிறுன். தலைவியை நிமிர்ந்து பார்த்து]

தலைவன்:— தேவர் அமிழ்தினும் இனிது.



(நிறைய உண்டபின் எழுகின்றுன். இவ்வாறு உண்ணும்போது தலைவியின் வளர்ப்புத்தாய் வந்து தலைவனின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து நின்றுள். தலைவன் தலைவியின் செவிலியைக் கண்டதும்)

சிவசுந்:—உங்கள் அம்மா வந்துள்ளார்.

(இதற்கிடையில் செவிலித்தாய் மகளைத் தழுவுகின்றுள். தலைவனும் வீட்டை விட்டு விலகுகின்றுன்.)

செவிலி:—என் கண்ணே வாழிய பெரிதே!

சிவகாமி;— என்ன அம்மா! இவ்வளவு விரைந்து வந்துவிட்டீர்கள்?

செவிலி:—விரைவாகவா ... .... சரி இருக்கட்டும். இது என்ன? உன் முந்தானை ஈரமாயிருக்கிறதே.

(முந்தானையைச் செவிலி மோந்து பார்க்கின்றுள்.)

என்ன! தயிர் மணக்கின்றதே:

சிவகாமி:—ஆம் அம்மா; இவ் ஈரம் தயிர்ப்பட்ட ஈரம். இன்று தயிர்க்குழம்பு வைத்தேன். கடுகு கருகும் என்றெண்ணி எழும்பும்போது சேலை அவிழ்ந்து விட்டது. அதே கையால் புது ஆடையென்றும் கவனியாது தயிர்க் குழம்பு கெட்டுவிடப்போகிறதென்று உடுத்தேன். என் கணவன் மகிழ்ந்து உண்பதிலும் என் ஆடை பெரிதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிலி:—ஆகா! அப்படியா? (என்று நெற்றியை நீவி) உன் கணவன் உண்ணும்போது "தேவர் அமிழ்தினும் இனியது" என்று கூறக் கேட்டபோது நான் இங்கேதான் இருந்தேன். உன்னை வளர்த்த கை ஒருமுழம் வளர்ந்துவிட்டது. விரைந்து வந்தபடியாலன்றோ இவ்வார்த்தையைக் கேட்டு உன்னை வளர்த்த உள்ளம் குளிர்ந்தது. கணவன் களிக்க, விருந்தினன் வியக்க, அடிசில் ஆக்குவதே அறிவுடைப் பெண்டிரின் ஆண்மை. நீயோ இளையாள். இவனோடு வருவதற்குமுன் ஒக்கலையில் இருந்தே பாற்சோறு உண்டாய் அல்லவா? விளையாடிய பந்தும், இழைத்த சிற்றிலும் இன்னும் கெடவில்லை. அவைகளைக் காணும்போதெல்லாம் உன் நிலையை உன்னி உன்னைப் பெற்றாள் பெரிதும் இரங்குவாள். ஆதலால் நீ எவ்வாறு இல்லறம் ஆற்றுகின்றாய் என்றறிய வந்தேன், நல்ல நேரத்தில் வந்து உன் இல்லற இன்பம் கண்டேன். உன் தாய் வழி பார்த்துக்கொண் டிருப்பாள். எனக்கு உன் இன்பங்கண்டு என் மடிவயிறு மலர்ந்தது. கண்ணே! நான் சென்றுவருகின்றேன்.

[செவிலி செல்கிறாள், தலைவன் வருகின்றான். தலைவி உண்கின்றாள். தலைவன் எட்டிப் பார்க்கிறான்]

தலைவன்:— சாப்பிடுகின்றாயோ சாப்பிடு.

## காட்சி — 2.

சிவசுந்:—கண்ணே! இன்று என்னுடைய தோழன் வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிதே.



சிவகாமி:—சரி! சரி! புதுமணம் பூத்த எங்களிடம் அவர் வருதல் நல்லதல்லவா? அவரை நாங்கள் கண்டு ஏறக்குறைய மூன்றுவருடமிருக்கும்.

சிவசுந்:—ஆம், ஆம்; மூன்று வருடம் இருக்கும்.

[தலைவன் பிள்ளையுடன் விளையாடிக்கொண்டு இருத்தல்]

தோழன்:—(வருதல்) உழுவல் அன்ப! வணக்கம்.

சிவசுந்;—வணக்கம் (ஒருவரை ஒருவர் தழுவுதல்) இப்பொழுதுதான் உன் வருகையைச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

தோழன்:—அப்படியா? எப்படிச் சுகம்? மகன் உன்னைப்போல் இருக்கின்றானே.

சிவசுந்:—ஆம். (தலைவி வருகிறாள்) பார்த்தீர்களா? நம் தோழனை (தலைவி நாணுற்றுத் தலை கவிழ்ந்து புன்முறுவல் செய்கிறாள்.)

சிவகாமி;—தங்களைக் கண்டு பல நாட்களாய் விட்டன. எங்கள் பழைய விருந்தினர்களில் தாங்கள் தான் எங்களைச் சிறிது மறந்தீர்கள் போலும்.

தோழன்:—இல்லை! இல்லை!! இஃதென்ன உங்கள் கேள்வி; சில நூல்கள் ஆராய்ச்சி செய்வதற்காக வேற்றூருக்குப் போனேன். அதனாற்றான் இப்படியாயிற்று; நான் அறிவில் இன்பம் காண்கின்றேன் நீங்கள் ஆள்வினையில் இன்பம் காண்கின்றீர்கள்.

சிவசுந்:—(தலைவியைப் பார்த்து) கண்ணே! இல்லறத்தில் இல்லாத ஆடவர்கள் சிலை எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழனைப் பார்த்தால் தெரியவில்லையா? ஆளின் உரு, நிறம், தோற்றமெல்லாம் ஞானிகள் தோற்றமே. களவு வாழ்வு வாழும்போது இருந்ததற்கும் இப்பொழுது இருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம். அறிவைத் தேடுபவர்களுக்கு ஆண்டவன்தானே நண்பன்; நாங்கள் எப்படி நண்பராக முடியும்.

[தலைவி செல்லல்[

தோழன்:—ஆம் உண்மை. உங்கள் இருவரையும் பார்த்தாலுமே இப்போ எவ்வளவோ வித்தியாசமாய் இருக்கின்றீர்கள். அறிவில்லாத ஆள்வினை உலகில் — உழைப்புலகில் நீங்கள் எங்களைப் போன்றவர்களுக்கு நண்பர். இதில் ஐயமில்லை,

சிவசுந்;—என்ன எங்களில் மாற்றமா? அப்படியொன்று மில்லையே. அன்ப! புற அழகு அழகுக் கோயிலுக்கு ஒரு நுழைவாயில் மட்டுமே. நான் என் காதலியைக் களவில் மணந்தபோது அந்த அழகு குறைவற்ற முழு நிலாவாகத்தான் இருந்தது; அதன் கண்ணொளியில் என் பழைய வாழ்வின் வடுக்கள் அழிய, நான் புது வாழ்வு பெற்றேன். ஆனால் புதுவாழ்வில் புதுக் கவலைகள் பிறந்தன; அதுதான் பொருள். அதன் முயற்சியில் ஆழ்ந்து நின்றேன். அவளோ கன்னியழகை மனையழகாக்கினாள்; அதன்பின் அது தாயழகாய் மலர்ந்தது. அம்மலர்ச்சி என் குடும்பம் முழுவதிலும் மணம் வீசுகின்றது.

(தன் குழந்தையை எடுத்துக் காட்டி) இதுதான் அம்மணத்தின் சின்னம். இட்டும் தொட்டும்



கவ்வியும் இன்னடிசில் இருந்து உண்ணும் காட்சிதான் எங்களில் ஏற்பட்ட மாற்றம். முன் அவளைக் காணும்போது ஒரு கிளர்ச்சியும் சலசலப்பும் ஏற்படும். இப்போது அவளைப் பார்த்தால் இன்ப துன்பம் கடந்த ஒரு நிறைவு பெறுகின்றேன்.

சிவகாமி:—என்ன! எங்கள் பழைய விருந்தினர்க்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டாமா? (கொடுக்கின்றாள் தலைவனிடம் திருக்குறளை.)

சிவசுந்:—ஆம்! நண்ப! அழகிய திருக்குறளொன்று பழைய சுவடியாயிருக்கின்றது. இதை நீ பெற்று ஆராய்ந்து கொள். எனக்கு இனி நேரமில்லை. (கொடுக்கின்றனர்.)

தோழன்:—ஏட்டை விரித்து,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்".

சிவசுந்:—ஆம்! அதற்கு என்ன ஐயம். நாம் இன்று மண்ணுலகத் தேவர்தான். (தலைவியைப் பார்த்து) கண்ணே, நீ மாலை வணக்கம் செய். நான் நண்பருடன் போய்வருகிறேன்.

(என்று கூறிப் போதல். தலைவியும் குங்குமம் இட்டு விளக்கேற்றி; பூ, நெல், நீர் முதலியவற்றை இட்டு வணங்குதல்)

[திரை வீழ்தல்]

"இல் இன்பம்" முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. காதல்

## இடம்:-பூஞ்சோலை.

**கூத்தர்கள்: தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி**

**காட்சி—1**

[தலைவன் [பூஞ்சோலையுள்ளே ஆழ்ந்த சிந்தையனாய்த் தனியே உலாவுதல், பாங்கன் அவ்விடம் வந்து பக்கலில் உலாவுதல். அவ்வாறு அவன் உலாவியதைத் தலைவன் உணராதவனாய் உலாவிக்கொண்டிருத்தல். பாங்கன் நாடியில் விரலை வைத்துக்கொண்டு சற்று உலாவுதல் செய்யாது நின்று].

பாங்கன்:—இஃது என்னை? இவ்வளவு சிந்தனை எதனால்? பக்கலில் நான் உலாவுதலைக்கூட உணர முடியவில்லையே?

(அண்மையிற் சென்று தலைவன் கைகளைப் பிடித்துக்கொண்டு) ஐய! என்ன? இவ்வளவு கடுமையாக உலா இருக்கிறது. கண்ணும் முகமும் ஒருமாதிரி இருக்கிறது? கழிந்த இரவில் துயில் கொள்ளவில்லைப்போலும்.

தலைவன்:—என் உயிர்ப் பாங்கனா? நன்று! நன்று!! வாருங்கள் ஓரிடத்தில் இருப்போம். (இருவரும் இருந்துகொண்டு) என்ன? என் கண்ணிலும் முகத்திலும்?

பாங்கன்:—இல்லை; முகம் சோர்வாக இருக்கின்றது. என்ன செய்தி என்றேன்.



தலைவன்:—அதுவா?

பாங்கன்:—நித்திரை இல்லைப்போலும்?

தலைவன்:—ஆமாம்; நித்திரையில்லைத்தான்.

பாங்கன்:—என்ன! கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ் தோய்ந்தனையோ?

தலைவன்:—தமிழா? ... என்ன? நகையாடுகின்றீர்களா?

பாங்கன்:—இதில் என்ன நகை? இதுபோதுள்ள பருவம் அதற்குத்தானே உரியது?

தலைவன்:—(சற்று சிந்தித்துவிட்டு) ஆமாம்; அதற்குத்தான் உரியது; நன்றாகக் கூறிவிட்டீர்? தமிழில் தோய்ந்துவிட்டேன்.

பாங்கன்;—தங்கள் நித்திரையைத் தடுத்த தமிழ் நூல் எது?

தலைவன்:—தமிழ் என்றால் தமிழ் நூலையா குறித்தீர்? தமிழ் என்றால் அகப்பொருள் என்று நக்கீரர் போன்ற புலவர்கள் கூறியிருக்கிறார்கள்?

பாங்கன்:—அப்படியா? நன்று! நன்று!! அப்படியானால் ... ....

தலைவன்:—என்ன அப்படியானால்?

பாங்கன்:—அகப்பொருள் என்பது அகத்தில் பட்ட பொருள் என்று வரும். அப்பொருள் யாது?

தலைவன்:—அப்பொருளா? அது நீர்.

பாங்கன்:—என்ன நானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:—(நகைத்துக்கொண்டு) நல்ல விளக்கம். நீர் என்றது இடப் பெயரன்று; பொருட் பெயர்? தண்ணீர்! தண்ணீர்!! இப்ப விளங்கிற்றோ?

பாங்கன்:—எனக்கு ஒன்றும் புரியவில்லையே? விரகு கலந்த விருந்து உரையாயிற்றே. (தலைவன் ஒன்றும் உரையாது சிந்தித்து இருத்தல்) என்ன சிந்தனை? கேட்ட வினாவுக்கு விடையில்லையே.

தலைவன்:—விடை ... ... ஆம் ... ... நடமாட்டம் ஒடுங்கும் நள்ளிரவு ... ...

பாங்கன்:—முன்னே "நீர்" என்றீர்? இப்போது "நள்ளிரவு" என்றீர்? முன்னுக்குப் பின் முரணை உரையாயிற்றே.

தலைவன்:—அந்தப் பேயும் உறங்கும் பேசரிய பேரிருளில்தான் நீர் அகப்பட்டது.

பாங்கன்:—"நீர்" எதற்கு?

தலைவன்:—தீயை அணைப்பதற்கு.

பாங்கன்:—தீயையா? தீ எங்கே பற்றியது?

தலைவன்:—தோழா! அகத்தில் பற்றியது.

பாங்கன்:—உமது வீட்டிலா?

தலைவன்:—அடே! வீட்டிலில்லை. நெஞ்சில்; நெஞ்சில் பற்றிய அத் தீ ... ... .... ... .... ....

பாங்கன்:—அத்தீ ... .... ... என்று இழுத்துக்கொண்டிருக்கிறாய்? நான் உன் உயிர்ப்பாங்கனல்லவா?



தலைவன்:—அறிந்த உண்மையைப் பொய்த்துப் பேசுதல் அறிஞர்க்கழகல்ல. தண்ணீர் போலும் அம்மென்சாயல் அத்தீயை அவித்தது.

பாங்கன்:—"மென்சாயல்" என்று நீங்கள் கூறுவது விருந்து ... ....(என்று யோசித்து விட்டு) ஓகோ! காதலா? நீங்கள் நீர் என்றது காதலையா? காதல் தீயை "மென்சாயல் தண்ணீர் அவித்தது— என்றது காதலியிடம் அமைந்த மென்மைத் தன்மையையா குறித்தீர்? முதற்கண் தமிழ் என்றதும், காதலைக் குறித்ததுபோலும். ஆன்றோர் குறிக்கும் குடிமைக்கு இது முறையில்லையே. காமமானது சிறிதும் நன்மையென உணரும் அறிவில்லாதவரிடத்தும் சென்று தங்குகின்ற பெரிய அறிவின்மையையுடையது? ஆதலின் அது வெறுக்கத் தக்கது.

தலைவன்:—என்ன பேச்சு? "கண்டவர் கண்ணைப் பறிக்கும் கன்னியோ! கடல்வாழ் தெய்வமோ? ... ...

பாங்கன்:-கடலா?

தலைவன்:-ஆமாம். கடல்தான்; அதன் தெய்வம் தான்.

பாங்கன்:—இதென்ன? கண்மயக்கமா? இது கடலல்ல? பூஞ்சோலை.

தலைவன்:—இந்த வண்டுகள் ஒலிக்கின்ற குளிர்ந்த சோலை; தொண்டி நகரத்துறையில் கடல்அலை எப்படிக் கொந்தளிக்கின்றதோ; அப்படிக் கொந்தளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கன்:-பூஞ்சோலையா? இது என்னடா?

தலைவன்:-கடல் மேலே எழுகின்றது?

பாங்கன்:-எழுகின்றது.

தலைவன்:-விழுகின்றது.

பாங்கன்:-விழுகின்றது.

தலைவன்:-என்ன? உனக்கும் காதலா?

பாங்கன்;-இல்லை! இல்லை!! எல்லாம் நீயே உரைத்துவிடு.

தலைவன்:-நானா சொல்வது? சரி; பின்பு மறுபடியும் அலை எழுகின்றது; ஓங்கி வீசுகின்றது; திரும்பவும் பின்வாங்குகின்றது; கீழே சென்று சிறிது உலாவுவதுபோல அசைகின்றது. ஒரு நொடியேனும் சும்மா இருக்கின்றதா? இல்லை.

பாங்கன்:-இல்லை ... ...

தலைவன்;-என்ன நீயும் இல்லை என்கின்றாய்? காதல் உள்ளம் கடல் போலில்லையா? அடங்கியிருந்த யானையின் மதம் தழையுணவை உண்ட காலத்தில் வெளிப்படுவதைப்போல, ஊழின் வலியால் காணற்குரியாரைக் காணப்பெறின் இயல்பாகவே உள்ளத்துள் அடங்கியிருந்த காதல் வெளிப்படும். காதற் காமம் அது மிக உயர்ந்தது. காரணம் கடந்த தூய மனநிலையது.

பாங்கன்;-ஏதோ! காமம், காமம் என்கின்றாய். காமம் என்பது புதிதாகத் தோன்றிய வருத்த



மன்று. நோயுமன்று, நுண்ணிதாகி மிகுதலும குறைதலும் இலது. நன்றாகச் சிந்தித்துப் பார்ப்பின் அது மேட்டுநிலத்தில் தழைத்த முதிராத இளைய புல்லை முதிய பசு நாவால் தடவி இன்புற்றாற்போல நினைக்குங் காலத்து அக்காமம் புதிய இன்பத்தை யுடையதாகும்.

தலைவன்:-அப்படிக்கூறு நண்ப! காதல் வெளிப்படும் தன்மை கூறினேன். நீ அதன் இன்பத்திறன் கூறினாய். நன்று! நன்று!! தோழ! அவள் தெய்வச்சாயல் உடையவள், மெல்லியள். அரும்பிய முலையள், சிவந்த வாயள், என்னைப் பிணித்தவளின் நோக்கு மதர் மதர்ப்பு உடையது. அவள் கண் பசுமைக்குக் கைபடாத வண்டு வாய்திறந்த, துறையிடத்து வளர்த்த நெய்தற்பூவும் நிகராகாதே. இந்தக் கண்ணழகியை முன்னின்று நீ ஒருமுறை கண்டுவிட்டாற் போதும். பின் என்னைக் கடிந்துரையாய்" சிறு பாம்புக்குட்டி காட்டானையை வருத்தியதுபோல அவள் மெல்லுறுப்புக்கள் என்னைத் தாக்கின. இடிக்கும். நண்பரே! நுமது காரியமாக என் காமத்தை நிறுத்தலைச் செய்தால் மிக நன்று; எனது விருப்பமும் அது. சூரியன் வெயிலெறிக்கும் வெம்மையுடைய பாறையிடத்தே கையில்லாத ஊமையன் தன் கண்ணினாலே பாதுகாக்க முயலுகின்ற உருகிய வெண்ணெய்போல இருக்கிறது என் காமம்.

பாங்கன்.-அப்படியா? நன்று. வா. நாங்கள் செல்வோம்.

### காட்சி — 2

[தலைவியும் தோழியும் சோலைக்குள் வருதல் அப்போது]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:- தலைவி! நாம் பிறை தொழுவோமா?

தலைவி:- பிறையைத் தொழும் நாள் வந்துவிட்டதா? இன்று என்ன புதிய வினா?

தோழி:- அகத்தின் அழகு முகத்தில் தெரியாதா?

தலைவி:- முகத்தில் என்ன?

தோழி:- நான் உன் உயிர்த்தோழியல்லவா? எனக்கு ஒன்றையும் ஒளியாது உரை.

தலைவி:- இதெல்லாம் உரைக்கும் பொருளா? உள்ளத்தால் உய்த்து உணர்ந்து கொள்வதன்றோ. காதல் உடலைப்பற்றியது அன்று? உயிரைப் பற்றியது. என் உடல் மெலிவைக் கண்டு என் காதலை எப்படிக்கண்டு பிடிக்கலாம்?

தோழி:- அப்படியானால்!

தலைவி:- என்ன? அப்படியானால்? கூறேன்.

தோழி- எளிமை, பெருமிதம், அறிவு, அடக்கம், அருள் ஆற்றல் உடைய ஒரு நம்பி எவ்வன்மையும் இல்லாத என்பால் வந்தான். நின்னை இன்றி வாழ்க்கை இல்லை என்றான். ஒரு பெண் பொருட்டுத் தன் ஆண் தகுதிகளையெல்லாம் கைவிட்டான். அவன் சொல் உண்மையுடைத்தோ? தனி ஒரு பெண்ணால் ஆராய்ந்து அதன் உண்மைகாணும் தகுதியுடையதோ?

தலைவி:- முடியாததொன்றுதான்; தோழி! அதோ நெருஞ்சிப் பூவைப் பார்? அது சூரியனையே நோக்கி நிற்கும். சூரியன் எந்த முகமாகச்



செல்கின்றதோ அந்த முகமாகவே அம்மலரும் திரும்பித் திரும்பி நிற்கும். அதுபோல என் தலைவன் சூரியனைப்போன்றவர், என்னுடை மூங்கில் போன்ற தோள்கள் அந்நெருஞ்சி மலர்களைப் போன்றவை.

தோழி:- ஆமாம். நல்ல எடுத்துக்காட்டாயிற்று. இந்த இயற்கை உனக்கு எவ்வளவு உதவி செய்திருக்கின்றது. தலைவியின் உள்ளம் தலைவனது திறத்தினால் ஈர்ப்புண்டு ஒருமையுறுதல் வேண்டும். பின் இணக்கமும இயக்கமும் இயற்கை ஆற்றலோடு நிகழும். தலைவன் உள்ளமும் அவ்வாறே.

(தோழி திரும்பிப்பார்த்தல்)

தலைவி;- என்ன திரும்பிப் பார்க்கின்றாய்?

தோழி:- நான் பக்கத்துப் பூஞ்சோலையில் பூப்பறிக்கின்றேன். நீயும் பூவைப்பறித்து மணந்து கொள்.

[தோழி போதல்]

தலைவி:- (தனக்குள்ளே) "பூவைப்பறித்து மணந்து கொள்" என்றாளே!

(என்று அங்குமிங்கும் பார்த்தல்)

தலைவன்:-(ஒரு பூங் கொம்பைப் பிடித்துப் பார்த்துக் கொண்டு) என்ன அழகான பூங்கொம்பு.

தலைவி:- என்ன, இந்தப் பூங்கொம்பா அழகு? நான் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன்:– (தலைவியின் கையைப்பற்றி) இல்லை! இல்லை!! சும்மா சொன்னேன். அம்ம! என்னுடைய தாயும் நின் தாயும் ஒருவர்க்கொருவர் எத்தகைய உறவின் முறையினராவர்? என் தந்தையும் நின் தந்தையும் எந்த முறையில் உறவினர்? இப்பொழுது பிரிவின்றியிருக்கும் யானும் நீயும் ஒருவரை ஒருவர் எவ்வாறு முன்பு அறிந்தோம்? இம்மூன்று இல்லையாகவும் இந்தச் செம்மண் நிலத்திலே மழை நீர் பெய்தால் அந்நீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைதல்போல நம் காதல் நெஞ்சுகள் தாமாகவே ஒன்றுபட்டன அன்றோ. திருமணம் உறுதி! (தலைவி நாணி நிற்றல்) அதோ! உன் உயிர்த்தோழி வருகின்றாள் வருகின்றேன். (தலைவன் போதல் தோழி வருதல்)

தோழி:– இவ்வளவு நேரமும் பறித்த பூக்கள் எங்கே?

தலைவி:– மாயமாய் மறைந்துவிட்டது. தோழி! உலகம் உடைந்து உருண்டாலும், தீதுபூண்டு திரிந்தாலும் காதல் அழியாதது. அதை அறியாதார் கூறும் அலர்மொழி அதனை என்ன செய்யவல்லது? மெய்க்காதலர் இதற்கெல்லாம் அஞ்சிவிடுவார் அல்லர். பெரியோன் முன் திருமணம் நடந்தேதீரும்.

தோழி:– அப்படியா? நன்று! நன்று!!

[மேளக்கச்சேரி இசைத்தட்டில் முழங்க
திரையை வீழ்த்தல்]

காதல் முற்றிற்று.

---

# 9. இன்பப்பிரிவு

களம்: தலைமகள் இல்லம்.

கூத்தர்கள்: தலைமகள், தலைவன், தோழி, பாணன்.

[தலைமகள் இல்லம் பூட்டப்பட்டிருத்தல்; பாணன் வருதல்; டக், டக், என்று கதவைத்தட்டுதல்]

பாணன்:– அம்மே! அம்மே!!

தலைவி:– யார் அது? இங்கே ஒருவருமில்லை (என்று கதவைத் திறத்தல்; பாணனைக் காணல்) ஓ! பாணரா! ஏன் வந்தீர்?

பாணன்:– என்ன ஒருவருமில்லை என்றீர்? நீர் இருக்கின்றீரே!

தலைவி:– நான்மட்டும் இல்லத்திலிருந்தால் காணுமா? மக்களிற் சிலர், முதலில் இனியவராக நடந்து நட்புச்செய்து மகிழ்ச்சி செய்கின்றனர்; பின்பு இனிமையில்லாதவராக மாறிவிடுகின்றனர். அதுமட்டுமன்று; குத்துதல் போன்ற கொடுஞ் செயல்களையுஞ் செய்ய முற்பட்டுவிடுகின்றனர்.

பாணன்:– இஃதெல்லாம் நும் கணவரை வைத்துக் கொண்டோ! உரைக்கின்றீர்! நானும் கூறட்டுமா? கண்ணுக்கு இனியவராய்த் தோற்றத்தில் அழகு மிகுந்து காணப்படுகின்றனர்; ஆனால் அவரை அணுகினால் அவர் செயல்களோ முள்ளைப்போலிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி:— ஆமாம்; நெருஞ்சிமுள், முதலில் அச்செடியில் கண்ணுக்கு இனிய புதுமலராகத் தோன்றும். பின்பு அம்மலரே காயாகிப் பழுத்தால் முள்ளாக மாறும். முதலில் கண்ணுக்கு இனிய புதுமலராக இருந்தபின்பு இங்ஙனம் இன்னலைத் தருகின்ற முள்ளாக மாறி நின்றால் அது பழமேயாயினும் அதனை யார் விரும்புவர்?

பாணன்:— ஆம்; உண்மைதான். என்றாலும்; நும் கணவர் வருகின்றார்.

தலைவி:— ஆ! நம் தலைவரா? பாணரே! ஆண் பெண் மக்கள் தம்முள் உயிருணர்வாகிய காதலால் நேசிக்காமல் அவா என்னும் காம நினைவால் அணுகுவராயின் முதலில் விருப்பாகவும், பின்னர் வெறுப்பாகவும் இருக்க நேரும். உடம்பு நன்றாயிருக்கும் வரையில், வேறு இடையூறுகள் இல்லாதிருக்கும் வரையில் விருப்பமாய் ஒழுகுபவர்கள். தலைவி வேப்பங்காய் தந்தாலும் தலைவனுக்கு அப்போது அது, இனிப்புக்கட்டியாய் இருக்கும். பின்பு சிலகாலங்கழித்து, உடம்பு தளர்ந்து அழகுமாறினாலும் வேறு இடையூறுகள் உண்டானாலும், அவர்களிடம் வெறுப்புத்தோன்றிவிடும். அப்போது தலைவி பறப்புமலையிலுள்ள குளிர்ந்த சுனையின் இன்சுவை நீரைத் தந்தாலும், தலைவன் அது குளிர்மையற்ற உவர்ப்பாய் இருக்கிறது என்பான்.

பாணன்:—அப்பொழுது? ...ஓ! காதல் நிலைமாறித் தோன்றமாட்டாது என்கின்றீர்களா?



தலைவி:— ஆமாம்; காதல் என்பது தெய்வத்தன்மை வாய்ந்தது. அது சமநிலைத்தன்மையது; அது, உயிரின் உணர்வு நிலையது; காமம் என்பது உயிருணர்வன்று; அது உயிரைப்பற்றிய அழுக்கின் தன்மையது.

பாணன்:— அப்படியா? நன்று நான் வருகின்றேன். தலைவர் வாயில் நேர்வார். மங்கலம்.

[பாணன் போதல்; தலைவி தனக்குள்ளே]

தலைவி:— நெஞ்சே! 'அவர் நெஞ்சு; நம்மை நினைக்கின்றதா? அவருக்கே ஆகி நிற்கின்றதே! நீ மட்டும் ஏனோ எனக்காக நிற்க இல்லை? அவர் நெஞ்சைக்கண்டு அதுபோல நீ செய்யலாகாதா? அவரிடம் குற்றம் கண்டும் அவரோடு பிணங்கா தொழிகின்றாய்; "இது என்ன? பெண்ணாகப் பிறந்தவருடைய மனம் இப்படிப் பட்டதா? பெண் மனமே! முன்னெல்லாம் பிணங்குவதாக எண்ணியிருக்கின்றாய். அவரைக் கண்டபொழுதே இன்பம் உண்ண எண்ணிவிடுகின்றாய். அவர் பிழையை நோக்கிறாயா? பேதை மனமே! கெட்டவர்க்கு நட்டார் உலகத்தில்லை. தளர்ந்த காலத்திலே கைவிடுவார் தாழ்ந்தவர். இன்னும் அவர் உறவே ஆயிற்று.. உன் உறவு என்ன! பெண் மனப் பெற்றி இப்படிப்பட்டதா? தாழ்வு!...... தாழ்வு!.

தோழி;— தலைவி! தாழ்வு என்றீர்; வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்கள் எதனையும் உயர்வு என்று

அல்லவா எண்ணி வாழவேண்டும். என்ன உன் கோலம்? தலையிற் பூ எங்கே? முகத்தில் மஞ்சள் காணோம்?

தலைவி:— பூவாவது; மஞ்சளாவது. இவைகளா? ஒரு கற்புடைய பெண்டிருக்க வேண்டிய பொருள்கள். "தலைவர் மலைகள் இடையிட்ட தொலைவான நாட்டாருமல்லர்; ஊரிலுள்ள மரங்களின் தலைகூடத் தெரியாத இடைப்பட்ட ஊராருமல்லர்; நேரே கண்ணிற்காணும்படி விரைந்து அணுகுதற்குரிய அருகாமையிலே அவர் உடன் இருந்தும்; முனிவரை அணுகி அஞ்சி ஒழுகும் மாணவனைப்போல உள்ளம் அகன்று அஞ்சி ஒழுகும் என் தலைவர்க்கு, முன்னொருகால் யான் அன்புறுதல் உடையேனாய் இருந்தேன்; இப்போது அந்நிலை கழிந்ததே".

தோழி:— இதுபோது உமது தலைவன் "முனிவனது தவநிலையத்தில் இருந்து அச்சத்தோடு பழகி வரும் மாணவனைப்போலவா சொல்கின்றீர்கள்.

தலைவி:— ஆம் தோழி! அவரை ... ... ....

தோழி:— என்ன அவரை என்கின்றாய்! துவரை என்று சொல்லேன்.

தலைவி:— போடி! உவகைக்கு உரிய உரையா இது? அன்பை ஒருவர் வற்புறுத்தி வருவிக்க முடியாதன்றோ! பெருந்தன்மையுள்ள விடத்தில் அது தானாகவே ஊற்றெடுத்துப் பொங்கிப் பொங்கிப் பெருகும் இயல்புடையது; மக்கள் அதற்கேற்றபடி நல்லொழுக்கத்தில் நடந்துகொள்ள வேண்



டும். இன்பப்பிரிவாம்! அவ்வாறு அவர் இருந்தால் அதற்கு யார்தாம் என்ன செய்யலாம்?

தோழி:— இன்பப்பிரிவா? அப்படியும் ஒன்று உண்டா? இது அவர் கூற்றா?

தலைவி:— ஆமாம்! "பிரியேன் ... பிரியிற் தரியேன்" என்றவர் உரைத்த கூற்று.

தோழி:— இப்படியும் ஓர் இன்பம் காண்கின்றாரா? அவர் ஆன்றோராயிற்றே?

தலைவி:—ஆமாம்! அந்த ஆன்றோர்தான் பிரிந்து போனார். என் நெஞ்சம் என்னிடமே இருந்தது. என்னை விட்டுப் பிரியவில்லை. எதன் பொருட்டு இங்கே இருந்தது தெரியுமா? அவர் கொடுமைகளை எனக்கு நினைவூட்டி ஆற்றாமையை விளைவிக்கவே! ஆம், வேறென்ன? காதலரைப் பிரிந்திருந்த நான், அவர் கொடுமைகளை இந்தப் பெண் மனத்தோடு நினைந்தேன். அவ்வளவை அறிந்து, இது என்னைத் தின்பதுபோலத் துன்பம் செய்தது. இன்றைக்கு அவர் வருகின்றார் என்றவுடன் அந்தக் கொடுமைகளை எண்ணி அவரோடு பிணங்குவதற்கா இருந்தது? இல்லை! இல்லை!! என்னைத் துன்பம் செய்யவே!

தோழி:—என்னதோழி! பெண்மனம்; தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாதது. ஒரு நினைவில் நில்லாதது. அவர் கொடுமைகளை அவரைக் காணாதபோது நினைந்து கண்ட போது மறக்கத் தவறுடையது. அந்தக் கொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகளை அவரைக் காணாதபோது மறந்து, கண்டபோது நினைந்து பிணங்கும் அறிவற்றது. என்பதுதானே!

தலைவி:—ஆம்! தோழி! இதில் உயிரினும் சிறந்த நாணம் அழிகின்றதல்லவா?

தோழி:—இஃதென்ன உன் விளக்கம். பெண்மனத்தின் பெருமையை மறந்து விட்டாயா?

தலைவி:—போடிபோ! பெருமையாவது? சிறுமையாவது? அறிவு வழிப்படாத மனமும் ஒரு மனமா? அதற்கு ஒரு பெருமை இருக்கின்றதா?

தோழி:—ஏன் இந்த உணர்வு? பெண்மனம் எப்போதும் உயிர் என்ற ஒன்றிலே காதல் உடையது. ஆண்மனம் உடல், உயிர் என்ற இரண்டிலும் காதல் உடையது. ஆகவே, அவர்கள் மனப்போக்கு ஒரொருகால் இரட்டையாக இயங்கும்? பெண்மனம் அப்படிப்பட்டதன்று; என்றும் ஒன்றாகவே ஒழுகும்.

தலைவி:—அப்படியானால் பரத்தையர் மனம்? பெண் மனமா?

தோழி:—இல்லை! பெண் உடலெடுத்த ஆண் உள்ளம் கொண்டவர்கள். அவர்கள் வாழ்வு ஆண்தன்மையான வாழ்வு; வாழ்க்கைத் துணையானவர் அல்லர்; வாழ்க்கையானவர். வாழ்க்கைத் துணையானவர்; பெண் மனத்தர். வாழ்க்கையானவர் ஆண்மனத்தர். பெண்மனத்தராகிய நாம், நம்மை எள்ளிச் சென்றாரென்று நாமும் அவரை எள்ளலாமா? அவருக்கு வாயில் மறுக்கலாமா? மறுத்தோமானால், "வழிபடாமை" என்னும் பழியும் நம்மைச் சேருமே. ஆகவே; உன்மனம் - உன் பெண்மனம் பெருமையுடையது. அம்மனம் வாழ்க! வளர்க!



தலைவி:—தோழி! ஆடவர் பெண்களை இவ்வளவு எளியவராக எண்ணி எள்ளி நிற்கவிடலாமா?

தோழி:—விடக்கூடாதுதான்; எனினும் ஒருவர் குற்றம் விளைவித்தால் நாம் குற்றம் விளைவிக்க வேண்டுமா? ஆகாதே; தலைவர் வரின் பிணங்குங்கள்! ஆனால், நெடுநேரம் பிணங்கியிருக்கக் கூடாது; கூட்டத்தை இன்பம் செய்வதற்குப் புலவியும் சிறிது வேண்டியதே! இந்த உலகஇன்பத்தின் உண்மையும் இதுவே. யாம் உண்ணும் உணவிற்கு வேண்டுமளவாக உப்பு இல்லாவிட்டால் அது இன்சுவை ஆக்குமா? அளவில் சிறிது விஞ்சி விட்டால் அப்பண்டம் கசப்பேறிக் கெட்டுவிடும். அதுபோல பெண்மனம் கொள்ளும் புலவியும் ஆண்மனத்தளவில் சிறிது மிகவிட்டால் கூட்டமானது இன்பம் இழந்துவிடும்; பின் புலவியின் பயன் என்ன? புலவி இன்பவுணர்வுக்காக — கனிவுக்காக அமையவேண்டியதே தவிர தேய்வுக்காக — காய்வுக்காக அமையக்கூடாதன்றோ.

[தலைவன் தலைவாசலில் தலைகாட்டல், தோழி எழுந்து போதல், தலைவன் தோழியைப் பார்த்து].

தலைவன்:—கனிவு - காய்வு என்று உரைத்துக் கேட்டது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி:—அதுவா? எல்லாம் உங்கள் வாழ்வாலே தான். ஏ! கள்வனே! உங்கள் மார்பு எங்களுக்குக் கள்ளே காணும், குடியர் கள்ளை வெறுப்பாரா? விடுவாரா? கள்ளு தன்னை உண்டுகளித்தார்க்கு என்ன செய்கிறது? இளிவரத்தக்க இன்னாதவற்றையே செய்யும்! நாணம் குறைக்கும்; நிறை கெடுக்கும்; ஒழுக்கம் அழிக்கும்; உணர்வு ஒழிக்கும். இவை எல்லாவற்றையும் செய்தாலும் குடியர் கள்ளை வேண்டாம் என்று விடுவாரா? மென்மேலும் கள்ளை அருந்தவே முயல்வர்; அதுபோல அல்லவோ உங்கள் மார்பு எங்களுக்கு? எவ்வளவு கொடுமை செய்தாலும் அதை விடாமல் விரும்புகின்றோம்.

[இவ்வாறு தோழி சொல்லத் தலைவன் களித்து]

தலைவன்:—வாழ்க! பெண்மை!! வெல்க! இல்லறம்!! (என்று சொல்லிக்கொண்டு தலைமகளிடம் செல்லல். தோழியும் தன் இல்லம்போதல்).

தலைவி:—(தனக்குள்ளே) ஆ! இங்கே வந்துவிட்டீர்களே! ஐயோ! பாவம். அங்கே உங்கள் காதலிமார் உங்களைக் காணாமல் கலங்கியிருப்பர்! போங்கள்! போங்கள்!! எங்களை ஊடல் உணர்த்தல் வேண்டாம்! நீங்கள் வேறிடத்தே போயிருந்தாலும் எங்கள் புதல்வரைக் கண்டு நாங்கள் ஆறியிருப்போம்! உங்களோடு ஊடுதற்கு உரியமோ நாங்கள்? அவர்களே அதற்கு உரியவர்கள். அவர்கள் ஊடலை உணர்த்தாவிட்டால் முன்னமே நீரைப் பெறாமல் வாடிய



கொடியை அடியிலே வாள்கொண்டு அறுப்பதே ஆகும்! போங்கள் இங்கே வேண்டாம்!

தலைவன்:—என்ன உரை! என்ன உவமானம் (என்று தலைவியை அணுகல்).

தலைவி:—உரையின் உயர்வும்; உவமானத்தின் உட்பொருளும் ஊர்ப் பெண்டிர்களிடமே உயர்ந்து உவக்கும்! ஒருநெறி வாழும் ஒரு மணவாழ்வு ஒழித்து இணைப்பு மணவாழ்வா? வேண்டியது.

தலைவன்:—(தனக்குள்ளே) அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஓ! இவள் என் காதலி அல்ல! முன் ஒருநாள் புல்லல் விருப்பினால் சென்றேன். சென்ற என்னோடு அவள் கண் சிவந்தாள். ஆயினும் ஊடி ஒரு சொல்லும் உரைத்திலள். இன்றோ ... (உலவிக்கொண்டு) காமத்தின் மென்மையை எல்லாரும் அறிவாரா? அது, மலரைக்காட்டிலும் மெல்லியதாயிற்றே!

தலைவி:—யாம் அறிவோம்; (என்று கறுத்துக் கூறல்).

தலைவன்:—ஐயே! எனக்கு உரித்தாகப் பெற்ற நெஞ்சம் எனக்குத் துணையாகின்றதா? இவளை அன்பில்லாதவள் என்று விட்டுவிடாமல் கூட்டத்திற்கே விரைகின்தே! என்ன செய்வேன்?

தலைவி:—(தலைவனின் கையைப் பிடித்து) சரி! வாருங்கள்! சிற்றுண்டி உண்ணலாம்.

தலைவன்:—(சிற்றுண்டியை உண்டுகொண்டு கூறல்) கண்ணே! முதிர்ந்த காலமாகிய துனியும் வேண்டும்! இளைய காலமாகிய புலவியும் வேண்டும்! இந்த இரண்டும் உலக இன்பில் உண்டு. இவ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரண்டும் இல்லையானால் காதலானது பழுத்த கனியைப் போல உண்ணுவார்க்கு மிகவும் இனிமையாகி விடும். அல்லது பழுக்காத கருங் காயைப்போல இனிமையே இராது. ஆகையால் துனியும் புலவியும் காதலருக்கு மிகவும் வேண்டும். (என்று தலைவன் தும்மல் வருதல் தலைவன் அதை அடக்குதல்)

தலைவி:—என்ன? தும்மல் வருகின்றதா? நல்லாய்த் தும்முங்கள்! உங்கள் காதலிமார் யாவரோ நினைத்தார் போலும். இது தரும சங்கடமாயிற்றே.

தலைவன்:— சரி, என் பிழை ஒப்புக்கொள்ளத் தானே விரும்புகின்றாய். சரி, வணக்கம்!

தலைவி:—ஓகோ! அங்கே விடுகின்ற நாடகம் இங்கேயும் விடுகின்றீர்களா? அவர்கள் பிணங்கினால் அவர்களிடமும் பணிவும் கொள்வீர்களா? நாம் கற்புடைய மகளிர்; மனையில் இருந்து மணாளரை வழிபடுபவர். மக்களை வளர்ப்பவர். விருந்து ஊட்டுபவர். ஊடலும் துனியும் கொள்பவரோ?

தலைவன்:—அப்படியா? நன்று! நன்று!! எல்லாம் நன்று. ஊடலும், துனியும் கற்பு வாழ்வுக்கு வேண்டியதில்லை என்பது உங்கள் கருத்துப் போலும்.

தலைவி:—ஒருத்தியுடன் வாழும் ஒருவன் வாழ்வுக்குத் தேவையில்லை.



தலைவன்:—அப்படியா? நன்று! நன்று! அப்படியான அன்புடைமை வாழ்வைக் காண்போம்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு".

[என்று இசையுடன் பாடத் திரை விழ்தல்]

இன்பப்பிரிவு முற்றிற்று.

———

# 10. உணர்வும் உறவும்

**களம்:** *வீட்டின் ஒருபக்கம்.*

**கூத்தர்கள்:** நீலக்கண்ணி, அவளின் தாய், நீலக்கண்ணியின் மகள் செல்வி, அயல் வீட்டுச் சிறுவர் சிறுமியர்; நீலக்கண்ணியின் கணவன், செல்வியின் கணவன்.

[திரை திறக்குங்கால் நீலக்கண்ணி சிற்றில் இழைத்துக் கொண்டிருத்தல். அவ்வேளை சிறுவர்சிறுமியர்வருதல்].

சிறுவர்சிறுமியர்:—என்ன நீலம் விளையாடுகின்றாயா?

நீலக்கண்ணி:—நீங்களும் வாருங்கள் விளையாடுவோம். மாயா! வருகின்றாயா நாங்கள் கீச்சுமாச்சு விளையாடுவோம்.

ஒருசிறுவன்;—நான் வரட்டுமா?

நீலக்கண்ணி:—நீ வரவேண்டாம்; மாயா மட்டும் வரட்டும். நாங்கள் விளையாடுவோம்.

ஒருசிறுவன்:—நான் வரக்கூடாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக்கண்ணி:—நீ பொல்லாத வம்பன்; சரியாக விளையாட விடமாட்டாய்.

ஒருசிறுவன்:—இல்லை; நானும் வரத்தான் போகின்றேன்.

நீலக்கண்ணி:—மாயா! புன்னைக்கொட்டை எடுத்தாயா?

ஒருசிறுவன்:—நான் எடுத்துக்கொண்டு வருகின்றேன்.

நீலக்கண்ணி:—நீங்கள் எடுக்க வேண்டாம்; நான் எடுத்துக்கொண்டு வருகின்றேன் (என்று எடுத்தல). மாயா! நீ மண்ணைக் குவித்துவிடுவாய்.

ஒருசிறுவன்:—நீங்கள் குவிக்கும் மண்ணை நான் அழித்து விடுவேன்.

நீலக்கண்ணி:—நீ அழி பார்ப்போம்.

ஒரு சிறுவன்:—என்னடி! மிடுக்காய்ப் பேசுகின்றாய் (என்று அவளின் தலைப் பின்னலைத் தட்டிவிடுதல)

நீலக்கண்ணி:—அம்மா! என் தலைப் பின்னலைத் தட்டிக்கொடுக்கின்றான்.

நீல-கண்-தாய்:—அடே! யார் பிள்ளையின் தலையைக் குலைத்தது.

நீலக்கண்ணி:—இவன்தான் அம்மா (என்று அவனைக் காட்டல்).

நீல-கண்-தாய்:—அடே! இனிமேல் பிள்ளையைத்தொட்டால் விளையாட விடமாட்டேன்; கவனம்; தெரியுமா? (என்று தாய் போதல்)

நீலக்கண்ணி:—வா! மாயா! நாங்கள் விளையாடுவோம்.



ஒரு சிறுவன்:—நான் விளையாட்டைக் குழப்பம் செய்யவில்லை. பக்கத்திலிருந்து பார்க்கின்றேன்.

[நீலம் புன்னைக்கொட்டையை எடுத்தல்; மாயா மணலைக் குவித்தல். இருவரும் "கீச்சு மாய்ச்சு தம்பலம், கீயோ மாயோ தம்பலம்" என்று சொல்லி விளையாடல்].

நீல-தாய்:—அடி! நீலக்கண்ணி, மணி ஒன்றாயிற்று; சாப்பிட வேண்டாமா? வா; கண்ணு.

நீலக்கண்ணி:—சற்று பொறுத்துக்கொள்; நான் வருகின்றேன்.

நீல-தாய்:—(சிறிய கோபத்துடன்) மாயா! சாப்பிட்டு வா. எல்லோரும் போய்வாருங்கள். நீலம் சாப்பிட்டு வரும்.

[சிறுவர் சிறுமியர் போதல். தாய் வெள்ளிக் கிண்ணத்தில் சோற்றைப்போட்டுத் தீற்றுதல். நீலக்கண்ணி ஓடிஆடிக்கொண்டு சாப்பிடல். இந்த வேளையில் நீலம் வாய்க்குள் சோற்றை வைத்துக்கொண்டு முற்றத்தில் ஒரு மூலையில் நின்ற புன்னையைக் கண்டு)

நீலக்கண்ணி:—அம்மா! அம்மா!! இங்கேவா; இது என்ன?

நீலதாய்:—இதுவா? புன்னைச்செடி; அது இருக்கட்டும. வாயைத்திற (என்று சோற்றைத் தீற்றுதல்).

நீலக்கண்ணி:—இது எப்படி இங்கு முளைத்தது?

நீல-தாய்:—இதுவா? நீ முன்னே "கீச்சு மாய்ச்சுத் தம்பலம்" விளையாடுகையில் விட்ட புன்னைக்கொட்டை கிடந்து முளைத்திருக்கும்.

நீலக்கண்ணி:—அப்படியா? அம்மா! இதற்குப் பசியாதா? சோறு தின்னமாட்டாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல-தாய்:—அதற்கும் பசி உண்டு, தாகம் உண்டு; நீர் ஊற்றினல் போதும்.

நீலக்கண்ணி:—அப்படியா? (என்று வீட்டினுட் சென்று பாலை எடுத்துக்கொண்டு வந்து செடியில் ஊற்றல்)

நீல-தாய்:—அடி! பேய்ச்சி! பாலையா ஊற்றினுய். (என்று தாய் சிரித்தல்) வா, முகத்தைக்கழுவ.

நீலக்கணணி:—அம்மா! புன்னைக்கு நெய்தருகிறுயோ?

நீல-தாய்:—இந்த ஒருவாய் சோற்றையும் பிடி; நான் நெய் தருகின்றேன்.

நீலக்கண்ணி:—சரி, அம்மா (என்று வாய்திறத்தல்; தாய் சோறு தீற்றிக் கூட்டிக்கொண்டு போதல்; இதற்கிடையில் முன்னைய மாயா முதலிய சிறுவர் சிறுமிகள் வந்து)

மாயா:—நீலம்! நீலம்! இன்னும் சாப்பிடவில்லையா?

நீலக்கண்ணி:—(நெய்ப் போத்தலுடன் வந்து) நான் எப்போவோ சாப்பிட்டு விட்டேன்; நீங்கள் இப்போதுதானே வருகின்றீர்கள்?

மாயா:—நீலம்! என்ன போத்திலுக்குள்?

நீலக்கண்ணி:—இதுவா? நெய்; நான் உனக்குத் தரமாட்டேன் அதோ! அந்தப் புன்னைக்குப் பசிக்கும் அப்போது நான் கொடுப்பேன்.

மாயா:—புன்னைக்கு எப்போ பசிக்கும்?

நீலக்கணணி:—புன்னைக்கா? எனக்குப்பசிக்கும்போது.

மாயா:—அப்ப! நீயும் அதுவும் ஒன்ரு? வா; விளையாடுவோம் (ஏதாவது ஒரு விளையாட்டு விளையாட; புன்னைக்கும் இடையிற் போய் நெய் வார்த்தல் இவ்வேளையில் நீலத்தின் தாய் வருதல்)



நீல-தாய்:—அடி; நீலம்! நெய்ப் போத்தில் எங்கே? இங்கே கொண்டுவந்து விட்டாயா?

நீலக்கண்ணி:—ஆம் அம்மா; புன்னைக்கும் பசித்தது சிறிது வார்த்தும் விட்டேன்.

நீல-தாய்:—என்ன நீலம்! வளர்ந்து விட்டாய். உனக்கு இன்னும் புத்தி வரவில்லையா? நாளைக்கு உனக்குக் கலியாணம் நடக்கப் போகிறது. இன்னுமா? இந்தப்புத்தி. வீட்டுக்குப்போ; (சிறுமிகளைப் பார்த்து) நீங்களும் வீட்டுக்குப் போங்கள்.

நீலக்கண்ணி:—ஏன்? அம்மா; நான் நெய்ச்சோறு, பாற்சோறு சாப்பிடுவதுபோல அப்புன்னையும் சாப்பிடக் கூடாதா? அதுவும் என்னைப் போன்ற ஓர் உயிர் அன்றோ!

நீல-தாய்:—ஓமடி போடி! எல்லாம் உனக்கு விளையாட்டு.

[என்று வீட்டுக்குள் போதல். மேடையில் ஒருவருமில்லா திருத்தல் வேண்டும். மேளக்கச்சேரி இசைத்தட்டைப் போடுத் திருமணம் நடந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின் என்று சபையாருக்குக் காலக்கழிவைக் காட்டல்],

## காட்சி — 2.

[நீலக்கண்ணி ஒரு குழந்தையுடன் வீட்டிலிருத்தல், அக் குழந்தை வீட்டிலுள்ள பொருட்களை உருட்டல், எறிதல், உடைத்தல், ஓடியாடல் இவ்வாறு தாய்க்கு இடையூறுகளைத் செய்தல். தாய் சற்று சினந்து தன் குழந்தை (செல்வி) யைப் பார்த்து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக்கண்ணி:—செல்வி! சும்மா இருக்கமாட்டாயா? (குழந்தையின் கையில் வைத்திருக்கும் பொருளைப் பறித்து) அடித்துப் போடுவேன்.

குழந்தை:—அப்படியா? அப்பா சொல்வேன். (குழந்தையின் தகப்பன் அவ்வேளை வருதல்) அப்பா, அம்மா அடித்தாள்.

குழந்—தந்தை:—அம்மா! அடித்தாளா; என்ன நீலம்! ஏன் குழந்தைக்கு அடித்தாய்? நீயும் சிறுமியாய் இருக்கும்போது செய்த குழப்பங்கள் மறந்து விட்டாயா? பாலை ஊற்றுவாய்? நெய்ப் போத்தலை எடுப்பாய்! நான் விளையாடவந்தால் என்னுடன் நெருங்குவாய் ... இப்படி எத்தனை.

நீலக்கண்ணி:—இன்னும் சொல்லுங்கள் .... இப்படியா பிள்ளையை வளர்க்கப் போகின்றீர்கள். ஆற்றங் கரைக்குப் போகவில்லையா?

குழந்—தந்தை;—சரி! சரி!! நான் போய் வரட்டுமா? குழந்தையை மட்டும் அழ வைக்காதே, (என்று சொல்லிப் போதல்).

நீலக்கண்ணி:—(புன்னையைக் காட்டி) அதோ! உன் அக்காவை, அது ஓடாது, ஆடாது. வைத்த இடத்திலேயே இருக்கிறது; நீயும் அதுபோல ஓடாது, ஆடாது நான் இருக்கச் சொன்ன இடத்தில் இருத்தல் வேண்டும். தெரியுமா?

குழந்தை;—இது என் அக்காவா? (புன்னையைத் தழுவி) அக்காள்! அக்காள்!! என்னுடன் விளையாட வருகின்றாயா?



[முன்வராத-கோலம்மாறிய சிறுமிகள் வருதல் வேண்டும். அவர்களுடன் விளையாட வேண்டும். குழந்தை மற்றச் சிறுமிகளைப் பார்த்து]

பாருங்கள்! இது என் அக்கா; தெரியுமா?

ஒரு சிறுமி:—யார் உனக்குச் சொன்னது.

குழந்தை:—எங்களம்மா எனக்குச் சொன்னது.

இன்—சிறுமி:—உங்களம்மா?

மற்—சிறுமி:—பாருங்கடி! புன்னைச் செடியை அக்கா என்று சொன்னாளே! இச் செடிக்கும் உனக்கும் என்ன உறவு? எப்படி? அக்கா முறை வரும்?

[தகப்பன் வருதல்; குழந்தை ஓடிப்போய்]

குழந்தை:—அப்பா! அப்பா!! அதோபார்; என் அக்காவை.

குழந்—தகப்பன்:—எல்லாரும் அக்காள்தான்; அவர்களுடன் விளையாடுவதானே.

குழந்தை:—இவர்களுடன் நானும் அண்டை வீட்டுக்குப் போகட்டுமா?

குழந்—தகப்பன்;—அம்மாவைத் தொந்தரவு செய்யாது இவர்களுடன் போய் விளையாடு.

[எல்லோரும் போதல். தகப்பன் ஒரு நூலை எடுத்து வாசித்துக் கொண்டிருத்தல்! நீலக்கண்ணி ஒரு குவளைக்குள் நீர்கொண்டு வைத்துவிட்டு.]

நீலக்கண்ணி:— தாகம் தணியுங்கள்.

[தகப்பன் தாகம்தணிய நீரைக் குடித்தல்]

என்ன, குழந்தைக்குக் கலியாணம் ஆக வேண்டாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்–தகப்பன்:– ஆமாம்; ஆகத்தான் வேண்டும்? அன்று வந்த பெரியோர்களுக்குச் சம்மதம் கொடுப்போமா?

நீலக்கண்ணி:– சரி! கொடுங்கள்; அவள் வளர்ந்து பக்குவப் பட்டுவிட்டாள் அன்றோ. (அப்போது ஒரு வளர்ந்த பெண் அவ்வீட்டில் உலாவுதல் வேண்டும்) இனித் தடையில்லை.

குழந்–தகப்பன்:– சரி; அம் முயற்சியில் ஈடுபடுகின்றேன் அப்பெரியோர் மூலம் திருமணம் காண்போம்.

[என்று சொல்லித் தகப்பன் போதல்; தாயும் போதல், மேளக்கச்சேரி இசைத்தட்டைப் போடுதல். மணக் கோலத்துடன் ஒரு ஆணும் பெண்ணும் மேடைக்குள் வருதல், புன்னைக்கு அருகில் நிற்றல்]

## காட்சி — 3

செல்வி–கணவன்:– நீ என் உயிர்படு மெய்யள் அல்லவா; புதிய ஆடையால் முழுதும் போர்த்த நின் உடல் புழுக்கமடையாதா? காற்று சற்று வீசட்டும்; என்று ஆர்வ நெஞ்சத்தால் ஆடையை அப்புறப்படுத்தினேன். உறையைக் கிழித்த வாள்போல் உன் மேனி ஒளிறிற்று. கூந்தல் ஆடையால் அற்றம் மறைத்து நாணி ஒசிந்தாய்" நாணம்?

செல்வி:– (பூவைப் பறித்துக்கொண்டு நாணுதல்) நீங்கள் ... ... ... ... இப்போதும் ... ... ...

செல்வி–கணவன்:– பூப்பறிப்பதற்கு உதவி செய்யவில்லையா? இன்னுயிர் விரும்பும் கிழமை இதுவா? என்பதோ.



செல்வி:– (புன்னையை நன்றாகப் பார்த்தல், கண்களைக் கைகளாற் பொத்துதல்) வாருங்கள்; 'இதில் நில்லாது வாருங்கள்!'.

செல்வி–கணவன்:– என்ன? திடீர் மாற்றம், புன்னையில் என்ன புதுமை?

செல்வி:– ஒன்றும் உரையாதீர்!

செல்வி–கணவன்:–ஏன்! இவ்விடம் தனிமையானதே

செல்வி:– அதோ: என் அக்காவை?

செல்வி–கணவன்:– அக்காவா? உனக்கு அக்காள் இல்லையே? உன் தந்தையருக்கு நீ ஒரு குழந்தையல்லவா?

செல்வி:– என்ன? மூத்தோர் முன் இங்ஙனம் நகையாடல் நாகரிகமா? தமிழ்ப்பண்பா?

செல்வி–கணவன்:– என்ன ஆச்சரியம்! ஓரறிவாகிய புன்னைச் செடி எப்படி ஆறறிவு படைத்த உனக்கு அக்காவாயிற்று? அதை ஒருகால் சொல்லுவாய்.

செல்வி:–ஆம்; இது என் அக்காள். அறிவுஎன்ன? உணர்வு அல்லவா உறவை வளர்ப்பது. இச் செடியை என் அம்மா சிறுமியாய் இருக்கும் காலத்தில் தோழிமாரோடு விளையாடிக்கொண்டிருந்தாள். ஒரு புன்னை விதையை விளையாட்டாக அழுத்தியவள் பின்பு அதனை மறந்து விட்டாள். நாட்கள் சில ஆயின. அந்த விதை முளைவிட்டு வளர்ந்தது. அறிந்த அந்தப் பெண், மிக்க அன்புகொண்டு நாளும் அதனை நெய் யோடுகூடிய இனிய பாலை ஊற்றிக் கருத்தாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து வந்தாள். நான் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கையில் பல குறும்புத்தனங்கள் செய்தேன்.

செல்–கணவன்;–அந்த குழந்தைப் பழக்கம் இப்பவும் என்னுடன் காட்டுகின்றாய் ... என்ன?

செல்வி:–இல்லை; பாருங்கள்; பெரியோர்கள் முன் இன்ப உரைகளை உரைத்தல் நன்றல்ல என்றேன். இதில் என்ன குறும்பு?

செல்–கணவன்:–அப்படியா? நன்று! நன்று!! மிகுதியைச் சொல்.

செல்வி:–அதோ! பார் உன் தங்கையை? ஓடாது ஆடாது. ஒரு குழப்பமும் செய்யாது; அது போல நீயும் சிறந்திருக்க வேண்டும் என்றாள். ஆகவே என் அம்மாவுக்கு இப்புன்னை ஒரு சிறந்த குழந்தையாயிற்றே, எனக்கு முன்னே பிறந்த குழந்தை எனக்குத் தங்கையல்லவா? தங்கையர் முன் தணியாக் காதலுரைகள் மொழியலாமா? இதனால் "அம்ம, நாணுதும் நும்மொடு நகையே" என்று உரைத்தேன்.

செல்–கணவன்;–அப்படியா? உங்கள் உணர்வு இப்படியா உறவை ஆக்கியது, நேய உணர்ச்சி இப்படியா? நிறைந்தது. தமிழ்மக்களின் ஆருயிர் நேயத்திற்கும் ஓர் எல்லையுண்டோ?

**திரைவீழ்த்தல்.**

உணர்வும் உறவும் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதன் ஆசிரியர்:

இந்நாடக நூலின் ஆசிரியரான புலவர் திரு. நா. சிவ பாதசுந்தரன், யாழ்ப்பாணத்திலுள்ள தொல்புரம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் சிறிதுகாலம் தமிழ் கற்று அவர் ஊட்டிய ஊக்கத்திலும் உற்சாகத்திலும் இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று தமிழை முறையாகப் பயின்று புலவர் தேர்வில் சித்திபெற்றார். இப்பொழுது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிகின்றார். இவர் காந்தியக் கொள்கைகளில் ஊறியவர். தன் சொந்த வாழ்க்கையிலும் இக்கொள்கைகளைப் பின்பற்ற முயல்பவர். காந்திய நோக்கு, மொழியுணர்ச்சி, சர்வோதயம் ... ... ... முதலிய நூல்களை இவர் எழுதியுள்ளார். காந்திய நோக்கு, சர்வோதயம் என்பன, இந்தியாவிலுள்ள அறிஞர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. சமீபத்தில் இந்திய சாகித்திய அகாதெமியினர் வெளியிட்ட 'யார்? யார்?' என்ற எழுத்தாளர் பற்றிய தொகுப்பு நூலில், இவருடைய பெயரும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் தன்னடக்கத்துடன் அமைதியாகவிருந்து தமிழ்ப்பணியும் சமூகப் பணியும் புரிந்து வருகின்றார்.

"மறக்குடி மாண்பு" என்ற இந்நாடக நூலில் படித்து ரசிக்கவும் நடித்து மகிழவுமேற்ற இலக்கிய நாடகங்கள் உள்ளன. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு வீர உணர்ச்சி, ஒழுக்கம் முதலியவை இக்கால மக்களின் உள்ளங்களில் பதியக்கூடிய வகையில் திறமையுடனும் கலைப் பண்புடனும் ஆசிரியர் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org